சக்தி

2562 32

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1948
MADRAS

மனித இதயம் .... மஞ்சேரி எஸ். ஈச்வரன்

நந்திவர்மன் .... தி. நா. சுப்பிரமணியன்

பாலஸ்தீனப் பிரச்னை .... கால்க்கோலன்

அரிஸ்டாட்டிலின் தர்க்கவாதம் .... வி. சக்கரை செட்டியார்

சிரிக்கவில்லை .... த. அழகிரிசாமி

சர்வதாரி அணா 8 ஆனி

சக்தி காரியாலயம்
சென்னை 14.

பொருள் அடக்கம்

மலர் 15 : இதழ் 3

நைஜாம் விவகாரம் ...	தலையங்கம்	1
காலச் சுழல் ...	குறிப்புகள்	4
கலை ...	மகாத்மா காந்தி	6
மனித இதயம் ...	மஞ்சேரி எஸ். ஈச்வரன்	8
"இலக்கிய விமர்சனம்" ...	கு. அ.	21
சிரிக்கவில்லை ...	கு. அழகிரிசாமி	25
அனீமியா ...	எம். ஐ. நீல்	36
பாலஸ்தீனப் பிரச்னை ...	காலக்கோலன்	37
படங்கள் ...		41—48
சரவண பெளிகுளம் ...	கோ. நீ. லக்ஷ்மி நாராயணன்	49
குட்டிக் கதைகள் ...	வில்லியம் சரோயன்	54
ராய்ட்டரின் வரலாறு ...	ஜி. செல்லையா	57
கால வித்தியாசம் ...	ராபர்ட் ஜாக்ஸ்	64
கலம்பகம் கொண்ட நந்திவர்மன் ...	தி. நா. சுப்பிரமணியன்	67
அரிஸ்டாட்டிலின் தர்க்கவாதம் ...	வி. சக்கரை செட்டியார்	73
புத்தக விற்பனை ! ...	ரகுநாதன்	79
சாக்கடையிலிருந்து (தொடர்கதை) ...	பி. கேசவ தேவ்	81
புத்தக உலகம் ...	கு. அ., தொ. மு. சி.	86

அட்டைப் படம்: கே. முத்து ராமலிங்கம்

JL
M2(1,N36),5
N48.15.3

*

சர்வதாரி ஆனி

LUX
LUX TOILET SOAP
பி. எஸ். ஸரோஜா
தனது மிருதுவான அழகிய மேனியை லக்ஸ் டாய்லட் சோபினால் காப்பாற்றிக்கொள்கிறார்.
லக்ஸ் டாய்லட் சோப்
LTS. 181-111 TM
★ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-107M

இந்திய மக்களும், அவர்களுடைய ஆடைகளும்.

கோலி..... அவர்களில் ஆண்கள் சாதாரணமாக அணிவது அகலமான ஒரு கோமணம். விசேஷதினங்களில் அதனேடு பல வர்ணங்களடங்கிய தளர்ந்த ஒரு சொக்காய் அணிவார்கள். கோலி ப்பெண்களுக்கு ஆடை ஆபரணங்களால் சிங்காரம் செய்து கொள்வதில் மிகப் பிரியம். ஒன்பது கஜ நீளமுள்ள நூல் புடவையை மிக அலங்காரமாக அணிந்து கொள்கிருர்கள். புடவையை எடுத்துக்காட்டும் வர்ணங்களில் ரவிக்கையைப்போட்டுக் கொள்வார்கள். கண்ணைக்கவரும் வர்ணங்களில் அவர்களுக்கு ஒரு தனிப், பிரியம்.

டாடா வகுப்பை ச்சேர்ந்த நெசவுசாலைகள் இந்திய மக்களின் துணித் தேவைகளுக்காகபாடுபட்டு உழைக்கின்றன.

டாடா வகுப்பு நெசவுசாலை களினல் பிரசுரிக்கப்பட்டது.

தி டாடா மில்ஸ் லிட்,. தி. ஸ்வதேசி மில்ஸ் லிட்.

தி அஹமதாபாத் அட்வான்ஸ் மில்ஸ் லிட்,.

தி ஜனரல் இன்டியா ஸ்பின்னிங் வீவிங் மானுபாக்டரிங் கம்பெனி லிமிடெட்.

ADARTS TI. 669 Tamil

நீங்கள் நேரில் வந்து பரீக்ஷை செய்யுங்கள்



முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானால் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானால் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.

சர்வதாரி
மலர் 15

சக்தி

ஆனி
இதழ் 3

மெய்ப் பொருள் காண்பது அறிவு

நைஜாம் விவகாரம்

டில்லியில் நைஜாம் பிரதமர் ஸ்ரீ லைக் அலியும், நைஜாமின் சட்ட ஆலோசகர் ஸ்ரீமாங்டனும் இந்திய யூனியனுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒப்புக்கொண்ட ஒரு முடிவை நைஜாம் மன்னர் ஏற்க மறுத்துவிட்டார். ஒப்புக்கொண்ட அந்த முடிவின் சாராம்சம் இது தான்:

ஹைதராபாத் சமஸ்தானம் இந்திய யூனியனுடன் சேரவேண்டும்.

இந்திய யூனியனுடன் சேரவேண்டுமா, கூடாதா என்பதைத் தீர்மானிக்க ஒரு சுயேச்சையான மத்தியஸ்தக் கமிட்டியின் மேற்பார்வையின் கீழ் பொதுஜன வாக்கெடுப்பு நடைபெறவேண்டும். பொதுஜன விருப்பப்படி இரண்டு சர்க்கார்களும் நடந்து கொள்ள வேண்டும்.

ஹைதராபாத் மக்களுக்குப் பொறுப்பாட்சி வழங்கவேண்டும். அதை முன்னிட்டு 1949-ம் வருஷத் தொடக்கத்தில் ஒரு அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்த வேண்டும்.

பொதுஜன வாக்கெடுப்பு நடைபெறுவதற்கும், அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்துவதற்கும் முன்பாக ஹைதராபாத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே ஓர் இடைக்கால உறவை ஏற்படுத்த ஹைதராபாத் சர்க்காரை மாற்றியமைக்க வேண்டும்.

ஹைதராபாத் சர்க்கார் 20,000 நபர்களுக்கு மேற்பட்ட ராணுவம் வைத்துக் கொள்ளக்கூடாது. அந்த ராணுவத்துக்கு இந்திய சர்க்கார் ஆயுதங்கள் வழங்கும்.

ரஸாக்கர் படையைக் கலைத்து விட வேண்டும்.

ஹைதராபாத் சர்க்காரின் வெளிநாட்டு விவகாரங்களெல்லாம் இந்திய சர்க்காரின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும். ஹைதராபாத் சர்க்காருக்கு வெளிநாடுகளுடன் அரசியல் உறவு இராது.

மேற்கண்ட ஒப்பந்தத்தை விடத் தாராளமானதாக ஒரு ஒப்பந்தம் தயார் செய்ய முடியாது. சில தீவிரவாதிகள் இந்த ஒப்பந்தத்தைக்கண்டு, நைஜாமின் வலைக்குள் இந்திய சர்க்கார் அகப்பட்டுக் கொண்டது என்றே கூறுகிறார்கள். அப்படியிருக்க, நைஜாம் மன்னரோ மாறி மாறி சண்டித்தனம் செய்து கொண்டிருக்கிறார். டில்லியில் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை எல்லாம் ஒப்புக்கொண்டு நைஜாம் பிரதமர் ஹைதராபாத்துக்குத்திரும்பினர். ஆனால், நைஜாம் மன்னர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆகவே மறுபடியும் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கவேண்டும் என்று ஹைதராபாத்திலிருந்து கோரிக்கை வந்தது.

இதைவிடச் சிறு பிள்ளைத்தனமான காரியம் வேறு கிடையாது.

பிரதிநிதிகளுக்கு ஒப்பந்தத்தில் கை எழுத்திடவோ, பிரதிநிதிகளின் ஒப்பந்தத்தை நைஜாம் ஏற்றுக் கொள்ளவோ இடமில்லாமல் இருக்கும்போது, பிரதிநிதிகள் என்று பெயரளவுக்குச் சொல்லிக் கொள்ளும் வெறும் ஆசாமிகளிடம் மாறிமாறிப் பேசுவதால் யாதொரு பலனும் கிடையாது. ஆகவே, இனி பேச்சு வார்த்தைகளைத் தொடர இஷ்டமில்லை என்றும், தற்போது செய்து கொண்ட ஒப்பந்தத்தில் நைஜாம் மன்னர் எந்த சமயத்திலும் கையெழுத்திடுவதற்கு ஏதுவாக இந்த ஒப்பந்தம் அப்படியே இருந்து வரும் என்றும் பிரதமர் நேரு, இந்திய யூனியன்சார்பாக, தெரிவித்து விட்டார்.

நைஜாம் பிரதமர் ஸ்ரீ லேக் அலி, டில்லியில் ஒப்பந்தத்தை உடனிருந்து தயாரித்து, அதை ஒப்புக் கொள்ளவும் செய்துவிட்டு, ஹைதராபாத்துக்குப் போனதும் இந்திய யூனியன்மீது குற்றம் சாட்டத் தொடங்கிவிட்டார். ஹைதராபாத்தைப் பலாத்காரமாகப் பணிய வைக்க இந்திய யூனியன் முயற்சிசெய்வதாகவும், ஹைதராபாத் தன் சுயேச்சைத் தனியரசை இழக்கத் தயாராக இல்லை என்றும் கூறி, உயிரையும் கொடுத்து ஹைதராபாத்தின் சுயேச்சைத் தனியரசை காப்பாற்றப் போவதாகவும் விருப்புடன் பேசியிருக்கிறார். இடத்துக்கு ஒரு விதமாகப் பேசும் இந்த ஸ்ரீ லேக் அலியைப் போல மட்டமான பேர்வழிகளை வேறு எங்கும் பார்க்க முடியாது.

ஹைதராபாத்தில் ஹிட்லர் தர்பார் நடத்தும் ரஸாக்கர் கூட்டத் தலைவர் ஸ்ரீ காஸிம் ரஜ்வி பிரதமர் நேருவின் பிரசங்கத்துக்குப் பதில் கூறும் முறையில், இந்திய யூனியன் யுத்தத்தை விரும்பா விட்டால், ஹைதராபாத்தும் விரும்பாது என்றும் இந்திய யூனியன் யுத்தத்தை விரும்பினால் ஐந்து லட்சம் ரஸாக்கர் படையும் இந்திய யூனியன் மீது பாயும் என்றும் கூறி, அந்தப் படை எங்கே போய் நிற்கும் என்று கூறமுடியாது என்றும், அதைத் தம்மாலேயே கட்டுப்படுத்த முடியாது என்றும் மிரட்டுகிறார். இவர் தான் சில நாட்களுக்கு முன் 'டில்லி செங்கோட்டையில் கொடியேற்றுவோம்' எனப் பேசியவர்.

இன்றைய நிலையில் ஹைதராபாத்துக்கு அளவுக்கு மீறிய திமிரும், முட்டாள் தனமான துணிவும் ஏற்பட்டிருப்பதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். முதலாவதாக, சென்ற வருஷம் நவம்பர் 27-ம் தேதி ஹைதராபாத்துடன் இந்திய யூனியன் இடைக்கால ஒப்பந்தம் செய்து கொண்டது தவறு என்றே இப்போது தோன்றுகிறது. அந்த ஒப்பந்தம் செய்து கொண்ட போது ஹைதராபாத்தில் சமஸ்தான காங்கிரஸூம் மற்றும் பல கட்சிகளும் நைஜாமை எதிர்த்து போராடிக் கொண்டிருந்தன. அந்தப் போராட்டம் பலம் பெறுவதற்குரிய ஆதரவைத் திரட்டாமல், போராட்டத் தலைவர்களைக் கூடக்கலந்து கொள்ளாமல் நைஜாம் மன்னருடன் ஒப்பந்தம் செய்து கொண்டது பெருந் தவறு. ஒப்பந்தத்திற்குப் பிறகு அநேகமாக சமஸ்தான காங்கிர

ஸின் போராட்டம் நின்றேபோய் விட்டது. பத்திரிகைச் செய்திகளின்படி இப்போது கம்யூனிஸ்டுக் கூட்டத்தினர் சிலர் நைஜாமின் கையாட்களான ரஸாக்கர்களை எதிர்த்துப் போராடி வருகிறார்கள்.

இடைக்கால ஒப்பந்தத்தின் பின்னணியில் நைஜாம் தம்மை எவ்வளவு பலப்படுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு பலப்படுத்திக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும். ரஸாக்கர்களின் ராக்ஷஸப் படை சென்ற ஒரு வருஷத்திற்குள்ளாக மிகவும் அதிகமாகப் பெருகிவிட்டது; அவர்கள் செய்யும் அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அத்துடன் ஹைதராபாத் சமஸ்தானத்திலிருந்த பிரிட்டிஷ் ஆயுத உற்பத்திசாலைகள் நைஜாமுக்குக் கிடைத்து விட்டதாகவும் கூறப்படுகிறது. ஒரு ஆங்கில முதலாளியிடமிருந்து பிரென் துப்பாக்கி உற்பத்தி சாலையை அல்லாவுதீன் என்ற ஒரு முஸ்லிம் பணமூட்டை மூலமாக நைஜாம் வாங்கி விட்டாராம். தவிரவும், உள் நாட்டில் படைதிரட்டவும், பாகிஸ்தான், அரபு நாடுகள், வெள்ளை ஏகாதிபத்தியங்கள் உட்பட எல்லோருடைய நட்பைப்பெறவும், முயலுகிறார் நைஜாம். நைஜாம் சமஸ்தானத்திலேயே இன்னும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வாரிசுகளான சில ஆங்கில உத்தியோகஸ்தர்கள் சகுனிகள் மாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களாம். இதைஎல்லாம் மனதில் கொண்டு, இந்தியாவையே வெற்றி கொண்டுவிடலாம் என்று பகற்கனவு காணுகிறார் ரஜ்வி. இந்திய முஸ்லிம்களைத் தாம் விடுவிக்கப் போவதாகவும் அவர் ஒரு முறை கூறினார். இப்படிக் கூறினால் இந்திய முஸ்லிம்கள் தமக்கு ஐந்தாம் படைகளாகிவிடுவார்கள் என்பது ரஜ்வியின் எண்ணம் போலும்!

இன்று அசாதாரணமாக வெறியும் திமிரும் கொண்டு சண்டித்தனம் செய்யும் நைஜாமை ஒடுக்க ஹைதராபாத் மீது பொருளாதார முற்றுகை போடப்பட்டுள்ளது; ரஸாக்கர்கள் இந்திய யூனியனைச் சேர்ந்த எல்லைப் பிரதேசங்களுக்கு வந்து அட்டூழியம் புரிந்தால், ஹைதராபாத் எல்லைக்குள்ளே புகுந்தும்கூட அவர்களை விரட்டும்படி உத்தரவு போடப்பட்டுள்ளது. அத்துடன் இன்னும் சில காரியங்களை செய்தாக வேண்டும்:

ஹைதராபாத்திலுள்ள எல்லா அரசியல் கட்சியினரும் ஒன்று சேர்ந்து போராட்டத்தை ஆரம்பித்தாக வேண்டும். அதற்கு, திருவாங்கூர், மைசூர் சமஸ்தானப் போராட்டங்களின் போது ஆதரவளித்ததையும்விடப் பன்மடங்கு அதிகமாக இந்திய மக்கள் ஆதரவளிக்க வேண்டும். தேச நலனுக்குக் குந்தகமாக சமஸ்தானத்துக்குள்ளே எது நடந்தாலும், அல்லது வெளிநாடுகளுடன் நைஜாம் எப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்தாலும் அவற்றை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். கடைசியாக, இந்திய யூனியனிலிருந்து கொண்டே மறைமுகமாக நைஜாமை ஆதரிக்கும் தோரணையில் மழுப்பி மழுப்பி எழுதி கொண்டுவரும் பத்திரிகைகளையும் ஒழித்துக் கட்ட வேண்டும்.

★

காலச்சுழல்

புதிய சட்டம்:

மே 25-ம் தேதி திடீரென்று சென்னை சர்க்கார் ஒரு புதுச் சட்டத்தைப் பிறப்பித்து விட்டது. அந்தச் சட்டத்திற்கு 'பொதுஜன ஒழுங்குப் பாதுகாப்புச் சட்டம்' என்று பெயர். 'குறிப்பாகத் தலைமறைவாக இருந்துகொண்டு கம்யூனிஸ்டுகள் செய்யும் நாசகரமான காரியங்களை ஒடுக்க'வே இந்தச் சட்டம் பிறப்பிக்கப் பட்டதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது. இந்தச் சட்டத்தின்படி சர்க்காரால் பாதுகாப்புக் கைதியாக சிறைவைக்கப்பட்ட ஒரு நபர் தம் கேஸை விசாரிப்பதற்காக ஹைக் கோர்ட்டில் மனுச் செய்து கொள்ள உரிமை கிடையாது. முன்னால் இந்த உரிமை இருந்தது. இத்துடன் வாரண்டு பிறப்பிக்கப்பட்ட நபர் தலைமறைவாகத் திரியும்போது அவருக்கு, இருப்பிடம், சாப்பாடு போன்ற எதைக் கொடுத்து உதவினாலும், உதவியவர்கள் 3 மாதத்திலிருந்து 2வருஷம் வரை சிறை தண்டனை அடைவதுடன், ரூ 2000 வரை அபராதமும் விதிக்கப்படலாம். இதே தண்டனைதான் தலைமறைவாக இருப்பவர்களின் அறிக்கைகளை வெளியிடும் பிரசுரகர்த்தர்களுக்கும்.

மேற்கண்ட ஷரத்துக்களின் மூலம் சர்க்கார் நல்ல காரியமே செய்ய உத்தேசித்திருக்கலாம்; நாசகரமான காரியங்களை யார் செய்தாலும் அவர்களை ஒடுக்க வேண்டியது அவசியம்தான். அதற்கு இப்படிப்பட்ட சட்டம் அவசியமா? இந்தச் சட்டம் ஜனநாயகத்துக்குப் பொருந்துவதாக இல்லை. ஒரு அரசியல் கைதிக்கு, தம் வாதத்தை எடுத்துச் சொல்லுவதற்கு அவசியமான பத்திரிகையோ, கோர்ட்டோ கிடைக்காதபடி சட்டம் செய்து விட்டால், அவர் குற்றவாளிதானா, இல்லையா, என்ற விபரம் பொது மக்களுக்குத் தெரியாமல் போய் விடும். ஆபத்தான பேர்வழிகளை பகிரங்கக் கோர்ட்டிலேயே விசாரித்து அதற்குரிய தண்டனையை விதிக்கலாம். அதற்கு அரசாங்கத்திற்குப் போதுமான அதிகாரம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இந்தச் சட்டத்தைப் பிறப்பித்திருக்க வேண்டாம். ஒருவர் தம் அபிப்பிராயத்தை எடுத்துக் கூறி நியாய சபையில் வாதாட உரிமை அளிக்காத சட்டத்தை எந்த நாட்டில், யார் மீது, யார் பிரயோகித்தாலும் தவறுதான் என்று கூற விரும்புகிறோம்.

கிரேடியின் ரோஷம் :

உதகமண்டலத்தில் நடைபெற்ற ஆசிய, தூரக்கிழக்கு நாடுகளின் பொருளாதார மகாநாட்டில் ஜூன்முதல் தேதியன்று இந்தியாவின் பிரதமர் பண்டிதநேரு பேசும்போது ஆசியாவிலுள்ள நாடுகளுக்கு தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகள் யந்திரசாதனங்களும், தொழில் நுணுக்க போதனையும் அளிக்கவேண்டும் என்றும், இந்த இரண்டையும் பொருளாதார ஆதிக்கம் செலுத்தும் நோக்கமில்லாமல் அளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். பொருளாதார ஆதிக்கம் என்ற சொல் தொடர் மகா நாட்டுக்கு வந்த அமெரிக்க கோஷ்டியின் தலை

வர் ஸ்ரீ ஹென்றி கிரேடியைத் திடுக்கிடச் செய்துவிட்டது. அவர், "சில தலைவர்கள் வெளி நாட்டு மூலதனத்தைத் தடுக்கக் கூடிய கொள்கைகளை வெளியிட்டுவிட்டு, வெளி நாட்டு மூலதனம் கிடைக்கவில்லையே என்று குறை கூறுவது முன்னுக்குப் பின் முரணாகும்" என்று தெளிவற்ற முறையில் பேசினார்; பண்டித நேருவின் பிரசங்கத்தை மறைமுகமாகக் கண்டிக்கத் தொடங்கிவிட்டார். இதிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா மூலதன உதவி செய்வதின் அந்தரங்க நோக்கமாகிய ஆதிக்க ஆசை வெளியாவதுடன், ஆசியாவிலும் மூலதன உதவி செய்து அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது என்ற உண்மையும் வெளிப்படுகிறது. இப்படி ஆதிக்க வெறி பிடித்து அலையும் அமெரிக்காவிடம் மூலதன உதவி பெறலாம் என்று சில பத்திரிகைகள் கூறிக்கொண்டிருந்தது முட்டாள்தனம். நம்மை ஒரு ஏகாதிபத்தியம் இதுவரை ஆட்சி செலுத்தியதே போதும். இன்னொரு புது ஏகாதிபத்தியம் வேறொரு வகையில் ஆதிக்கம் செலுத்த வர வேண்டாம். நம் பலத்திலேயே நாம் நிற்க முயலுவோமாக.

ஜமீன், இனாம் ஒழிப்பு :

ஜமீன், இனாம் ஒழிப்பு மசோதாவை ஆராய்ந்த கமிட்டி ஒன்று இப்போது தன் சிபார்சுகளை வெளியிட்டுள்ளது. அசல் மசோதாவுக்கும் இந்தக் கமிட்டியின் சிபார்சுகளுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் இதுதான் : ஜமீன்களுக்கு முன்னால் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்ட நஷ்ட ஈடுத் தொகை 1¼ மடங்காகியிருக்கிறது; இனாம்களின் நஷ்ட ஈடுத் தொகை 2 மடங்காகியிருக்கிறது. ரெவின்யூ மந்திரி ஓரிடத்தில் கூறியபடி ஜமீன் நஷ்ட ஈடுத் தொகை 10 கோடியிலிருந்து 12 கோடியாக ஆய்விட்டது. நஷ்ட ஈடு கொடுப்பதற்கு யாதொரு விதமான நியாயமான காரணமும் கிடையாது என்று இருக்கும்போது, நஷ்ட ஈடுத் தொகையைக் கூட்டுவது கொஞ்சம் கூட நியாயமில்லாத காரியம். அரசாங்கம் பண வசதி போதாமல் பல நல்ல காரியங்களைச் செய்ய முடியாமல் இருக்கிறது. அப்படியிருக்க இந்த 12 கோடி ரூபாயை எங்கிருந்து கொடுப்பது? ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கும் சில சின்ன இனாம்களுக்கு, அந்த நிலங்களை பட்டா செய்து கொடுத்துவிட்டு, மற்ற ஜமீன் இனாம்களின் நிலங்களை நஷ்ட ஈடு கொடுக்காமலே அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொள்ளும்போது, அந்த ஜமீன்தார்களுக்கும், இனாம்தார்களுக்கும் ஜீவனச் செலவுக்கு வழி செய்து கொடுத்தால் போதுமானது. இதுதான் நியாயமான காரியம்.

நம் அனுதாபம் :

ஜூன் 10-ம் தேதி திருச்சி காங்கிரஸ் பிரமுகர் ஸ்ரீ பி. ஆர். தேவரும், 15-ம் தேதி மதுவிலக்கு மந்திரி ஸ்ரீ டேனியல் தாமஸூம், அண்ணாமலை சர்வ கலாசாலை ஸ்தாபகர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரும் காலமாகிவிட்டனர். இம் மூவரின் குடும்பங்களுக்கும் நம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கலை

மகாத்மா காந்தி

அகம், புறம் என்று இரண்டு விஷயங்கள் உண்டு; அகத்திற்கு உதவியளிக்காதவரை புறத்திற்கு எந்தவித அர்த்தமும் இல்லை. ஆகவே எல்லா உண்மைக் கலைகளும் ஆத்மானுபவத்தின் வெளியீடுகளே. மனித ஆன்மாவின் அக உணர்ச்சியை வெளியிடும் அளவைப் பொறுத்தே புறத்தின் மதிப்பு அமைந்து கிடக்கிறது.

நான் சத்தியத்திலும், சத்தியத்தின் மூலமாகவும் அழகைக் காண்கிறேன். சகல உண்மைகளும்—உண்மைக் கருத்துக்கள் மட்டுமல்ல சத்திய வதனங்கள், சத்திய சித்திரங்கள், சத்திய கீதம்—எல்லாம் அழகின் வடிவங்களே. சத்தியத்திலே அழகைக் காண பெரும்பாலான மக்கள் தவறி விடுகிறார்கள்; பாமரன் சத்தியத்திலுள்ள அழகைக் காண இயலாதவனாக, ஓடி ஒளிகிறான். எப்போது மனிதன் சத்தியத்திலே சௌந்தர்யத்தைக் காண ஆரம்பிக்கிறானோ, அப்போதே உண்மைக்கலை உதயமாகி விடுகிறது.

உண்மையான கலைஞன் ஒருவனுக்கு மட்டுமே அழகான முகத்தின் புற அழகுமட்டும் கண்ணில்படாமல் அக அழகின் சத்திய பிம்பமும் கண்ணில் படுகிறது. சத்தியமின்றி, சௌந்தர்யமில்லை. அதேவேளையில் சத்தியம் புற அழகு இல்லாமலே, பல்வேறு ரூபங்கள் எடுக்க முடியும். சாக்ரடீஸ் தான் அவர் காலத்தில் வாழ்ந்த தலை சிறந்த மனிதர் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்; எனினும் அவரைப் போன்ற அவலக்ஷணரூபம் பெற்றவர்கள் கிரீஸிலே யாருமே கிடையாது. எனது கண்ணுக்கு அவரும் அழகுள்ளவராகவே படுகிறார். ஏனெனில், அவர் சத்திய வேட்கையில் தமது வாழ்நாளைக் கழித்தார். மேலும், புறத்தோற்றத்திலும் அழகைக் காணும் கலைஞர் பீடியசுக்கும், அவரது சுய அழகைக் காணும் விஷயத்தில் புறத்தோற்றம் குறுக்கே நிற்கவில்லை யென்பது நமக்குத் தெரியும்.

சத்தியமும் அசத்தியமும் பல சமயங்களில் இணைந்தே இருக்கும்; நன்மையும் தீமையும் பல சமயங்களில் கலந்தே இருக்கின்றன. கலைஞனிடமும் அதுபோலவே நல்ல தன்மைகளும் தீய தன்மைகளும்கலந்திருக்கின்றன. நல்ல தன்மைகள் வேலை செய்யும் போது உண்மையழகு படைத்த சிருஷ்டிகள் உற்பத்தியாகின்றன. இதன் தன்மை வாழ்க்கையிலும் குறைந்தால், கலையிலும் நல் அம்சம் குறைந்து போய் விடும்.

சத்தியத்தைத்தான் முதலில் தேடியடைய வேண்டும்; சௌந்தர்யமும், நன்மையும் பின்பு தானே வந்தடையும். கிறிஸ்து செய்த மலைப் பிரசங்கத்தில் இதைத்தான் சொல்லுகிறார். என் கண்களுக்கு கிறிஸ்து மகா கலைஞர் என்றே படுகிறது;

கலையைப் பற்றி மகாத்மா பல தடவைகளிலும் கூறியவற்றின் தொகுப்பே இது. பெரிய பெரிய கலைஞர்களே சொல்லாத பல கலை நுணுக்கங்களை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுகிறார் காந்திஜி.

காரணம், அவர் சத்தியத்தைத் தரிசித்ததோடு மட்டுமின்றி, அதை வெளியிடவும் செய்தார். அதுபோலவேதான் முகம்மது நபியும். அரேபிய இலக்கியத்திலேயே குரான்தான் தலை சிறந்தது என்று அறிஞர்கள் போற்றுகிறார்கள். ஏனெனில் அவர்கள் இருவரும் சத்திய வேட்டையில் இறங்கினார்கள்; அதனால் வெளியீட்டின் பெருமிதம் அவர்களைத்தானே வந்தடைந்தது. எனினும் கிறிஸ்துவோ, நபிகள் நாயகமோ கலையைப்பற்றி எழுதவில்லை. அந்த சத்தியத்தையும் சௌந்தர்யத்தையுமே நான் விரும்புகிறேன்; அதற்காகவே வாழ்கிறேன்; அதற்காகவே சாகவும் செய்வேன்!

இங்கு நான் பல்லாயிரக் கணக்கான மக்களினத்தைப் பற்றிச் சிந்தித்தே ஆகவேண்டும். அழகின் மூலமாக சத்தியத்தைக் காணும் மார்க்கத்தை நாம் அவ்வளவு லகுவில் சொல்லிக் கொடுத்துவிட முடியாது. அவர்களுக்கு முதலில் சத்தியத்தைக் காட்டுங்கள்; பிறகு அவர்களே சௌந்தர்யத்தையும் கண்டு கொள்வார்கள். பட்டினி கிடக்கும் மக்களுக்கு உதவும் எந்தப் பொருளும், என் கண்களுக்கு அழகியதாகவே படும். ஆகவே, இன்று நாம் வாழ்க்கைத்தேவைகளைக் கொடுப்போம். வாழ்க்கையின் அழகும் பெருமிதமும் தானே நம்மைப் பின் தொடரும். வாழ்க்கைதான் எல்லாவற்றையும்விட சிறந்த கலை. நான் இன்னும் கூட மேற் சென்று சொல்வேன்: யாருடைய வாழ்க்கை பரிபூரணத்துவத்தை எட்டிப் பிடிக்கிறதோ அவனே பெருங் கலைஞன். நல் வாழ்க்கைக்கு அடிகோலாத வாழ்வில் என்ன கலை இருக்கமுடியும்!

உண்மையான அழகு இதய சுத்தத்திலே தான் இருக்கிறது.

கலை கலையாக இருக்க, அது இதந்தரும் சாதனமாயிருக்க வேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் சமூகத்திடையே பேசும் கலையையும் இலக்கியத்தையுமே நான் விரும்புகிறேன்.

*

ஐன்ஸ்டீன் புதிர்

டாக்டர் பிராங்க் அய்டலோட் என்பவர், பிரபல விஞ்ஞான சாஸ்திரியாகிய ஐன்ஸ்டீனை ஒரு விருந்துக்கு அழைத்திருந்தார். அந்த விருந்தில் ஐன்ஸ்டீன் பேசினார்:

"சகோதர சகோதரிகளே, நான் உங்களுக்குச் சொல்லக்கூடிய விஷயம் ஒன்றுமில்லை. இதற்காக வருந்துகிறேன்" என்று மட்டும் சொல்லிவிட்டு ஐன்ஸ்டீன் உட்கார்ந்துவிட்டார். உடனே விருந்துக்கு வந்திருந்தவர்கள் ஏதேதோ 'குசு குசு' வென்று பேசத் தொடங்கி விட்டார்கள். இதைக் கண்ட ஐன்ஸ்டீன் இரண்டாவது தடவை எழுந்திருந்து, "நான் சொல்ல வேண்டியது எதுவும் இருந்தால், நான் திரும்பவும் இவ்விடத்துக்கு வருவேன்" என்றார்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஐன்ஸ்டீன் முன்னால் விருந்து அளித்த டாக்டர் அய்டலோட்டுக்கு பின்வருமாறு ஒரு தந்தி கொடுத்தார்:

"இப்போது, சொல்லுவதற்கு என்னிடம் விஷயம் இருக்கிறது"

உடனே அவர் மற்றொரு விருந்தை ஏற்பாடு செய்தார். அதில் ஐன்ஸ்டீனும் பேசினார்.

—லியோனார்டு லையான்ஸ்

மனித இதயம் பற்பல சந்தர்ப்பங்களில் பற்பல அவதாரங்கள் எடுப்பதுடன், சில அசந்தர்ப்பங்களில் வெறி பிடித்துக் கத்தவும் தொடங்கி விடுகிறது. அந்த வெறி பிடித்த இதயத்தின் சித்திரமே இந்தக் கதை. கதையின் கடைசிப் பகுதியில், வெறியின் உச்ச நிலையில், நாம் ஸ்தம்பித்து விடுகிறோம்.

* * * * * * * * * * *

மனித இதயம்

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

துணி மணிகளை வைக்கும் என் பெட்டியின் மூலையிலே நீளமான ஒரு சிறு கடிதக்கட்டு கிடந்தது. அந்தக் கட்டிலே இலேசாக ஒரு நல்ல வாடை அடிக்கும்; ஏனென்றால் அது ஒரு ஞாபகத்தின் அடையாளமாக இலங்கியது. அந்தக் கடிதங்களின் மிருதுத் தன்மைக்குத் தான் எவ்வளவு தைக்கும்படியான ஒரு கூர்மை இருந்தது! அந்தக் கடிதங்களுடன் கொண்ட தொடர்புதான் எவ்வளவு உருக்கமானது! சுபாவத்தில் நான் பாதரசம்போன்றவன். ஆகவே, சகிப்புத் தன்மையுடன் எந்த மனிதனோடும் பழகுவது என்றால் முடியாத காரியம். சாரீரமாகவோ ஆத்மார்த்திகமாகவோ பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் சொந்தமாகப் பாவித்து நேசிக்கும் அத்தியந்த நட்பு என்றால் எனக்கு எப்போதுமே பயம்; அதை நினைத்தாலே எனக்கு ஒரே கசப்பு. ஆனால் இந்தக் கடிதங்களை எழுதிய ஆசாமி தன் அறிவின் திறத்தால் இல்லாமல், ஏதோ மாயமந்திரத்தால் மாற்றியதுபோல என் சுபாவத்தையே மாற்றிவிட்டான். நேர்மைக்குப் பூஷணமாக விளங்கும் அவனுடைய ஞானதீட்சண்யம், வாழ்க்கையில் பக்குவம் எய்திய நிலையிலும் துடிதுடித்துக்கொண்டிருக்கும் அவனுடைய வாலிப மிடுக்கு, சம்பிரதாயங்களுக்குச் சவால் விடுத்து மீறும் அவனுடைய கவிதை உள்ளம், அலட்சிய பாவத்தின் வீச்சுக்களுக்கிடையில் விகசிக்கும் அவனுடைய சிருங்கார உணர்ச்சி — இவை எல்லாம் சேர்ந்து என்னை வசீகரித்தன. முன்பு வேறு எதுவும் இப்படி என்னைக் கவர்ந்து வசிகரித்தது கிடையாது. ஆகவே என்னைப் பிணித்திருந்த பாசம் நாளுக்கு நாள் உரம் பெற்று வந்தது. ஆனால்...... நன்றாகப் பேசக்கூடத் தெரியாத நான் இப்போது சளசளவென்று பேசப் படித்துவிட்டேன். அவனுடைய குரலை, பதினைந்து வருஷங்களாக என்னோடு உரையாடிக்கொண்டிருக்கும் அவனுடைய குரலைக் கேளுங்கள். பிறகு நான் சொல்லுவது உங்களுக்கு விளங்கும்.

குனியும் முகம் காட்டுகின்ற
குளிர் வாவி நீர் போலே
மனித உள்ளம் காட்டுமடா
மாற்றான் இதய மதை

முதல் கடிதம்—ஏப்ரல் 12, 19—

(கவரின் மேல் குத்தப்பட்டிருந்த தபால் முத்திரையிலிருந்த தேதி)

...ஏதோ தெளிவற்ற முறையில் ஒரு பொதுவான திருவருளினிடம் எனக்கு நம்பிக்கை யிருந்தாலும் கடவுள் என்று சொல்லப்படும் ஒரு மூர்த்தத்தினிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. என்னுடைய ஏகாந்த வாழ்வில் சந்தர்ப்பவசமாகப் பாய்ந்த, திருவருளின் ஒரு ஒளிக் கதிர் போல நீ இருக்கிறாய் எனக் கருதினேன். அது தப்பு.

மனிதனுடைய கருமங்களிலே புகுந்து இயங்குகின்ற மனித ராசியின் பிரச்னையானது, ஆயிர வருஷகாலம் கடந்தாவது தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது. நீ என்னை விட்டுப் பிரிந்து சென்றபின், எவனிடமாவது நான் உன்னைக் குறிப்பிட்டு, 'அவனிடத்திலிருந்து கடிதம் வருகிறதா இல்லையா, பார்' என்று பந்தயம் போட்டிருந்தால், நான் பந்தயத்தில் படுதோல்வி யடைந்திருப்பேன். ஒவ்வொருவனிடத்திலும், உன்னை நான் நன்கு அறிந்தவன் என்று சொல்லியிருக்கக் கூடும். சில குறிப்பிட்ட காரியங்களில் நீ நடந்துகொண்டது சரி என்று எனக்குத் தோன்றியதாகவும் நான் சொல்லி யிருப்பேன். ஆனால் உன் செயல் முறைகளின் பின்னணியில் நின்று ஆட்டுவிக்கும் உன் உணர்ச்சி பேதங்களைப் பற்றி நான் ஒன்றுமே அறியேன் என்றே இப்போது எனக்குப் படுகிறது. வான சாஸ்திரத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஒரு கிரகம்போல நீ இருக்கிறாய்; இந்தக் கிரகத்தின் சஞ்சாரத்தைப் பற்றியோ, இது கூட்டுவிக்கும் பலாபலன்களைப் பற்றியோ ஜோஸ்யமாக முன் கூட்டிக் கூற முடியாது. நன்கு ஆராய்ந்து சொல்லுவது என்றால் நீ, புராண இதிகாசங்களில் சிங்க முகமும், ஆட்டுடம்பும், பாம்பு வாலும் கொண்டு உலாவும் ஒரு அதிசயப் பிராணியாகவே மாறி விட்டாய். இது ஏதோ ஒரு புதிரைப் போலவும், ஜால வித்தையைப் போலவும் இருக்கிறது. உன்னை நினைக்கும்போது மகா கெட்டது என்று சொல்லப்படும் எகிப்து தேசத்தின் சிங்கமுகாசுரப் பிறவிகூட தெய்வாம்சம் பெற்ற ஒன்றாகத் தோன்றுகிறது. உண்மையில் யாதொரு அறிகுறியும் காட்டாமல் திடீரென்று நீ மாறிப்போய் விட்டாய்.

வானத்திலே சஞ்சரிக்கும் போது ஏதாவது ஒரு கிரககோளம் திடீரென்று ஒரு நாள் கண்ணுக்குப் புலப்படும். சில காலம் அப்படியே தெரிந்து கொண்டிருக்கும்; அப்புறம் மறைந்து விடும். அது எங்கே போனது என்றோ ஏன் போனது என்றோ யாருக்கும் தெரியாது. ஆகவே, உன்னைப் பொறுத்தமட்டிலும் நான் ஒரு துவந்துவ நோக்குடன் நடந்து கொள்ளப் போகிறேன். அதாவது உன்னை நான் சந்திக்க முடிகிறவரையிலும், உன்னோடு பேச முடிகிறவரையிலும், நீ இருந்து கொண்டுதான் இருக்கிறாய் என்று நினைத்துக் கொள்வேன். நீ மறைந்து விட்டால், நான் திறந்த மனத்தவனாக இருந்து கொண்டு, உன்னிடமிருந்து தகவல்கள் வரும் என்றோ, உன்னோடு பேசப்போகிறோம் என்றோ, எதிர்பார்க்காமல் இருந்துகொள்வேன்.

என்னுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பார்த்தால், ஈடு எடுப்பற்ற ஒரு தனித்துவம் பெற்று விளங்குகிறாய் நீ. இந்த அபிப்பிராயத்தை அல்லது வெறும் நம்பிக்கையை நான் நிரந்தரமாகப் பேணிவரப்போகிறேன். ஏனென்றால், நீ ஏதோ தேக அசௌக்கியம் போன்ற சாதாரணக் காரணங்களை முன்னிட்டுத்தான் மௌனம் சாதிக்கிறாய் என்று அறிந்தால் அது எனக்கு மிகவும் ஏமாற்றமாகப் போய்விடும். ஐன்ஸ்டீனைப்போல 'உறவு தத்துவ'த்தைக் கண்டறியக்கூடிய நிலையில் நான் இருக்கிறேன். நீ திடீரென்று சாதாரண நடைமுறை மனிதனாக மாறி அதன் மூலம் என் விஞ்ஞான ஆராய்ச்சியைப் பாழாக்கிவிடாதே. நீ அப்படிச் செய்யமாட்டாய் என்று நிச்சயமாக நம்புகிறேன். இப்போது நீ ஒரு பெரிய தகிடுதத்தப் பேர்வழியாகப் போய் விட்டாய். இது எப்படி இருக்கிறது தெரியுமா? அவசியம் வரவேண்டும் என்று கோரி ரிஜிஸ்டர் தபாலில் வந்த அழைப்பிதழைப் பார்த்து, ஜோரான உடை உடுத்திக்கொண்டு புறப்பட்டுப்போய் பார்க்கும்போது விருந்தளிப்பவர் மட்டுமல்லாமல், சமையல்காரர்களோ, விருந்து பக்ஷணங்களோ, அழைப்பிதழில் குறிப்பிடப்பட்ட விருந்து மண்டபமோகூட இல்லாமல் போனதுபோல, ஏதோ ஓர் அரேபியக் கதையில் நடக்கும் மாயா ஜாலத்தைப் போல, இருக்கிறது.

இந்தக் கடிதத்தில் நான் தேதி போடவில்லை. இன்ன இடத்திலிருந்துகொண்டு எழுதுகிறேன் என்றும் குறிப்பிடவில்லை. ஏனென்றால் உன்னோடு கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ளுவது காலமும் தூரமும் அற்ற ஒரு பிரபஞ்சத்திலே, ஒரு நாலளவைப் பிரதேசத்திலே, சஞ்சரிப்பதைப்போல இருக்கிறது. அந்தப் 'பிரதேசத்தில் சதுரம் சதுரமாக இராது. மனிதன் கண்டறிந்த ஒரு ரூப லட்சணத்தையும் அந்தப் பிரதேசத்தில் பொருத்திப் பார்க்க முடியாது. கண்ணுக்கு புலனாகாதிருக்கும் ஒரு மையினால் மாக்பெத் நாடகத்தில் வரும் சூனியக்காரிகளின் தோலைக் கொண்டு செய்த காகிதத்தில், கள்ள எழுத்துக்களில் நான் எழுதியிருக்கவேண்டும். ஆனால் அவை எனக்குக் கிடைக்கக் கூடிய சரக்குகள் அல்லவே! யாரோ ஒரு முன்பின் அறியாத ஆத்மாவுக்கு நான் இதை எல்லாம் எழுதுகிறேன் என்றும், ஏதோ உண்மைக்கு மாறான, சாரம் சப்பற்ற, விஷயத்தை எழுதுகிறேன் என்றும் நினைக்கும்போது தாற்காலீகமாக எனக்குச் சிரிப்பாகத்தான் இருக்கிறது. தன்னை மறந்து யந்திர கதியில் எழுதுவதைப் போலத்தான் நானும் எழுதுகிறேன். ஆனால் தன்னை மறந்து யந்திரம்போல எழுதுவதற்கும் இதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அதாவது யந்திர கதியில் எழுதும்போது அரூபியான ஒன்றுக்கு ரூபியான ஒன்று எழுதிக் கொண்டுபோகும். இப்போது ரூபியான ஒன்று, கடிதமே எழுதாத அரூபியான ஒன்றுக்கு எழுதுகிறது.

இப்போது பிரத்தியக்ஷ லோகத்துக்கு வருவோம். நீ தென்னிந்தியாவில் ஏதோ ஓரிடத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்றும், நீ இந்தக் கடிதத்தை வாசிக்கப் போகிறாய் என்றும்,

இதற்கு முன் நான் எழுதிய கடிதங்களை வாசித்திருப்பாய் என்றும் வைத்துக்கொள்வோம். அப்படியாகும்போது, நீ எனக்கு உடனே பதில் எழுதுவாய் என்று நான் முடிவுகட்டி விடுவது சரிதானே?

என் வாழ்க்கை யனுபவங்களைப் பார்த்தால் நீ ஈடு எடுப்பற்ற தனித்துவம் பெற்ற ஒருமனிதனுக இருக்கிருய்.........

இரண்டாவது கடிதம்—ஜூன் 15, 19—

.........நான் என் தகப்பனுரை நம்பினேன்; தாயாரை நம்பினேன். என்னுடைய சூதறியா வாலிபத்திலே, பிரமசரியப் பிராயத்திலே (தொலேயட்டும் அந்தப் பிராயம்) நான் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவனேயும் நம்பி விட்டேன். என் பெற்ருேர்களும் பிறரும் சேர்ந்து வரித்த பெண்ணை நான் கல்யாணம் செய்துகொண்டேன். அப்போது எனக்கு வயது இருபதுக்குள்ளாகத்தான் இருக்கும். என் பெற்ருேர்கள் என்னைப் பொறுத்த வரையிலும் சகல கடமைகளையும் நிறைவேற்றி விட்டவர்களைப்போல எனக்குக் கலியாணமாகி ஒரு வருஷம் முடிவதற்குள்ளாகவே ஒரு வருக்குப்பின் ஒருவராக, என் மண வாழ்க்கையை நானே நிர்ணயித்துக் கொள்ளும்படியாக என்னை விட்டுவிட்டுக் காலமாகி விட்டார்கள்..........

.........அருமை நண்பனே! வாழ்க்கையின் சர்வசாதாரணமான செளகரியங்களைக்கூட என்னுல் பெற முடியாது என்று தோன்றுகிறது. நாளுக்கு நாள் இந்த அபிப்பிராயம் உரம் பெற்று வருகிறது. ஆனுல், காட்டைக் கட்டி மலேயைக் கட்டி என்னென்னவோ திட்டங்களைப் பற்றிக் கனவுகண்டு கொண்டிருக்கிறேன். அந்தத் திட்டங்களே என் மனதை அடைத்துக் கொண்டிருக்கின்றன; சில சமயங்களில் கண்ணீரையும் வரவழைத்து விடுகின்றன. கண்ணீர் என்ருல் சோகக் கண்ணீர் அல்ல. சோகம் கரைபுரண்டு விட்டதன் காரணமாக வரும் கண்ணீர்தான். கனவுகளும் ஆகாயக் கோட்டைகளுந்தானே. என்னைப் போன்ற ஏழைகளுக்கும், பணமோ சந்தோஷமோ அற்ற மக்களுக்கும் மனதுக்கு இதம் செய்யக் கூடியவையாக இருக்கின்றன? நான் ஒரு மல் வீரனுகவே சாக வேண்டும். ஏனென்ருல், தயாத்திற்கு சாந்தியாக உடனுக்குடன் பல காரியங்கள் நடைபெறவேண்டும் என்று நான் கடவுளை வேண்டுகிறேன்; ஆனுல் அது இந்த உலகத்தில் சாத்தியப் படுவதில்லை. கடவுளால் இதைச் செய்ய முடியவில்லை என்ருல், நான் அவரை எதற்காக நம்ப வேண்டும்?

தெய்வலோகத்தில் உள்ள யாருடனுவது நேரடியாகச் சம்பந்தம் கொண்டிருப்பது சாத்தியம் என்ருல் நான் நரகத்தில் கூட வாழ்க்கை நடத்துவேன். நரகத்தில் வாழ்ந்து கொண்டே நான் இதுவரையிலும் அக்கறையாய் பேணிப் போற்றியவற்றை பிறருக்கு வழங்க முடிகிற பக்ஷத்தில், சந்தோஷம் என்ற சொல்லேயே நான் மறந்து விடுவேன். இப்போது நான் போராடிக் கொண்டிருப்பது நான் சந்தோஷமாக இல்லை என்பதற்காகவோ, அல்லது பிறரைச் சந்தோஷப் படுத்த இயலாமல் இருக்கிறேன் என்பதற்காகவோ அல்ல;

ஆனால் மகா அற்பத்தனமான, சுயநல புத்தி படைத்த, கொடுமைக்காரர்களெல்லாம் சந்தோஷம் அளிக்கும் சாதனங்கள் யாவற்றையும் கைப்பற்றிக் கொள்ளுகிறார்களே என்பதற்காகத்தான். எனக்கு ஆச்சரியமாகத் தோன்றும் விஷயம் எது தெரியுமா? நிரந்தரமான ஒரு அராஜகம் எங்கும் நிலவக்காணோம்; ஆனால் கஷ்டப்பட்டவர்கள் என்றென்றும் குனிந்த தலை நிமிராமல் கஷ்டப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இப்படித் தலைகுனிந்து கிடப்பவர்கள் பாக்கியவான்கள்; ஏனென்றால் அவர்கள் உலகத்தைத் தங்கள் பரம்பரை ஆஸ்தியைப் போல சுவீகரிக்கப்போகிறார்கள். இதில் சந்தேகமே இல்லை. ஆனால் இந்த உலகம் நாளுக்கு நாள் நாற்றமெடுத்து வீசிக்கொண்டிருக்கிறதே!

பால் பிரன்டன் எழுதிய "அருணாசலத்திலிருந்து ஓர் உபதேச வாசகம்" என்னும் புத்தகத்தைப் படிக்கவேண்டுமென்று ஏனோ ஒரு ஆசை ஏற்பட்டது. படித்தேன். நான் கண்டறியாத பல விளக்கங்களை அதில் காணலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் புத்தக ஆசிரியர் சாதித்த காரியம் என்ன தெரியுமா? புத்தகத்திற்கு ஐந்து ஷில்லிங்கு விலை வைத்து ஒரு லட்சம் புத்தகங்களை விற்பதற்கு மட்டும் வழிசெய்து கொண்டார். அவ்வளவேதான்.

ஏதாவது ஒரு காரியத்தை என்னால் சாதிக்கமட்டும் முடியும் என்றால், குறைந்த பக்ஷம் பெருமைப் படத்தக்க ஒரு தற்கொலையாவது செய்துகொள்ள முடியும் என்றால்......! முட்டாள் தனமான இந்த உலகத்தில் நடத்தும்

விபரீத முடிவு

குடிப்பழக்கத்தால் ஏற்படும் கெடுதியை நிரூபிப்பதற்காக, ஸ்டாக்ஹோம் நகரில் ஒரு சிறைச்சாலை அதிகாரி ஒரு கால் பந்தாட்டத்தை ஏற்பாடு செய்தார். விளையாடக் கூடியவர்களில் ஒரு கட்சியினர் குடிகாரர்களாக உள்ள கைதிகள்; மற்றொரு கட்சியினர் குடிப்பழக்கமில்லாத கைதிகள். பந்தாட்டத்தில் வெற்றிபெற்றவர்கள் யார் தெரியுமா? குடிகாரர்கள்!

—வைம்

முட்டாள் தனமான வாழ்க்கை என் உணர்ச்சிகளைப் புண்படுத்துகிறது; என் அறிவை அதிர்ச்சி அடையும் வண்ணம் வந்து மோதித் தாக்குகிறது. சீ, இது மகா பேடித்தனம்! மனிதனுடைய பலவீனம் படு கேவலமானது. காதல் என்றும் அதிகாரம் என்றும் சொல்வது வெறும் கேலிக் கூத்து! வானத்திலே அற்பத்தனமாகக் கண்ணடிக்கும் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் அழித்துத் துடைத்து, சூரியனையும் எட்டி உதைத்து, அது எந்த நரகத்தின் வாசலில் உதித்து வந்ததோ அங்கேயே அதைத் தள்ளிவிட்டு சிருஷ்டி என்ற இந்த அர்த்தங்கெட்ட முட்டாள்தனம் இன்னும் நடைபெற்று வராமல் ஒரேயடியாக நிறுத்தித் தொலைப்போமா என்று இருக்கிறது.

ஸ்பஷ்டமாக மடத்தனம் என்று வெளிக்குத் தெரிந்தும் கூட இந்த மடத்தனம் கும்மாளம் போடுவதைக் கண்டு எனக்கு ஒரே கோபமாக இருக்கிறது. தவிரவும் எவ்வளவோ சுலபமாகப் போக்கக் கூடிய இந்த மடத்தனம் நிலைபெற்று

இருந்துவந்தால் கோபம் நெருப் புக் கக்காமல் இருக்குமா ?

மூன்ருவது கடிதம்—
செப்டம்பர் 9, 19—

......ஆம். நீ சொன்னது சரி, நண்ப! இப்போது பிறக்கக் கூடிய ரக்ஷகர் தூய வெள்ளை யான டாக்கா மஸ்லினையோ, விதவிதமான உடையணியப் பிரி யப் பட்டால் முரட்டுக் கதரா டையையோதான் அணிய வேண் டும். ஆனல் அவருக்குத் தம் உடைகளைப் பற்றித்தான் கவ னம் இருக்குமே ஒழிய நீயும் நானும் என்ன நினைக்கிருேம், எப்படி கஷ்டப்படுகிருேம், என் பது பற்றி அவருக்கு அக்கறை இராது. ஸீசருக்குச் சொந்தம் என்று உலகம் நம்புவதை ஸீசரி டமே ஒருவன் கொண்டு போய்ச் சேர்த்தால், அந்த மனிதன் பிற ஆண் பெண் பாலர் அனைவரு டைய தோளிலும் தலையிலும் ஏறிச் சவாரி செய்யலாம். அவனுடைய பாதங்களைத் தரை யில் பாவவிட மாட்டார்கள் ஜனங்கள். ஏனென்ருல் ஏழை களாகிய நமக்கு எதையோ ஒன் றைக் காரணமின்றி நம்பிக் கொண்டிருக்கும் போதுதானே சந்தோஷத்தில மூழ்கிக்கிடக்க முடிகிறது? எப்போதுமே ஒரு ஸீசர், சர்வ வல்லமை வாய்ந்தவ ராகவும், சர்வ வியாபியாகவும், நாம் அருந்தும் நம் தாய்மாரின் முலைப்பாலிலும்கூட இரண்டறக் கலந்தவாரகவும் உள்ள ஒரு ஸீசர், இருந்துகொண்டே இருப்பார். அதேபோல எப்போதுமே ஸீச ருடைய ரக்ஷகர்களும், திருக்குமா ரர்களும், பிரதிநிதிகளும் இருந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் மனித சமுதாயத்தின் நெஞ்சை நெருப்பிலிட்டுக் கொண்டிருப் பார்கள். அந்த நெருப்பின் ஒளி யில்லாவிட்டால் அவர்களுடைய மஸ்லினே கதரோ தலாம்பரமாக ஜிலுஜிலு என்று வர்ணஜாலம் செய்து பிரகாசிப்பது எப்படி?

நான்காவது கடிதம்—
அக்டோபர் 20, 19—

என் பேரன்பனே! என் குண குணங்களைப் பற்றி நன்கறிந்த நீ என் வாழ்க்கையின் ஒரு பகு தியை—என் குடும்ப வாழ்க் கையை அறிந்துகொள்ள வேண்டாமா? முன்பு என் 'மணவாழ்க்கைத் திட்டம்' என்று நான் குறிப்பிட்டிருந் தேனே, ஞாபகமிருக்கிறதா? என் மனைவி ஒரு அபாரமான உதாரணத்தைக் காட்டி விட் டாள். இன்னும் துல்லியமாகச் சொல்லப்போனல், தாய் சொல் துறந்தால் வாசகமில்லை என்று நடக்கிருள். அவளுடைய தாயாரோ ஆகா, என்ன அதி சயம்! என்ன பிள்ளைப்பாசம்! அப்படி ஒருத்தியைப் பார்க்கத் தான் முடியுமா? மாணிக்கமட மாணிக்கம்! என்ன பாவனை! என்ன பலுக்கு! இந்தப் பாவனை பலுக்குகள் எல்லாம் காலத்தா லும்கூட மறைந்து மாயக்கூடி யவை அல்ல.

என் பெற்ருேர்கள் காலமான பின், என் வீடே வெறிச்சோடிப் போய்விட்டது. புருஷனும் மனை வியுமாக எங்கள் குடும்பத்தில் சுமார் முப்பது வருஷ காலமாய் வேலைசெய்து வரும் இரண்டு வேலைக்கார ஆட்கள்தான் வீட் டில் இருந்தார்களே ஒழிய, மற் றப்படி நான் தன்னந்தனியனு கவே இருந்துவந்தேன். என் தம்பி சர்வகலாசாலையில் படித் துக் கொண்டிருக்கிருன்; இது நான்காம் வருஷம். என் அத்தை என் மனைவியோடே என் வீட் டுக்குள் நுழைந்தாள். அவள்

ஒரு விதவை; அவளிடம் பணம் இருக்கிறது. என் மனைவிதான் அவளுடைய ஒரே குழந்தை. என் மனைவி அவளுடைய நிழல் மாதிரி. மனைவியைவிட்டு அரைக் கணமும் பிரியாதிருப்பாள் அத்தை. நிழலைவிட்டு மனிதனை எங்காவது தனியாகப் பிரிக்க முடியுமா?

என் மனைவியோ அப்படி ஒன்றும் கண்ணைப் பறிக்கக்கூடிய ரம்பையல்ல. ஆனால் லக்ஷணமாய் இருப்பாள். அவள் கண்களில் நிரந்தரமாக ஒரு அனுதைப் பார்வை குடிகொண்டிருக்கும். காணல் புல் மாதிரி ஒல்லியான சரீரம்; பெண்மான்மாதிரி சங்கோஜப்படும் பிராணி. அவளுடைய தாயாரோ எப்போதும் கண் பார்வையில் தட்டுப்பட்டுக் கொண்டுதான் இருப்பாள்......

ஐந்தாவது கடிதம்—

பிப்ரவரி 7, 19—

...நான் மிகவும் புண்பட்டுப் போயிருக்கிறேன், நண்ப! என் உணர்ச்சிகளைப் புரிந்து உண்மை என்று ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒருவனிடம் என் மனதில் உள்ள விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். எதைப் பற்றியும் பேசுவது முட்டாள்தனம் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அதனல், என் மனதுக்கு ஒன்றும் சரியில்லாமல் இருக்கும்போது புத்தகங்களை எடுததுப் படிக்கத் தொடங்கி விடுவேன்; அவை என் இதயத்தைச் சமன் செய்துவிடும். ஆனால் மனிதன் பேசப்படித்த நாளிலிருந்து பேசியவர்கள் எல்லாம், பிளேட்டோ, கௌதமர், ஏசு, சங்கரர் முதலியவர்களெல்லாம், பேசிப் பேசித் தங்களை முழு முட்டாள்களாக்கிக் கொண்டது தான் மிச்சம். ஒவ்வொருவரும் வழி வாய்க்காலற்ற வனாந்தரத்தினூடே நாம் தான் உண்மை மார்க்கத்தில் நிற்கிறோம் என்று நம்பினர்கள். ஆனல் இங்கே மார்க்கமேது, வழி ஏது? திசை என்பதுகூட இங்கே கிடையாதே!

மனிதன் என்னத்தைத்தான் சொல்வது? தான் துன்பத்தில் ஆழ்ந்திருப்பதாகச் சொல்லுவதா? அதை எத்தனையோ பேர் நன்கு உணர்ந்து சொல்லிவிட்டார்கள். நாமும் துயரத்தில் ஆழ்ந்துகொண்டே வருகிறோம். அப்படியானல் வாழ்க்கையை வேடிக்கை விளையாட்டாகக் கருதத் தலைப்படலாமா? அதுவும் எத்தனை நாட்களுக்குக் கொண்டு செல்லும்? கொஞ்ச காலத்திற்கு அப்படி இருக்கலாம். ஆனல் ஒருவன் சிரித்துக்கொண்டே எவ்வளவு காலத்தைத் தள்ள முடியும்? அப்படிச் சிரிப்பதென்றாலும் எதைப் பார்த்துச் சிரிப்பது? ஆகவே ஊமையாயிருப்பதுதான் மேல். படுமோசத்தைவிடச் சற்றே விசேஷமான ஒரு மோசத்தையே மேலானதென்று கருதும் உலகம் அல்லவா இது?

அடையாளம்

இரண்டு பெண்கள் திடீரென்று நட்புக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள் என்றால் அது, யாரோ ஒரு பெண் தன் இரண்டு சிநேகிதைகளை இழந்து விட்டாள் என்பதற்கு அடையாளம்.

அது தான் முடியும்

ஒரு பெண்ணுக்கு எதிர்பாராத விதமாகத் தோன்றும்படி அவளை முத்தமிட்டுவிட முடியாது. அவள் எதிர்பார்த்ததைவிடச் சற்று சீக்கிரமாக வேண்டுமானல் முத்தமிட முடியும். —மேன்

ஜோதிஷத்தில் சொல்லப்பட்டிருப்பதை நாம் நம்புகிற பட்சத்தில், மனிதன் பிறக்கும்போதே கைக்கும் காலுக்கும் தளையிடப்பட்ட நிலையிலேயே பிறக்கிறான். அப்புறம் அவன் திட்டினாலும், சபதம் போட்டாலும், சிரித்தாலும், தமாஷ் பண்ணினாலும், அழுதாலும், பிரார்த்தனை செய்தாலும், முகஸ்துதிசெய்தாலும், கடமையைச் செய்யாமல் நழுவி ஓடினாலும்—என்ன செய்தாலும் அவன் தளையிலே கட்டுண்டுதான் கிடக்கிறான். அவன் தன்னைச் சுதந்திர புருஷன் என்று நினைத்து, கால் எடுத்து வைத்து நடக்கத் துணிந்தால் கேவலம் ஒரு சின்னஞ்சிறு கல் தட்டிய மாத்திரத்திலேயே தடுமாறி விழுகிறான். விழுந்தபின் தான் சுதந்திர புருஷன் அல்ல என்பதை அவனால் ஒப்புக்கொள்ளாமல் தீருமா?

உன்னிடம் புதிதாகச் சொல்லுவதற்கு எதுவும் இல்லையே என்று நினைக்கும்போது எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஆனால் உனக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தால் நான் என்ன என்னவோ உன்னிடம் சொல்லத் தொடங்கிவிடுகிறேன். நான் சொல்லியவற்றை எல்லாம் என்னைவிட நன்றாக அநேகர் சொல்லிவிட்டார்கள். அதை நீ ஏற்கெனவே படித்தும் இருப்பாய். உண்மையில் உனக்கு நான் எழுதும் கடிதங்கள் எப்படி இருக்கவேண்டும் தெரியுமா? 'பேரன்ப! நான் உயிரோடிருக்கிறேன்; நீயும் அவ்வண்ணமே இருப்பாய் என நம்புகிறேன்'—இப்படித்தான் இருக்கவேண்டும்.

வாழ்க்கையைக் கண்டு பயப்படுவதும், வாழ்க்கையை மீறிச் செல்வதும் என்னிடத்தில் மாறி மாறி நிகழும் காரியங்கள். ஆனால் பயப்படுவதுதான் நிரந்தரமான காரியமாக இருக்கிறதே ஒழிய மீறி நடப்பது எப்போதோ ஏகதேசமாகத்தான். உலகின் இன்றைய நிலை இந்தப் பயத்தையே வளர்த்து வருகிறது. இன்றைய நீசத்தனத்துக்குப் பின்னால் ஒரு நல்லது பிறக்கப் போகிறது என்று, எதிர்காலத்தை ஆராய்ந்து கண்டு பிடிக்கும் சக்தி இல்லாத வரையில் இன்றைய நிலவரங்களைக் கண்டு மனிதன் திக்குத் திசை தெரியாமல் தவிக்கவேண்டியதுதான்; தன்னைத் தானே, 'இந்த இடத்தைவிட்டுப் போய் விடுவது, நிரந்தரமாக ஒழிந்து விடுவது, விசேஷமல்லவா?' என்று கேட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

இந்த நீசத்தனத்தின் முன் ஒவ்வொரு ரிஷியும், ஒவ்வொரு தத்துவ ஞானியுமே எதிர்த்து நிற்க முடியாமல் தலை குப்புற விழுந்து விட்டார்கள். இதற்கு வேறு யாரும் நல்ல வியாக்கியானம் கொடுக்க முடியாது. கோடிக் கணக்கான வருஷங்களுக்குப் பிறகாவது இந்தத் தீமையிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கு, நம்மை நம் தற்போதைய நிலையில் கொண்டுவந்து நிறுத்திய பரிணாம சக்தி ஒன்றையே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. காட்டுமிராண்டித்தனத்துடன் கத்திக் கொண்டும் கூவிக் கொண்டும் வாழ்ந்த மாமிச பக்ஷிணிகளை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது பரிணாம சக்தியல்லவா? ஆனால் இது தனி மனிதனின் பிரச்னையைத் தீர்க்கக் கூடியதல்ல. ஆகவே அவன், "ஏன் இப்படி முட்டாள் தனத்துடனும் மந்தகதியிலும் உலக வளர்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது?

இதனல் என்ன பிரயோஜனம்? கோடிக்கணக்கான வருஷங்களுக்குப் பிறகு எது நடந்தாலும் எனக்கு என்ன? அப்படி கோடிக்கணக்கான வருஷங்களுக்குப் பிறகு உலகத்தில் தீமையே இல்லாமல் ஒழிந்து விடப் போகிறது என்ருலும், எனக்கு அதனல் என்ன லாபம்? அநந்த கோடி வருஷங்களுக்குப் பிறகு தோன்றப்போகும் இந்த சந்ததியினரைப்பற்றி நான் அக்கறை செலுத்த முடியுமா? அவர்கள் எனக்கு முற்றிலும் அந்நியர்கள். அவர்களுக்கும் எனக்கும் என்ன தொந்தம்...?

ஆருவது கடிதம்-மார்ச்சு 29, 19—

நண்ப! இனியும் உன்னை அந்தரத்தில் காக்க வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. சீக்கிரமாகவே, என் வாழ்க்கையின் இரண்டாவது ஆஸ்ரமத்தை, கிருகஸ்தாஸ்ரமத்தைப் பற்றி உனக்குப் பரிபூரணமாகச் சொல்ல வேண்டும்.

என் அத்தை என் வீட்டுக்குள் எவ்வளவு அதிகார ராங்கியுடன் அடி எடுத்து வைத்தாள், தெரியுமா? அது என் எலும்பையே நீராக உருக்கிவிடும் போலிருக்கிறது. அவள் செய்யக் கூடிய காரியம் அவ்வளவு பயங்கரமாக இருந்தது. அவளை எதிர்த்து சண்டை செய்வதற்குக்கூட நான் திராணியற்றுப் போனதை நினைத்தால் எனக்கே பீதியாக இருக்கிறது. அத்தை என் மனைவியை என்னிடத்திலிருந்து பரிபூரணமாகப் பிரித்து வைத்துவிட்டாள்! மாதங்கள் ஓடிக் கொண்டிருந்தன. கல்யாணம் ஆய்விட்டதென்ருல் என்ருவது ஒரு நாள் கருக் கூடியாக வேண்டுமே என்பது அத்தையின் மூளைக்குத் தட்டுப் படவில்லை போலிருக்கிறது. தன் மகளை விட்டு அரைக்கணம் இப்பால், அப்பால் நகரமாட்டாள்; மகளை என்னேடு அதிகமாகப் பேச விடமாட்டாள். அப்படி நாங்கள் பேசிக்கொள்ளக்கூடிய இரண்டொரு வார்த்தைகளையும் அவள் மறைந்திருந்து ஒற்றுக் கேட்டுவிடுவாள். என் அப்பாவி மனைவி தன் தாயார் எனக்கும் தனக்கும் நடுவே கிழித்த கோட்டைத் தாண்டப் பயந்தாள். அவளுடைய நாதியற்ற கண்கள் பாதுகாப்பைக் கோரி என்னை நோக்கி எங்கும்; பின்னும் அதிக பரிதாபத்துடன் பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொள்ளும். அத்தையாக வாய்த்தவள் நரமாமிச பக்ஷிணியோ என்னவோ? புருஷனுக்கும் மனைவிக்குமிடையில் அவள் இப்படி அதிசயம்போல மதில் கட்டிக் கொண்டிருப்பதன் நோக்கம் என்ன? எல்லாவித சந்தேகங்களும் வந்து என் மூளையைத் தாக்கின. அத்தை எப்படித்தான் அந்தக் காலத்தில் தன்னுடைய புருஷனை, அந்தத் துரதிர்ஷ்டப் பிறவியை ஆட்டி வைத்தாளோ? மரணத்திலாவது தனக்கு விடுதலை கிடைத்ததே என்று நினைத்துத்தான் அவன் சந்தோஷப்பட்டிருப்பான்.

நானும்கூட மரணத்துக்குச் சொந்தமானவனுகப் போய் விட்டதாகத் தோன்றுகிறது. மரணதேவதைதான், என் வாழ்க்கையிலே என்னை ஒரு ஸ்டாக் புரோக்கர் கம்பெனியில் அக்கௌண்டண்டாக வேலை செய்யும் சக்தியை அளித்துள்ளது. ஆனல், அதுவே பிரதான நோக்கமாக இருக்கும்படி அதுபணித்ததில்லை. ஆகவேதான் மரண தேவதை தான் செய்த காரியத்

வைரங்கள்
வைரம் பதித்த
நகைகள்

பரிசுத்தம், மாசற்ற நீல வெண்மை வர்ணம், பளிச்சென்ற பிரகாசம், சரியான பட்டைதீர்ப்பு, இக் குணங்களெல்லாம நாங்கள் உபயோகிக்கும் வைரங்களுக்குள்ளன. ஆரம்ப நாட்களிலிருந்தே உயர்தரப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்று வந்திருக்கிறோம். ஒவ்வொரு ஆர்டருக்கும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது.

அபூர்வமான கைத்திறனுடன் தயாரிக்கப்பட்ட நவீன மோஸ்தர் நகை வகைகள் ஏராளமாக எப்பொழுதும் உள்ளன.

உம்மிடி
ராமையா செட்டி குருஸாமி செட்டி & கோ.
நகை வியாபாரிகள்

23–25. சைனாபஜார் ரோடு, சென்னை.

பிரபஞ்ச ஜோதி பிரசுரங்கள்

சமீபத்தில் வெளியான

வெ. சாமிநாத சர்மா நூல்கள்

★

அரசியல் வரலாறு	2	10
கார்ல் மார்க்ஸ்	3	4
மானிட ஜாதியின் சுதந்திரம்	1	4
ஸ்ரீராம கிருஷ்ணர்— ஒரு தீர்க்கதரிசி	2	4
ஆசியாவும் உலக சமாதானமும்	2	8
ஐக்கியதேச ஸ்தாபனம்	2	0
ருஷ்யா-சரித்திர வரலாறு	1	8
சுப்பிரமணிய சிவம்	1	2
பிளேட்டோவின் அரசியல்	(அச்சில்)	
சமுதாய சிற்பிகள்	(அச்சில்)	

சென்னையில் கிடைக்கும் :
சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை 14

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
புதுக்கோட்டை
திருச்சி ஜில்லா

ச க் தி

மாதப் பத்திரிகை

○

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 வீதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய
வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

○

சக்தி காரியாலயம்
சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

துக்காக ஒவ்வொரு நிமிஷமும் வருத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது. வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதை உண்மையில் எவனுமே புரிந்து கொள்ளவில்லை. அதனால், வாழ்க்கையை நினைத்து மண்டையை உடைத்துக் கொள்ளுவதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது. மனிதன் எதைச் செய்தாலுமே தப்பாகப் போய்விடுகிறது. ஏனென்றால் ஒரு காரியத்தை ஒருவன் செய்வதன் மூலம், அநேக பிற காரியங்களைச் செய்யத் தவறி விடுகிறான். நம்பிக்கை என்பது அற்பத்தனமான காரியம்; திசை தெரியாத தவிப்போ அர்த்தமற்ற கற்பனை. தற்காலத்தில், உணர்ச்சிப் பெருக்குள்ள எந்தக் காரியத்தையும் கேவலமாகக் கருதுவது நாகரிகமாகப் போய்விட்டது.

இன்ன இன்ன காரியங்கள் ஏன் நடக்கவேண்டும், அல்லது நடக்கக்கூடாது என்பது எனக்குப் புரிவதில்லை. அதனால் சகலத்தையும் நான் விதியின் வசம் ஒப்படைத்து விட்டேன். நீயும்கூட இப்படியே செய்து விடு. கடைசியில் எவனாவது ஒருவன் வந்து முஷ்டியை உயர்த்திக் கொண்டு, நம் விதி நம் கையிலே இருக்கிறதென்றும், அந்த விதியை நம் கைவசமாக்கக் கூடிய பிரயத்தனம் நம்மிடம் இருக்கவேண்டும் என்றும் சொல்லட்டும். ஆனால் எங்கே போய் விதியைக் கைவசப் படுத்துவது......?

பலவகையான புத்தகங்களை நான் வாசிக்க முயன்றேன். ரேனன் எழுதிய ஏசுநாதரின் வாழ்க்கை, ஹார்டியின் டெஸ், ரோலாந்து எழுதிய ஜீன் கிறிஸ்தோவ், அரவிந்தரின் தேவஜீவிதம், பகவத் கீதை, உபநிஷத்துக்கள், ஷேக்ஸ்பியர் நாடகங்கள், இந்திய நாட்டுக் கவிஞர்களும் ஆங்கில நாட்டுக் கவிஞர்களும், எழுதிய தேர்ந்தெடுத்த சில கவிதைகளின் தொகுப்பு முதலிய பல புத்தகங்களையும் வாசிக்க முயன்றேன். ஆனால் எல்லாம்—முக்கியமாக ஏசுநாதரின் வாழ்க்கை—என் விஷயத்தில் எதுவும் செய்யவில்லை. ஏசு ஒரு நல்ல மனிதர். நல்லவர்களிலே ஒருவர். அவர், தாம் எவற்றையெல்லாம் நம்பினாரோ அவற்றினாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டார். அவரைச் சிலுவையில் அறைந்த போது பரம பிதாவானவர் தம் அன்பில் ஒரு அணுவளவை யாவது வெளியே காட்டினாரா? வாழ்க்கைப் புதிர் எப்போதும் புதிராகவே இருந்து கொண்டிருக்கும். அதை நினைத்து ஒருவன் தொல்லைப்பட்டுக் கொண்டே இருப்பதா? இயற்கையாவது தெய்வமாவது நம்மை கீழ்க்கண்டவாறெல்லாம் கேட்காதா?

'எதற்கடா இந்த வெட்கம் கெட்டதனம்? உங்களுடைய ஆலோசனையைக் கலந்து கொண்டு உங்களைப் பெற்றுப் போட்டார்களா? பெற்றெடுத்துப் போடும்போது உங்கள் அனுமதியாவது கேட்டார்களா? கருப்பையிலே யிருந்து வெளியே வந்து, தாய்ப்பால் அருந்தி, அழுது, காலையும் கையையும் வீசி, பிறகு பெண்களை வட்டம் போட்டுக் கொண்டு அலைந்து, அவர்களில் ஒருத்தியைக் கல்யாணம் செய்தோ செய்யாமலோ—எப்படியும் உங்களுக்கு ஒரு பெண் தேவைதான்—குழந்தைகளைப் பெற்று, அவர்களை வளர்க்க அரும்பாடுபட்டு,

தொல்லை தாங்காமல் மண்டையை உடைத்துக்கொண்டு, புற்று நோயையோ, டைபாயிட் ஜுரத்தையோ, இன்புளூவன்ஸாக் காய்ச்சலையோ சம்பாதித்துக்கொண்டு, கடைசியில் இருந்த இடம் தெரியாமல் போய்விடப் போகிறீர்கள். நீங்கள் எப்படியும் போயாக வேண்டும். ஏனென்றால் புதிதாக வரக்கூடியவர்களுக்கு இங்கே இடம் வேண்டும் அல்லவா? அதனால் ஒதுங்கிப் போய்விட வேண்டியதுதான்.' இப்படிப்பட்ட நிலையில் ஒருவன் மனம் நைந்து கஷ்டப்பட வேண்டியதில்லை. சாக்ரட்டீஸ் விஷத்தை வாங்கிக் குடித்துவிட்டு, விஷக் கிண்ணத்தை எவ்வளவு அமைதியாகத் திருப்பித் தந்துவிட்டு மறைந்தாரோ, அவ்வளவு அமைதியுடன் கூடிய சுய கட்டுப் பாட்டையே சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

உண்மையில் வாழ்க்கையில் நாம் எதையாவது கற்றுத் தெரிந்து கொள்கிறோமா? எனக்கு சீக்கிரத்தில் காய்ச்சல் வந்துவிடும் போல இருக்கிறது. அந்த நிலையில்தான் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன். அதற்கு முன்னறிவிப்பாக சரீரத்தில் ஏற்படுமே ஒரு அழகான வேதனை, அந்த வேதனை உண்டாகி யிருக்கிறது; தலை கொதிக்கிறது. வயிறு என் வயிறுபோலத் தோன்றாமல், வேறு எதனுடைய வயிறு போலவோ தோன்றுகிறது. இது எல்லாம் ஏன் தெரியுமா? கொஞ்ச நாள் தாங்கமுடியாத உஷ்ணமாக இருந்தது. பிறகு நேற்று திடீரென்று மழை பெய்தது. இந்த மகத்தான பரிசுக்குப் பதிலாக ஏதாவது கொடுத்தாக வேண்டும் அல்லவா? இந்த மழையே பெய்யாமல் இருந்திருந்து, முன் போலவே நிரந்தரமாக உஷ்ணம் தகித்துக் கொண்டிருக்கும் என்று வைத்துக் கொள்ளுவோம், அத்துடன் நீயோ, நீயும் நானுமோ, வேறு எதுவுமோ இல்லை என்றும் வைத்துக் கொள்ளுவோம். அப்படியானால் தான் என்ன? நாம் இழக்கப் போவது ஒன்றுமில்லை.

கிழக்கிந்தியத் தீவுகளில் உள்ள ரப்பர் தோட்டக்காரன் பெண்களையும், நல்ல சம்பளத்தையும் நம் கண் முன்பு காட்டி, இருபது வருஷம் முதல் எண்பது வருஷம் வரையில் வேலை செய்வதாக ஒப்பந்தமும் எழுதி வாங்கி, தனக்காகவே உழைத்து, உயிர் வாழ்ந்து, பிறகு மனிதன் ஒன்றுக்கும் உதவாதவனாகப் போகும் போது செத்துப் போவதற்கும் ஏற்பாடு செய்து கொடுப்பது போலவே மனிதன் நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டான். இந்த சௌபாக்கியத்தை நாடி முட்டாள்கள் வந்து குவிந்து கொண்டிருப்பார்கள்; தாய்மாரின் கருப்பையைக் கிழித்துக் கொண்டு, சூனியமும் துன்பமும் பரவிக் கிடக்கும் இந்த வனாந்திரத்தில் வந்து கூடுவார்கள். அவர்கள் இருக்கும் வரையிலும் இந்த மனிதர்களின் சவுக்குக்கு வேலை இருந்து கொண்டே இருக்கும். இவர்கள் தாயன்புடன் மக்களைத் தங்கள் வலைக்குள் இழுக்கிறார்கள். மக்கள் தங்களோடு வெளியேறி வந்து விட்டால் அந்தத் தாயன்பை, சொத்துக்கு உடைய முதலாளி மனப்பான்மையாக மாற்றி விடுகிறார்கள். இவர்களை எல்லாம் வழி அனுப்பிக் கைகழுவ முடியும்

என்ருல்... ஆகா, அது எவ்வளவு நன்ருக இருக்கும்!...

...முடியாது! சாதாரணமாக வாழ்வதில் எனக்குத் திருப்தி யில்லை. முடிந்த மட்டும் ஒவ்வொரு கொடுமையையும் நிர்மூலமாக்க நான் விரும்புகிறேன். என்னை விட அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்களைப் பற்றி நான் சிந்தனை செய்து கொண்டிருந்தேன். நம்மை விடக் கஷ்டப்படக்கூடியவர்கள் இருக்கிருர்கள் என்று எப்போதுமே சொல்வது வழக்கம். இது, பாதுகாப்பை உத்தேசித்து பிறரை விட நாம் சுகமாக இருக்கிருேம் என்று முட்டாள் தனமாக நினைத்துக் கொள்ளும் இந்த எண்ணம், சுய திருப்தியை அளிக்கக் கூடியதாகுமா?

பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றபோதிலும் அதற்கு அடிபணியாத தைரியம் அளிக்கும் எந்த ஒரு நிர்வாண நிலையையும் நான் அடையவில்லை. நாம் நினைத்தபடி வாழ முடியாவிட்டாலும், அல்லது விரும்புகிற படி சாகமுடியா விட்டாலும், ஒன்று மட்டும்செய்யலாம். சூரியனிட மிருந்து பிரிக்கப்பட்டு, மிதிபட்டு, கீழே விழுந்ததிலிருந்து, தன்னை மிதித்தவனைச் சுற்றியே உலகம் நாட்டியமாடிக்கொண்டு வந்து, இந்தக் கோலாகலத்துடனும் திருப்தியடையாமல், தனக்கென்று ஒரு உருவமும் எடுத்து, புழுவையும் பெற்றெடுக்கத் தொடங்கி, ஐன்ஸ்டீன், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ரமண மகரிஷி முதலியவர்கள் காலம் வரையில் இருந்து வந்துள்ள முறையை தீர்க்கமாக எற்றுக் கொள்ள முடியாது என்று நாம் மறுத்துவிட முடியும். ஒரு அடி எடுத்து வைத்து முன்னல் போகவும் எனக்கு இஷ்டம் இல்லை. எவ்வளவோ காலத்துக்குப் பிறகு, பாவிகளெல்லாம் ரிஷிகளாகும் எதிர்காலத்திலும் கூட எனக்கு இஷ்டம் கிடையாது.........

ஏழாவது கடிதம்—

மே 28, 19—

......அந்த ஸ்திரீயின் கொடுமையை என்னுல் தாங்கமுடியவில்லை, நண்பா! தருமனைப் போல அவ்வளவு பொறுமையுடன் எல்லாவற்றையும் சகித்தேன். அவளோ, கௌரவம் என்ற எல்லையையே தாண்டிவிட்டாள். அவமானத்துக்காளான என் ஆண்மை திடீரென்று கொதித்துச் சீறிவிட்டது. படுமோசமாக தன் தாயாரையே பின்னிக்கொண்டு கிடக்கும் என் மனைவியையும் நான் வெறுத்தேன். அவளுடைய அந்தப் போக்குதான் என் பேடித்தனத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்டியது. ஆனுல் இனிமேல் என்னைப் பூச்சாண்டி காட்டி அடக்கி விட முடியாது.

அத்தையைப் பார்த்தேன்; கண்டபடி கதறினேன்; என் உதடுகள் அடக்கமுடியாத கோபத்தினுல் துடித்தன.

"என்னைக் கல்யாணம் செய்து கொண்டது நீயா, உன் மகளா?" என்றேன். அவள் மிகவும் எளனமாக என்னைப் பார்த்தாள். என் கோபம் கட்டு மீறிவிட்டது,

"என் வீட்டைவிட்டு வெளியேறு; இப்போதே, இந்த நிமிஷத்திலேயே வெளியேறி விடு" என்று கத்தினேன்.

அது என் குரல் அல்ல; யாருடைய குரலோ அது?

கொஞ்சம் கூடக் கலவரப் படாமல் புன்னகை செய்தாள் அத்தை.

"ராக்ஷஸி, எனக்கும் என் மனைவிக்கும் இடையிலே வந்து சந்தி மாதிரிப் படுத்துக் கொள்கிறாயே! உனக்கு நாணம் வெட்கம் கிடையாதா? ஆமை புகுந்த மாதிரியல்லவா என் வீட்டில் புகுந்து விட்டாய்? ஆனால் என்னை அடியோடு நாசமாக்க உன்னால் முடியவே முடியாது" என்று ஓலமிட்டேன்.

ஒரு நிமிஷம் மௌனம் நிலவியது; இடிமுழக்கம் போன்ற ஒரு மௌனம். என் மனைவியின் பக்கம் திரும்பிப் பார்த்தேன். என்னைச் சுட்டிக் காண்பித்துக் குற்றம் சாட்டும் விரல்களைப் போல குத்திட்டு நின்ற அவளுடைய குறு முலைகள், கண்ணுக்குத் தெரியாதவாறு படபடவென்று ஆடின. அவளை அப்படியே வாரி எடுத்து, அத்தையினால் மனித சம்பந்தம் ஏற்பட்டு விடாமல் தடுக்கப்பட்டுக் கட்டுண்டு கிடந்த அவளுடைய முலைகளின் இறுக்கத்தையும் கூர்மையையும் கைகளால் மழுங்கித் தேய்த்து விடுவதற்காகத் துடித்தேன். அவை சூடேறிப் போய்த் துடிக்கும் என் விரல்களின் கீழ் வெண்ணெய் போல உருகுவதை ரஸிக்க விரும்பினேன். நண்ப, என்னைக் காமப்பேய் பிடித்தவன் என்று நினைத்து விடாதே. என் வாலிப ரத்தம் தன் இச்சா பூர்த்திக்கு ஓலமிட்டுக் கதறியது. உலகெங்கும பரவிய இருவருளை நினைத்துப் பார்த்தேன். அப்புறம் நான் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு முன்பாகவே அவளுடைய அனாதை முகம் சுளித்து நோக்கியது. உடனே தலை குனிந்து தள்ளாடிக் கொண்டே தரையிலே சரிந்து விழுந்து விட்டாள். அவளுடைய கை கால்கள் வலித்து இழுத்துக் கொண்டு போய் விறைத்து விட்டன; வாயிலே நுரை தள்ளியது. கண்ணின் கருமணிகள் மேல் நோக்கிச் செருகின.

"ஏ, மிருகமே!" என்று கத்தினாள் அத்தை. பிரக்ஞையற்றுக் கிடந்த தன் மகளின் தலையை எடுத்து மடியில் தாங்கிக் கொண்டு, எரித்துவிடுபவள் போல என்னைப் பார்த்தாள்.

திடீரென்று உண்மை தன் கோரமான பிறந்த மேனியுடன் வெளிப்பட்டது......

என் மனைவி வலிப்பு நோய் பிடித்தவள்......

கொலைக் குற்றம் போலப் புலனாகி விட்டது உண்மை...

எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த ரகசியத்தை என்னிடமிருந்து மறைக்கலாம் என்று என் அத்தை நினைத்துக் கொண்டிருக்கிறாள்? கடைசி வரைக்குமா?

அந்தப் பாவிமகளின் நோய் ஏதாவது வரப்பிரசாதத்தால் குணமாகிவிடும் என்றும், அதன் பிறகு எங்கள் சாந்தி முகூர்த்தத்தை நடத்தலாம் என்றும் அவள் நினைத்தாளா......?

ஐயோ, அன்புமிக்க நண்பனே! இந்த உலகத்தை யாரால் மாற்ற முடியும்? எந்தப் புதுக் கடவுள் இனி அவதரித்து இதை மாற்றப் போகிறார்? கடவுளோ செத்துப் போய்விட்டார்! அம்மட்டுக்கு நல்லதுதான். ஏனென்றால் தம் வாக்குறுதி ஒன்றையாவது அந்தப் பழைய கடவுள் நிறைவேற்றவில்லை அல்லவா...?

"இலக்கிய விமர்சனம்" *

கு. அ.

கூட்டுரை வடிவமாகவோ புத்தக வடிவமாகவோ ஒரு இலக்கியத்தைப் பற்றி விமர்சனம் செய்வது மேல் நாட்டிலிருந்து நாம் கற்றுக் கொண்ட கலை. நம் நாட்டவர் ஒரு இலக்கியத்தைப் பற்றி தத்தம் உள்ளத்தில் உயர்ந்த அபிப்பிராயமோ மோசமான அபிப்பிராயமோ கொண்டிருந்திருக்கிறார்களே ஒழிய தங்கள் அபிப்பிராயத்தை ஏட்டில் எழுதி வைக்கவில்லை. மோசமான இலக்கியங்களைக் கண்டு சகிக்காமல் தம் தலையில் சீத்தலைச் சாத்தனார் எழுத்தாணியினால் குத்திக்கொண்டு சீயும் செம்பாலும் ஒழுகத் திரிந்ததாகச் சொல்லப்படும் கதையும், பற்பல வித்வான்களும் ஒரு காவிய கர்த்தரைப் பற்றி சம்பிரதாய பூர்வமாகவோ அல்லது ஆராய்ச்சி கலக்காத வெறும் பாராட்டுரையாகவோ பாடிய தனியன்களும், 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங்கில்லை...(ஆகவே) தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே' என்றும் 'நீர் எழுதிய காகித மூட்டைகளைப் பட்டமதாய்க் கட்டிவிட்டாலும் வேடிக்கை பார்ப்பவர்க்கே' என்றும் வயிற்றெரிச்சலோடு மோசமான பாடல்களைக் கண்டு பாடிய பாடல்களும், இன்னும் நாடகம் சுகமாக இல்லாவிட்டால் அவ்வப்போது கொட்டகையிலே கல் வந்து விழுவதும்—இப்படிப் பற்பல உருவற்ற முறையில்தான் நம்நாட்டில் இலக்கிய விமர்சனமோ, கலை விமர்சனமே இருந்திருப்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

ஆங்கில நாட்டில் தயவு தாட்சண்யம் பாராமல் இலக்கிய விமர்சனம் செய்திருக்கிறார்கள்; இந்தத் தயவு தாட்சண்யம் பாராமை என்பது மிகவும் முரட்டுத்தனம் என்ற எல்லை வரையிலும் கூடப் போயிருக்கிறது. 'இந்தப் புத்தகம் எழுதியவன் ஒரு முட்டாள்; மகா அயோக்கியன்', 'இந்தப் புத்தகத்தை எழுதியவன் முட்டாளாகத்தான் இருக்கவேண்டும்' என்பன போன்ற வாசகங்களும்கூட இலக்கிய விமர்சனத்தில் காணப்படும். ஜோஸப் அடிஸன் காலத்தில் 'எடின்பரோ ரெவியூ' என்ற பத்திரிகையில் வந்த சில விமர்சனங்கள் பயங்கரமாகக் கூட இருக்குமாம்.

மத்தேயு அர்னால்டு என்ற பேர் பெற்ற இலக்கிய விமர்சகன், வேர்ட்ஸ்வொர்த் என்ற கவிஞனின் ஆயிரக்கணக்கான கவிதைகளில் மூன்று கவிதைகள்தான் நல்ல கவிதைகள் என்று எடுத்து வைக்கிறான்.

ஆங்கில நாட்டைப் பொறுத்த வரையிலும் இப்படி. பிற நாடுகளைப் பற்றி நமக்கு நன்கு தெரியாது. ஆனாலும், பிற நாடுகளிலும் இலக்கியவிமர்சனம் மிகமிகக் கண்டிப்பாகவும், வேகமாகவும் இருந்திருக்கின்றன என்பதற்குச் சில அடையாளங்கள் தென்படுகின்றன. உதாரணமாக கிரேஸியா டெலாடா என்ற இத்தாலிய நாவலாசிரியை 'ஊர் ஏக்கம்' என்ற தன் நாவலுக்கு எழுதிய முகவுரையில், கடைசியாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறாள்:

"விமர்சகர்கள் வரவு செலவு இலாகா மந்திரியைப் போன்றவர்கள். எப்போதும், உண்மையாக நமக்கு எவ்வளவு சொத்து இருக்கிறதோ அவ்வளவுக்கு வரிபோடாமல் அதிகமாக வரிபோடக் கூடியவர்கள்.

ஐயோ! இந்த விமசகர்களுக்குக் கிடைத்திருக்கும் இந்தப் பயங்கரமான ஆதிக்கத்தையும் நாம் எதிர்க்க முடியவில்லையே! நம்முடைய பிதுரார்ஜிதம் கொஞ்சம்தான் என்றாலும், குறைந்த பக்ஷம் அது நமது சொந்தப் பிதுரார்ஜிதமாக இருக்கிறது அல்

* இலக்கிய விமர்சனம்: [ஆசிரியர்: சிதம்பரரகுநாதன். கிடைக்குமிடம்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூபா 2]

லவா, என்ற விஷயத்தை எடுத்துக் கூறி விமரிசகர்களின் உள்ளத்தில் பதிப வைக்க முடியவில்லையே! இந்த விமர்சகர்கள் நெஞ்சுத் துணிச்சலுடன் கேட்பதற்கெல்லாம் நாம் நிர்ப்பந்தம் தாங்காமல் இரை போட்டுக் கொண்டு வந்தால் நாம் மட்டும் பாழாய் போவதோடு விவகாரம் நிற்காது; நம் கையிலுள்ள கடைசிப் பைசா வரைக்குக் கொடுத்துத் தீர்த்தாலும்கூட அவர்கள் திருப்தி அடையப் போவதில்லை."

மேல் நாட்டில் (அற்புதமான இலக்கியங்களைச் சிருஷ்டிக்க உதவிய) இலக்கிய விமர்சனம் எப்படி இருக்கிறது என்பதை அறிய இந்த இரண்டொரு அறிகுறிகளே போதும். நம் நாட்டிலோ எந்தப் புத்தகத்துக்கும் மதிப்புரை வருகிறது என்றால் அது பாராட்டுரையாகவே இருக்கிறது; இல்லை என்றால் நேரடியாகச் சொல்லத் தயங்கிக் கொண்டு மறைமுகமாகவும் அற்பத்தனமாகவும் கிண்டல் செய்வது வழக்கமாகப் போய்விட்டது. சிலர் புத்தகத்தின் ஏதாவது ஒரு அம்சத்தைத் தேடிப்பிடித்தோ அல்லது புதிதாகச் சிருஷ்டித்தோ கொஞ்சம் பாராட்டி விட்டுத்தான் புத்தகத்தைப் பற்றி சற்று கண்டனமாக எதுவும் எழுதுவார்கள். சிலர் இலக்கியத்தைப் பற்றிக் கொஞ்சமும் தெரிந்து கொள்ளாமலும், சிலர் பிடித்தவர்களா பிடிக்காதவர்களா என்று பார்த்தும் பாராட்டவோ தூற்றவோ செய்கிறார்கள் என்பது தமிழ்நாட்டு இலக்கிய விமர்சனத்தின் கடைசி ஊழல்.

பழைய புத்தகம் என்றால் அதைத் தேவவாக்காக மதித்து எதுவுமே அதைப்பற்றிக் குறைவாக சொல்லக் கூடாதென்பது இங்கே நியதி; தமிழ்நாட்டில் இலக்கியம் மதத்தைப் பிணைந்தே வளர்ந்து வந்திருப்பதால், மத கிரந்தங்களைக் குறை சொல்லுவதால் கிடைக்கும், பரலோக தண்டனையும், நாஸ்திகப் பட்டமும் இலக்கிய விமர்சகர்களுக்குக் கிடைத்துவிடும்.

இன்றைய இலக்கிய விமர்சனத்தில் மேற்கூறிய அம்சங்கள் மட்டுமில்லை. ஒருகுறிப்பிட்ட எழுத்தாளனின் புத்தகத்தைத் தாக்கி விட்டால் அது தாக்கக்கூடிய பத்திரிகைக் காரனின் சோற்றுப் பிரச்னையிலேயே கையை வைத்துவிடுவதும் உண்டு. தாக்கிவிட்ட ஆசிரியன் வேலை பார்க்கும் காரியாலய முதலாளியிடம் ராமாயணக் கூனிமாதிரி பலர் வந்து போவதுடன், அவனுடைய எழுத்துக்கள் பிற இதழ்களிலோ புத்தகப் பிரசுராலயங்களிலோ வெளிவருவதையும், அதனால் அவன் சம்பாதிக்கும் சிறிதளவு ஊதியத்தையும் உலைவைக்கும் முயற்சிகள் நடந்தால் அதிசயப்பட ஒன்றுமில்லை. அத்துடன் குறிப்பிட்ட இடத்தில் வேலை போய் விட்டால் வேறு இடத்தில் வேலை கிடைக்க வேண்டியதையும் உத்தேசித்து 'எல்லோருக்கும் நல்லவர்களாக நடப்பவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பசியில்லாமல் சாப்பிடுவார்கள்' என்ற அபிப்பிராயமும் உதயமாகி விடுகிறது அநேகருக்கு.

இன்னும் பல சிக்கல்கள் இலக்கிய விமர்சனம் செய்வதில் உண்டு. விரிவஞ்சி இவ்வளவில் நிறுத்தி விடுவோம்.

மேற் கூறியவைபோன்ற அபாயகரமான நிலையிலும் இரண்டொரு இலக்கிய விமர்சகர்கள் மிகவும் துணிச்சலுடன் தயாதாட்சண்யம் பாராமல் இலக்கியத்தைப் பற்றித் தங்கள் கருத்தை வெளியிட்டுருக்கிறார்கள். அந்த வரிசையில் இந்த நூலாசிரியராகிய ஸ்ரீ சிதம்பர ரகுநாதன் ஒருவர். ஆனால் இவர் பிறரைவிட இன்னும் சற்று அதிகத் துணிச்சலுடன் தம் கருத்தைக் கூறியிருப்பதால், இதுவரை விமர்சனம் பண்ணிய துணிச்சல் பேர்வழிகளில் இவருக்கு முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். ஆகவே இலக்கிய விமர்சனம் என்ற இந்தப் புத்தகத்தின் பிரதான அம்சமாக இருப்பது ஆசிரியரின் துணிவுதான்.

இந்தப் புத்தகத்தில் மொத்தம் ஒன்பது கட்டுரைகள் இருக்கின்றன. அவற்றைத் தனித்தனியாகவே ஆராய்வோம்.

இலக்கிய விமர்சனம்: தமிழில் இலக்கிய விமர்சனம் செய்யும் முயற்சி முதல் முதலில் எப்போது தொடங்கியது என்பதிலிருந்து இன்றைய இலக்கிய விமர்சனங்கள் வரை இக் கட்டுரையில் நன்கு ஆராயப்பட்டிருக்கிறது. ஸ்ரீ. வ. வெ. சு. ஐயரை இன்றைய இலக்கிய விமர்சனத்துக்கு வழிகாட்டியாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். இலக்கிய விமர்சனத்தில் காணப்படும் குறைபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டி விட்டு நியாயமான முறையில் இலக்கிய விமர்சனம் செய்யும் முறையையும் எடுத்துக்காட்டுகிறார்.

கலையும் கலைமரபும்: 'கலை என்பது என்ன?' என்ற கேள்விக்குக் கட்டுரையின் முதல் பகுதியில் பதிலளிக்கப்படுகிறது. 'கலைஞன் தான் அனுபவித்தவற்றை ஏதேனும் ஒருசாதனம் மூலம் படைக்கிறான். அதுவே கலை. மனித சிந்தனையின் பரிணமமே கலை' என்ற கருத்தின் விளக்கமாக விஷயம் மிகவும் தெளிவாக ஆராயப்படுகிறது. பிளேட்டோவின் நகல் தத்துவத்தை (Theory of Imitation) ஆராய்ந்து கற்பனை நாற்காலியை விட மரத்தாலான உண்மை நாற்காலியையே நான் நம்புவேன் என்கிறார் ஆசிரியர். 'நம்புவேன்' என்பதை விட 'எனக்கு நேரடியான பயனளிக்கிறது' என்று கூறியிருக்க வேண்டும். இந்த ஆராய்ச்சியை விரிவாக ஆராய்வதென்றால் பக்கங்கள் வளர்ந்து விடுமே என்று அஞ்சி ஆசிரியர் சுருக்கி விட்டார் என்று தோன்றுகிறது. உண்மையில் இது மிகவும் விரிவாக ஆராயப்பட வேண்டிய விஷயம். கடைசியில் ஆசிரியர் கவின்கலையும் பயன்கலையும் மனித சமூகத்துக்கு அவசியம் என்று கூறுகிறார். ஆகவே மக்களுக்குப் பயன்படும் கலை என்று கூறி, சில சமூகச் சீர்திருத்த அல்லது சமூகப் புரட்சி இலக்கியங்களே இலக்கியங்கள்; பிற யாவும் இலக்கியங்களே அல்ல என்று கூறி வருகிறவர்களுக்கு இந்தக் கட்டுரை மிகவும் தெளிவு புகட்டும்.

ரயில் வண்டிக்கு டயர்

ஸ்விட்ஜர்லாந்தில் ரயில் வண்டிச் சக்கரங்களுக்கு ரப்பர் டயர் போடப் போகிறார்களாம். பதினைந்து வருஷ ஆராய்ச்சியின் பலனாக இரண்டு ரயில் வண்டிப் பெட்டிகளை டயர் மாட்டி ஓட்டுகிறார்களாம். இனி பதினைந்து வருஷ காலத்துக்குள்ளாக எல்லா வண்டிகளுக்குமே டயர் மாட்டி விடலாம் என்று கருதுகிறார்களாம்.

—பிரீ இந்தியா

கலைமரபு என்ற விஷயம் இன்று அநேகர் புரிந்து கொள்ளாத விஷயம்; மறந்து விட்ட, மறுத்து விட்ட விஷயமும் கூட. மரபை மீறி மறுமலர்ச்சி இலக்கியங்கள் சிருஷ்டிப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் பலருக்கு மரபும் தெரியாமல் கலையும் தெரியாமல் இருக்கிறது. இந்த இரண்டும், தெரியாதவனுடைய இலக்கிய சிருஷ்டி 'மலடி வயிற்று மகன் போல'த்தான் அமையும். இலக்கியங்கள் மரபை ஒட்டி இருக்கவேண்டும் என்ற விஷயத்தை ஆசிரியர் வற்புறுத்தும்போது கலையையும் மரபையும் தெளிவாக விளக்குகிறார். இந்த வகையில் இது மிகவும் முக்கியமான கட்டுரை; இன்றைய அவசியத் தேவையாகவும் உள்ள கட்டுரை.

மொழியும் தெளிவும்: என்ற கட்டுரையில் "தெளிவு என்பது எல்லோருக்கும் புரிந்து விடும்படி விஷயத்தை எழுதி விடுவதென்பதல்ல; அது முற்றிலும் முடியாத காரியம். ஒரு விஷயத்தை எளிய பாஷையில் எவ்வளவு சுலபமாக முடியுமோ அவ்வளவு சுலபமான முறையில் வெளியிடுவதுதான் தெளிவு" என்று கூறுவதைவிட "தெளி"வைப் பற்றி நன்றாகச் சொல்லிவிட முடியாது.

கவிஞன் ஒரு குடிகாரன் என்ற நான்காம் கட்டுரை, கஞ்சா மயக்கத்தைப்போன்றதொருநிலையை தம்சுகானுபவத்துக்காகச் சிருஷ்டிக்க விரும்பி கவிஞர்கள்கவிபுனைவது வழக்கமாகப் போய்விட்டாலும் வெறும் 'கஞ்சாக் கவிதை'யை ஆசிரியர் வரவேற்கவில்லை. வரவேற்க முடியாதுதான்.

இலக்கியம் பிறந்தகதை: இலக்கணத்துக்கும் இலக்கியத்துக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கும் இக் கட்டுரையை இலக்கணத்தைத் தவிர வேறொன்றும் தெரியாதிருக்கும் பண்டிதர்களும், இலக்கணமே தெரியாத மறு மலர்ச்சியாளர்களும் அவசியம் படிக்கவேண்டும். (இதற்கு எல்லாப் பண்டிதர்களும் எல்லா மறுமலர்ச்சியாளர்களும் என்று அர்த்தமல்ல) அவர்கள் தங்களைப் பற்றித் தாங்களே அறிந்து கொள்ள உதவுகிறது கட்டுரை.

கவிதை, கதை—இந்த இரண்டு கட்டுரைகளும் ஏறக்குறைய ஒரே அம்சம் உள்ளவை. கவி யம்சமும், கதை யம்சமும் நன்ருக விளக்கப்படுகின்றன. பிறகு, இன்றைய கவிஞர்களின் தராதரங்கள் என்ன என்று கூறப்படுகிறது. கதாசிரியர்களில் தலை சிறந்தவர்கள் யார் என்ற விபரத்தையும் குறிப்பிடுகிருர். கவிஞர்களின் தராதரங்களைக் காரணம் காட்டி விளக்கியிருப்பதைப்போல, கதாசிரியர்களைப் பற்றியும் விளக்கியிருக்கலாம். கதாசிரியர்களில் மறுமலர்ச்சி இலக்கியத்தின் முதல் பரம்பரையைச் சேர்ந்த சிலரைமட்டும் குறிப்பிட்டிருப்பது போதாது. அதே பரம்பரையில் இன்னும் இரண்டொரு சிறந்த கதாசிரியர்கள் உண்டு. இன்றைய இளைஞர்களில் சிறந்த கதாசிரியர்களாக உள்ளவர்களையும் குறிப்பிட மறந்துவிட்டது 'கதை' என்ற கட்டுரைக்கு ஒரு பெரிய குறை. விரிவாக எழுதவேண்டிய இந்த இரண்டு கட்டுரைகளையும் அதிகமாகச் சுருக்கிவிட்ட போதிலும், வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ஒரு உண்மையைக்கூட விட்டுவைக்காமல் பிரபலஸ்தர்களைப் பற்றிய தம் அபிப்பிராயத்தை வெளியிட் டிருக்கிருர் ஆசிரியர்.

நாடகம் என்ற கட்டுரையில் தமிழுக்கு நாடகம் அவசியம் என்பதும், இன்று தமிழில் நாடகமே கிடையாது என்பதும்தான் அடிநாதம். கடைசிக் கட்டுரையாகிய வசனம் புத்தகத்துக்கே சிகரம்.

இந்தப் புத்தகத்தைப் பற்றி பேசிகொள்ளும் பலர்,பிரபல எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் உள்ளவர்களை மிகவும் கடுமையாகத் தாக்கி அவர்களுக்கு இலக்கியமே தெரியாது என்ற முறையில் ஆசிரியர் எழுதிவிட்டாரே என்று அங்கலாய்ப்பதும், இதை விடத்துணிவாக எழுதமுடியாது என்று பாராட்டிப் பேசுவதும் காதில் விழுகிறது. இப்படிப்பட்ட வாசகங்களைவாயிலிருந்து வருவிக்கும் நியாயமான, துணிச்சலுடன் கூடிய, புத்தகத்தையே இலக்கிய அறிஞர்கள் எதிர்பார்த்தார்கள். ஆகவே இப்படிப்பட்ட இலக்கிய விமர்சன நூல் தோன்றியது— இதுமிகவும் சிறுநூல் என்ற போதிலும்கூட— தமிழ்நாட்டின் எதிர்கால இலக்கிய விமர்சனத்துக்கு, நியாயமான இலக்கிய விமர்சனத்துக்கு, ஒரு தோற்றுவாயாக அமைந்து விட்டது. அதற்காக இப்புத்தகத்தை மிகவும் பாராட்டுகிருேம். ஆனுலும் ஒன்று சொல்ல வேண்டும் ஆசிரியருடைய துணிச்சல் இன்றைய நிலைக்குப் போதவே போதாது; இன்னும் கொஞ்சம் நேரடியாகவும், தயங்காமலும், உதாரணம் காட்டி விளக்கமாகவும், உண்மைகளை எடுத்துக் கூறி இருக்க வேண்டும். இந்நூலைத் துணிந்து வெளியிட்ட பிரசுரகர்த்தர்களும் நம் பாராட்டுக்குரியவர்கள்.

காதலும் சந்திரனும்

காதல் சந்திரனைக் போன்றது; அது வளராவிட்டால் தேயத் தொடங்கிவிடும்.

—ஸெகுர்.

சிரிக்கவில்லை

○

கு. அழகிரிசாமி

ராஜாராமனுடைய குழந்தையைப் பார்க்கும் வரையில் கல்யாணத்தின் ரகசியம் அவனுக்குப் புரியவில்லை. புரிந்திருந்தாலும், உள்ளத்தைப் பாதிக்கவில்லை. கடைசியில் ஒரு நாள் புரிந்தது. புரிந்து கொண்டதால் அவன் சிரிக்கவில்லை.

மத்தியானம் இரண்டு மணி இருக்கும். ராஜாராமன் வீட்டுக்குள்ளே தனியாகப் படுத்துக் கொண்டிருந்தான். பன்னிரண்டு மணிக்குப் படுத்தவனாதலால் இரண்டு மணிக்கெல்லாம தூக்கம் கலைந்து விட்டது. நன்றாகத் தூங்கிய பிறகும் ஒரு பத்துப் பதினைந்து நிமிஷம் தூக்கமும் இல்லாமல் விழிப்பும் இல்லாமல் படுக்கையிலேயே படுத்துக் கொண்டிருப்பது ஒரு சுகமான அனுபவம். அவனுடைய தாயார் எப்போதும் இரண்டு மணிக்கெல்லாம் காப்பி போட்டு வைத்திருப்பாள். அன்று அவளைக் காணவில்லை. ஆகவே விழித்துப் பார்த்ததும், சிறிது நேரத்தில் கண்களை இலேசாக மூடிக்கொண்டு பழையபடியும் படுத்துக்கொண்டான். பழையபடியும் தூக்கம் புது அத்தியாயத்தை ஆரம்பித்தது. ஆகவே முக்கால் வாசித் தூக்கம் என்று கூடச் சொல்லிவிடலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் வாசலில் வெயிலுக்கு மறைவாகக் கட்டியிருந்த படுதாவில் ஒரு நிழல் தெரிந்தது. அம்மாதான் வருகிறாள் என்று நினைத்துக் கொண்டு அக்கறையில்லாமல் திரும்பிப் படுத்துக் கொண்டான். ஒரு நிமிஷம் கழிந்தது; இரண்டு நிமிஷம் கழிந்தது; ஐந்து நிமிஷம்கூட ஆனது. அம்மா வரவில்லை.

'அப்படியானால் யார் அது?' என்று எட்டிப் பார்த்தான் ராஜாராமன். நிழலை இப்போது காணவில்லை. உடனே எழுந்தான். வாசலில் திரையை விலக்கிக் கொண்டு பார்த்தான். வெளியே யாரையும் காணவில்லை. வெயில்தான் தகித்துக் கொண்டிருந்தது. தூங்கி விழித்த அவன் கண்கள் கூசின; நெருப்பாக எரிந்தன. வெயில் கொடுமை, கண் எரிச்சல், தாயார் காப்பி போடாமல் எங்கோ போய்விட்டது, வாசலில் வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போன ஆள் இன்னாரென்று தெரியாமல் போனது— எல்லாம் சேர்ந்து அவனுக்கு எரிச்சலை உண்டாக்கி விட்டன. கண்ணைக் கசக்கிக் கொண்டே வந்து குப்புறப்படுத்துவிட்டான். அந்தச் சந்தர்ப்பத்தில் தலையணையில் நெற்றியைத் தேய்த்துக் கொள்வது மிகவும் சுகமாக இருந்தது. சாணையிலே கத்தியைத் தீட்டுவது போல, தலையை இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் இழுத்து நெற்றியைத் தேய்த்துக் கொண்டே இருந்தான். கொஞ்ச நேரத்தில் பழையபடியும் தூக்கம் வந்துவிட்டது. பாவம்! இரவெல்லாம் விழித்திருந்த அலுப்பு! குழந்தையைப் போல நிமிஷத்துக்கு ஒரு தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தான். பழையபடியும் படுதாவில் நிழல் தெரிந்

தது. படுதாவில் உள்ள சிறு துவாரத்தின் வழியே அந்த நிழலின் கண் எட்டிப் பார்த்தது. கண் நிழலில்லை; உண்மையான கண்தான். பிறகு கொஞ்ச நேரத்தில், அந்த நிழல் பதினறு வயதுப் பெண்ணுகமாறி வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டது.

குப்புறப் படுத்துக் கொண்டிருந்த ராஜாராமனுடைய சட்டை போடாத முதுகையும், பிடரியின் மடிப்புகளையும், திரண்டு உருண்ட புஜங்களையும் பார்த்துக் கொண்டே நின்றது நிழல்—அதாவது அந்தப் பெண். பிறகு, அங்கே ஜன்னலி லிருந்து கண்ணடியை எடுத்து நேராக நிமிர்த்தி வைத்து, பக்கத்தில் கிடந்த ஒரு புதுச் சீப்பினுல் தன் தலையைப் பட்டும் படாமல் இலேசாக இழுத்துக் கொண்டாள். தலை ஏற்கெனவே வாரப்பட்டிருந்தது.

அந்தக் கண்ணடி ஒரு பொய்க்கால் குதிரை. அதன் பின்னல் அதைத் தாங்கிக்கொண்டிருக்கும் இரும்பு வளையம் காற்றடித்தாலும் 'டப்' என்று படுத்து விடும். அப்படியிருக்க சீப்பு பலமாகத் தட்டியதைப் பொறுக்குமா? கண்ணடி திடீரென்று எதிர்பாராத விதமாக சாய்ந்து விட்டது; 'டபார்' என்று சத்தமும் கேட்டது.

இவ்வளவு நேரமும் மட்டித் தூக்கம் தூங்கிய ராஜாராமன் சத்தத்தைக் கேட்டதும் 'பளிச்' சென்று திரும்பிப் பார்த்தான்.

பாப்பம்மாள் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு நின்ருள். ஒன்றுமே ஓடவில்லை. இலேசாக சிரிப்போமா என்றுகூட முயற்சி செய்தாள். சிரிப்பு வரவில்லை.

ராஜாராமனே, "என்ன சத்தம்?" என்று கேட்கவில்லை.

"எப்போ வந்தே?" என்று தான் இனிமையாகக் கேட்டான்.

தான் கண்ணடியைத் தாராளமாக எடுத்து உபயோகப் படுத்திய குற்றத்தைக் கண்டு 'என்ன சத்தம்?' என்று அவன் கேட்டால் சிரித்து மழுப்பிவிட நினைத்தாள். ராஜாராமன் இந்தக் குற்றத்தைப் பொருட்படுத்தாமல், வேறு கேள்வியைப் போட்டதால் பாப்பம்மாள் சிரிப்பதற்கு அவசியம் நேரவில்லை. உடனே அப்பாவிப் பெண்போல முகத்தை வைத்துக்கொண்டு, "இப்பத் தான் வந்தேன்" என்ருள்.

"என்ன?"

"சும்மா வந்தேன்" என்ருள் பாப்பம்மாள்.

"எப்பக் கேட்டாலும் 'சும்மா'தானு?"

ராஜாராமன் சிரித்தான். பாப்பம்மாள் சிரிக்கவில்லை. அவசியம் இல்லாமலே "நான் வீட்டுக்குப் போறேன்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

"பாப்பம்மா" என்று உரத்த குரலில், ஆனல் ரகசியம்போலக் கூப்பிட்டான் ராஜாராமன்.

அவள் "நான் போறேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

பாப்பம்மாள் இப்படித் தினமும் நாலு தடவை ராஜாராமன் வீட்டுக்குச் 'சும்மா' வருவாள். ராஜாராமன் வீட்டிலிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவனுடைய தாயார் சமையல் செய்யும் போது மிகவும் அக்கறையாக உட்கார்ந்து அவளுக்கு ஒத்தாசை செய்வாள். அவன் சொல்லாமலே பாப்பம்மாள்

காய்கறிகளை எடுத்து நறுக்கத் தொடங்கிவிடுவாள். வீட்டிலே இருப்பது ராஜாராமனும் அவனுடைய தாயாரும்—ஆக மொத்தம் உருப்படி இரண்டுதான். பாப்பம்மாளோ ஒரு கல்யாணத்துக்குக் காய்கறி நறுக்குவது போல வீட்டில் வாங்கிவைத்த காய்கறி அவ்வளவையும் நறுக்கி அம்பாரமாகக் குவித்து வைத்துவிடுவாள். இதைப் பார்த்ததும் ராஜாராமனுடைய தாயார் ஓடிவந்து,

"என்னவேலை இது பாப்பம்மா! சும்மாயிரு இன்னும் இருக்கயா? இவ்வளவும் ஒரே நாளிலே நறுக்கச்சொன்னது யாரு? எந்திரி, நல்ல வேலை செய்தே, பொம்பிளை" என்று அங்கலாய்ப்பாள்.

மிகவும் மனவருத்தத்துடன் முகத்தைக் கோண வைத்துக்கொண்டு எழுந்திருப்பாள் பாப்பம்மாள். அப்படியே தன் வீட்டுக்குப் போய்விடமாட்டாள். எழுந்து இப்படியும் அப்படியும் போய்விட்டு, புழக்கடையில் கொடியில் காய்ந்துகொண்டிருக்கும் ராஜாராமனுடைய வேஷ்டி சட்டைகளை எடுத்துக் கொண்டு வந்து வீட்டுக்குள்ளே போடுவாள். இதைப் பார்த்தால் ராஜாராமனுடைய தாயாருக்குக் குலை நடுக்கம் எடுத்துவிடும்.

"இதென்னடா அநியாயமாயிருக்கு! பார்க்கிறவுகளுக்கு இது எப்படி இருக்கும்; வீட்டுக்கு வந்த மருமக மாதிரி, இப்படி வேட்டி சட்டையைத் தூக்கிக்கிட்டு அலையுறா, இந்தப் பொண்ணு" என்று சத்தம்போட்டுச் சொல்லிவிட்டு, "அம்மா! பாப்பம்மா; ஒன்னைத்தானே! ஒங்க அம்மா கூப்பிடறாளாம், போய் என்னன்னு கேளு" என்று பொய்யைச் சொல்லி அனுப்புவாள்.

பாப்பம்மாள் வழக்கம் போலவே போகும்போது "நான் வீட்டுக்குப் போறேன்" என்று யாரையும் எதிர்பாராமல், தனக்குத் தானே சொல்லிக்கொண்டு போய்விடுவாள்.

1

ராஜாராமனுக்கு ரயிலில் புக்கிங் கிளார்க் வேலை; இந்த ஊருக்கு மாற்றிவந்து ஒரு வருஷமாகிறது. இந்த ஊர் ஒரு குட்டி டவுண். ஆனாலும் ஹோட்டல் சாப்பாடு பிடிக்காமல் தன் தாயாரை ஊரிலிருந்து அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். ஸ்டேஷனுக்கு அருகாமையிலேயே சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் ரயில்வே உத்தியோகஸ்தர்களின் வீட்டு வரிசை இருக்கிறது. அந்த வரிசையில் இரண்டாவது வீடு தான் ராஜாராமன் வீடு. அந்த ரயில்வேக் கம்பெனி வீடுகளை அடுத்தாற்போல ஒரு ஏழெட்டு வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளில் ஒரு வீட்டைச் சேர்ந்தவள் பாப்பம்மாள். அவளுடைய அப்பாவுக்கு ஒரு பலசரக்குக் கடையில் கணக்கு வேலை. அந்தக் கிழவரை ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் வீட்டில் பார்க்க முடியாது. சாப்பாட்டு நேரம் போக மீதி நேரம் கடையில்தான் பெட்டியடியில் கிடப்பார். ஆகவே வீட்டில் பாப்பம்மாளும் அவளுடைய தாயாரும்தான் இருப்பார்கள். நாளெல்லாம் வீட்டிலேயே இருப்பது பாப்பம்மாளுக்குச் சங்கடமாக இருக்கும். அதனால் பக்கத்துவீட்டுப் பெண் ஒருத்தியோடு போய் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருப்பாள். அந்தப் பக்கத்து வீட்டுப் பெண் போனமாதம் கல்யாணமாகிப்

புருஷன் வீட்டுக்குப் போய்விட்டாள். ஆகவே, பாப்பம்மாள் இப்போது ராஜாராமன் வீட்டுக்கு முன்போல ஏகதேசமாக வராமல ஓயாமல் வந்துகொண்டிருந்தாள்; வரும்போதெல்லாம் 'அம்மா'தான் வருவது!

ராஜாராமனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவல்லை. நல்ல வாட்டசாட்டமான உடம்பு. மாநிறமானாலும் பூசி மெழுகிவிட்டது போன்ற பளபளப்பான மேனி. கண்களில் ஈரம் படிந்து ஞளுஞளுவன்றிருக்கும். ஒரு வார்த்தை பேசுவதென்றால் ஆயிரம் பொன் கேட்கும், அடக்கமான பேர்வழி. எடுத்ததற்கெல்லாம் சிரிப்புவரும்; ஆனால் எல்லாம் வாய்விட்டுச் சிரிக்காத வெறும் புன்னகைதான்.

சோப்பேறித்தனம் அவனுக்கு ஒரு சுகபோகம். அதுவும் இப்போது ரயில்வேயில் வேலையானபிறகு ஒரு வாரம் ராத்திரி வேலையும ஒருவாரம் பகல் வேலையுமாகப் போய் விட்டது. இதனால், ராத்திரி வேலை நாட்களில் பகலெல்லாம் உறங்குவான். பகல்வேலை நாட்களிலோ இரவில் உறங்குவதோடு நின்றுவிடுவது கிடையாது. பகலிலும் தூக்கம் வரும். எப்படிப்பட்ட காரியத்துக்குச் சந்தர்ப்பம் கிடைத்தாலும், அந்தச் சந்தர்ப்பத்தைத் தூங்குவதற்குத்தான் பயன்படுத்துவான். பகலிலும் இரவிலும கண்கள் சொருகிப் போய் ஒரு மயக்க நிலையிலேயே இருப்பான் ராஜாராமன். அப்படி இருப்பதிலும் ஒரு கவர்ச்சி இருக்கும். சிலர் எப்படி இருந்தபோதிலும் கூட கவர்ச்சி மட்டும் அவரை விட்டுப் போகாமலே இருந்து விடுகிறது அல்லவா?

2

பாப்பம்மாள் கண்ணாடியைக் கீழே தள்ளிய நாள் போய் சுமார் பத்துப் பதினைந்து நாட்கள் ஆகியிருக்கும். நடுவிலே ஏதோ ஒரு நாள் ராஜாராமனுடைய தாயார்—அந்தப் பெரியம்மாள் அரிக்கன் லாந்தரின் மூடியைக் கழற்ற முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். அப்போது ராஜாராமனும் வீட்டில் இல்லை. சந்தர்ப்பவசமாக வந்த பாப்பம்மாள், தான் கழற்றுவதாகச் சொன்னாள். பெரியம்மாளுக்கோ லாந்தரைக் கொடுக்க இஷ்டமில்லை; ஆனால் பிடிவாதம் பிடித்துக்கொண்டு பாப்பம்மாள் பெரியம்மாளின் கையிலிருந்த லாந்தரைப் பிடித்து இழுத்தாள். உடனே அவள் சிமினியைப் பத்திரமாகக் கழற்றிக்கொண்டு லாந்தரைப் பாப்பம்மாள் கையில் கொடுத்தாள். அதை வாங்கி, பல்லைக் கடித்துக் கொண்டு மூடியைக் கழற்ற முயன்றாள். முடியவில்லை. உடனே தன் சேலை முந்தியை விரலில் சுற்றிக்கொண்டு திருகினாள். எவ்வளவோ நேரம் கழித்து மூடி 'படார்' என்று திறந்தது. ஆனால் திறந்ததோடு விவகாரம் நின்றுவிடவில்லை. லாந்தரில் கொஞ்ச நஞ்சம் இருந்த மண்ணெண்ணெயும் இருவர் மேலும் தெறித்து, பக்கத்தில் கிடந்த பாயிலும் கொட்டிவிட்டது.

"அப்போதே சொன்னேனே. கேட்டயா? கொண்டா கொண்டான்னு லாந்தலைப் பிடுங்கிக்கிட்டே?" என்று எப்போதும் இல்லாதவாறு மிகவும் அதிகமாகக் கோபித்துக்கொண்டாள் பெரியம்மாள்.

பாப்பம்மாள் மிகவும் பயந்து போனாள். அன்று முதல் அவள் ராஜாராமன் வீட்டுக்குச் சரியாக வருவதே இல்லை. அந்தத் தெருவழியாக மட்டும் பத்துத் தடவை போய் வருவாள். வாசலில் ஈஸிச்சேரில் படுத்துக் கொண்டு பேப்பர் படிக்கும் ராஜாராமனை போகும்போது ஒரு தடவையும், வரும்போது ஒரு தடவையுமாகக் கடைக் கண்ணால் பார்ப்பாள். ராஜாராமன் சிரித்தால் சிரிப்பாள். இல்லாவிட்டால், புருவத்தை இடுக்கிக்கொண்டு முகத்தை 'உம்' மென்று வைத்துக் கொண்டு போய்விடுவாள்; அப்பாவி வேஷந்தான்!

ஒரு நாள் பாப்பம்மாளுக்கு ஒரே சந்தோஷம் வந்துவிட்டது. அவள் வீட்டில் பசு கன்று போட்டுவிட்டது. இந்த அதிசயமான செய்தியைச் சொல்லுவதற்கு ராஜாராமன் வீட்டுக்கு ஓடோடியும் வந்தாள். ராஜாராமன் வாசலில் உட்கார்ந்திருந்தான். அதை அவள் லட்சியம் பண்ணவே இல்லை. விறு விறு என்று வீட்டுக்குள்ளே போய் வேர்த்து விறுவிறுக்க பசு கன்று போட்ட செய்தியைச் சொன்னாள். இது வெளியிலிருந்த ராஜாராமனுக்கு தெளிவாகக் கேட்டது. உடனே ஜன்னல் வழியாக உள்ளே திரும்பி "கண்ணுக்குட்டிக்குக் கொம்பு ரெண்டா, காலா?" என்று கேட்டான்.

"ஆமா, எட்டிருக்கும் கொயபு, ஒங்க காலத்திலே"

"அப்புறம் ரெண்டு கொம்பு தானா? அடேடே இதுக்குத் தானா இப்படி ஓடிவரணும்?"

பெரியம்மாள் சிரித்தாள். பாப்பம்மாள் வேகமாக வெளியில் வந்து ராஜாராமனுக்கு எதிரே நின்றுகொண்டாள். ஆள் வந்ததும் ராஜாராமனுடைய ஹாஸ்யம் காற்றில் பறந்துவிட்டது. பேசாமல் தலை குனிந்துகொண்டான்.

"ஒங்களுக்கு இனிமேலே பால் கொண்டுவரட்டுமா? இந்தா பாருங்கோ" என்று ராஜாராமனின் குனிந்த தலையை வாய்ச்சொல்லாலேயே நிமிர்த்த முயன்றாள் பாப்பம்மாள்.

ராஜாராமன் ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, பழையபடியும்

"பால் வேண்டாமா? உம்?" என்று ரகசியம்போல் 'குசுகுசு' வென்று சொன்னாள். எந்த விஷயத்தையும் ரகசியம்போலச் சொன்னால், அதில் ஒரு கவர்ச்சி ஏற்பட்டுவிடும். ராஜாராமனுக்கு பாப்பம்மாள் பேசப் பேச மிகவும் சுகமாக இருந்தது.

"ம்ம். பால் கொண்டுவா"

"சரி, நான் வீட்டுக்குப் போறேன்" என்று புறப்பட்டாள் பாப்பம்மாள்.

"இந்தா, இன்னிக்குக் கொண்டுவந்துடாதே, நாலு நாள் போகட்டும்" என்று எச்சரித்தான் ராஜாராமன். இவன் சொன்னதை பாப்பம்மாள் கேட்டாளோ இல்லையோ?

மறுவாரம் ராஜாராமனுக்குப் பகல் வேலை. காலையில் கொஞ்ச நேரமும், அப்புறம் சாப்பாட்டுக்காக வரும் நேரமும் தவிர, மீதி நேரமெல்லாம் அவனுக்கு ஆபீசிலேயே வேலை இருந்தது. ஆகவே அந்த வாரத்தில் பாப்பம்மாள் வந்தபோனது ராஜாராமனுக்குத் தெரியாது. பால் மட்டும் வீட்டுக்கு ஒழுங்காக

வந்துகொண்டிருந்ததைத் தெரிந்துகொண்டான்.

அதற்கு அடுத்த வாரம் இரவு வேலை வந்தது. பகலில் பாயும் படுக்கையுமாகத்தான் வழக்கம் போல வீட்டோடு கிடந்தான் ராஜாராமன். சாயங்காலக் காப்பிக்காக சுமார் நாலரை மணிக்கெல்லாம் பால் கொண்டு வந்துவிடுவாள் பாப்பம்மாள். ராஜாராமனுடைய தாயார், மதியானம் இரண்டு மணிக்கு வீட்டு வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு வெளியே போனால் அப்புறம் திரும்பிவர மணி ஐந்தாகிவிடும். எங்காவது பக்கத்து வீட்டுப் பெண்களுடன் ஓயாமல் பேசிக்கொண்டிருப்பாள். இந்த நித்திய நியதி ராஜாராமனுக்குத் தெரியும்; பாப்பம்மாளுக்கும் தெரியும். அதனால்தான் அவள் நாலரைக்குப் பதிலாக நாலு மணிக்கே பால் கொண்டுவரத் தொடங்கினாள். ராஜாராமன் தூங்கி விட்டானா என்று பாலை ஜன்னலில் வைத்துவிட்டு வந்து எட்டிப் பார்ப்பாள். அவன் முன்பெல்லாம் இந்த நேரத்துக்குத் தூங்கத்தான் செய்வான்; இப்போதோ தூங்குவதெல்லாம் வெறும் பாசாங்கு!

ஒரு நாள் நாலு மணிக்குப் பாப்பம்மாள் வாதாள். அன்று அவள் புதுப் புடவை கட்டிக்கொண்டு புது ரவிக்கையும் போட்டுக்கொண்டு வந்தாள். புடவை அலங்காரத்துக்குப் பொருத்தமாக முகத்தைத் கழுவி, சாந்துப் பொட்டு வைத்துக்கொண்டு, தலையிலே பூவும் முடித்துக்கொண்டு வந்து விட்டாள். அன்று அவளுக்கு ஒரே குதூகலம். புதுப் புடவைக்கு ஆகாத குதூகலம் வேறு எதற்கு வரப்போகிறது, பெண்களுக்கு?

ராஜாராமன் பொய்த் தூக்கத்தில் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவன் தானாகவே எழுந்துவிடுவது வழக்கம். அன்று அவன் விழிக்கும் வரையிலும் பாப்பம்மாள் சும்மா இருக்கவில்லை. கண்ணாடியை எடுத்துப் பார்த்தாள். சீப்பு இருந்தால் இன்னும் கொஞ்சம் படிய வாரிக்கொள்ளலாம் போல இருந்தது. சீப்பைக் காணவில்லை. "சரி, காணோம்; எங்கே இருக்கோ?" என்று மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

ராஜாராமனை எழுப்ப வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. எழுப்புவது எப்படி? அவனுடைய தாயார் "ராசா" என்று அவனை அழைப்பது வழக்கம். பாப்பம்மாளும் கொஞ்சம் யோசித்தாள். அப்புறம் தூங்குகிறவனுக்குக் கேட்காமல் போகிறது என்று நினைத்து, விளையாட்டாக, "ராசா" என்றாள்.

ராஜாராமனுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டான்.

"ராசா" என்று கொஞ்சம் உரக்கச் சொன்னாள். அதுவும் கொஞ்சலாகவும் ரகசியம் போலவும் இருந்தது.

சிறிது நேரம் கழிந்தது.

புத்தகத்தைப் பார்த்து படிக்கக் கூடிய தொனியில், நிமிர்ந்து நின்றுகொண்டு "ஏ, ராசா" "ஏ, ராசா" என்று மூன்று தடவை சொன்னாள்.

ராஜாராமனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. எழுந்து நின்று இலேசாகத் தலை குனிந்துகொண்டு, கண்களை மேல் நோக்கித் திருப்பிப் பாப்பம்மாளைப் பார்த்தான். தன் கிருதட்டைக்

கடித்தான். கீழுதடு கனிந்து பளபளத்தது. செப்பால் தலையைக் கோதுவதுபோல, நாலுதடவை மாறிமாறிப் பல்லால் கீழுதட்டைக் கோதிக்கொடுத்தான். 'பளீ' ரென்று பாப்பம்மாளின் கையைப் பிடித்துவிட்டான். 'அவள் கையைப் பிடிப்போம்' என்று அவன் எழுந்து நிற்கும் வரையிலும் நினைத்தது கிடையாது. பின்னால் செய்யப் போகிற காரியங்களையும் அவன் நினைத்தவனில்லை. இங்கே தலைகீழ் நியாயமாக செயலைப் பின்பற்றித்தான் யோசனையும், திட்டங்களும் உதயமாயின.

பாப்பம்மாள் ராஜாராமனின் புஜங்களினிடையில் சிக்கினாள். அவளுடைய முகத்தைத் தன் முகத்துக்கு நேராகத் திருப்பினான்; அவளுடைய கண்களை ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்தான். திடீரென்று அவளை முத்தமிட்டுவிட்டான்.

ராஜாராமனுக்கு, முத்தத்தில் சுகானுபவம் பொதிந்திருந்தது; பாப்பம்மாளுக்கோ முத்தம் குஷியாகத்தான் இருந்தது. அவளைப் பொறுத்தமட்டிலும் முத்தத்திற்காகத்தான் முத்தம்; வேறு எதற்காகவும் அல்ல!

சந்தர்ப்பங்கள் மாறின. பாப்பம்மாள் வெளியே வந்தாள், 'வெளியே சொல்லக் கூடாது'. என்ற ஜாக்கிரதைதான் பாப்பம்மாளுக்கு இருந்ததே ஒழிய முத்தத்தில் தன்னை மறந்த உணர்ச்சியோ, பெரிய பயமோ ஏற்படாது போய்விட்டன.

எதிர்பாராத விதமாக வீட்டுக்குள்ளே வந்த ராஜாராமனின் தாயாரிடம் பாப்பம்மாள் கொஞ்சங்கூடக் கல்மிஷம் இல்லாமல், "பால் கொண்டுவந்து வச்சிட்டேன்" என்று சொல்லிவிட்டு வாசல் படியில் காலெடுத்து வைத்தாள். அப்புறம் தெருவில் இறங்கும்போது அவள் தனக்குத்தானே "நான் வீட்டுக்குப் போறேன்" என்று சொல்லிக்கொண்டாள்.

அது நிலாக்காலம். இரவில் பாப்பம்மாள் ஜன்னலோரத்தில் கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டாள். ஜன்னல் கம்பி சந்திரனின் மத்தியபாகத்தில் விழும்படியாக முகத்தைத் தள்ளி வைத்துக் கொண்டாள். இரண்டு கண்களையும் குவித்து ஜன்னல் கம்பியைப் பார்த்தால் ஆகாயத்தில் இரண்டு சந்திரன்கள் இருப்பது போலிருந்தது. பளிச்சென்று வானத்தை ஏறிட்டுப் பார்த்தால் ஒரே சந்திரன்தான். சந்திரனை இரண்டாக்குவதும் பழையபடியும் ஒன்றாக்குவதுமாகப் படுத்துக்கொண்டிருந்தாள் பாப்பம்மாள். அப்போது எதிர்பாராத விதமாக உறக்கம் வந்துவிட்டது பாப்பம்மாளுக்கு. 'சரி தூங்கணும்' என்று திரும்பிப் படுத்துக் கொண்டாள். மேலே பார்த்த வாக்கில் வெறும் வெளியை இரண்டு மூன்று தடவை முத்தமிட்டாள். மிகவும் குதூகலமாக இருந்தது அவளுக்கு. 'ரொம்ப நேரமாய் விட்டதே! தூங்கணுமே' என்று ஜாக்கிரதைப் படுத்திக்கொண்டு கண்களை மூடினாள்; கொஞ்ச நேரத்தில் தூக்கமும் வந்துவிட்டது.

வழக்கம்போலவே தினமும் பால் கொண்டுவந்து வைத்துக் கொண்டிருந்தாள். மறுவாரம் ராஜாராமனுக்குப் பகல் வேலை. அதனால் அவன் வீட்டிலே இல்லை. பாப்பம்மாளுக்கு அது ஒரு ஏமாற்றமாகவும் இல்லை. 'அவர்

இருந்தால் முத்தமிடுவார்' என்று எப்போதோ ஒரு தடவை அலட்சியமாக நினைத்துக்கொண்டாள்.

3

பத்துப் பதினைந்து நாட்கள்தான் போயிருக்கும், ஒரு நாள் திடீரென்று பாப்பம்மாளுக்குக் காய்ச்சல் வந்தது. சாதாரணக் காய்ச்சலைப் போலத்தான் ஆரம்பத்தில் இருந்தது. பிறகு அந்தக் காய்ச்சலே பலத்துவிட்டது. படுத்த படுக்கையாகி விட்டாள் பாப்பம்மாள். அவளுடைய தாயார்தான் பால் கொண்டுவர வேண்டியதாய் விட்டது. பாப்பம்மாள்காளுக்கு நாள் மெலிந்து கொண்டு வருகிறாள் என்றும் சரியாகச் சாப்பிடாமல் இருக்கிறாள் என்றும் அவளுடைய தாய் சொன்னாள். ஆகவே ஒரு நாள் பாப்பம்மாளைப் பார்க்கப் போனாள் ராஜாராமனுடைய தாயார். ராஜாராமனுக்கும் போகலாம் என்று ஆசைதான். கொஞ்ச நாட்களுக்கு முன் என்றால் தாராளமாகப் போயிருப்பான். இப்போது அவன் மனதில் ஏதோ ஒரு திருட்டு உணர்ச்சி ஊசலாடிக் கொண்டிருந்தது. தான் முத்தமிட்டதன் காரணமாக பாப்பம்மாளைப் பார்க்கப்போனால், ஊரார் என்ன நினைப்பார்களோ என்று காரணமில்லாமல் பயம் தட்டுப்பட்டது அவனுக்கு. கடைசியில் அவன் போகவில்லை.

முத்தமிட்ட விஷயம் இன்னும் கொஞ்சம் அழுத்தம் பெறுவதற்கு வேறொரு காரணமும் இருந்தது. அந்தத் தினத்திற்குப் பின் நாலைந்து நாட்களில் ராஜாராமனுக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஊரிலிருந்து அவனுடைய சிற்றப்பா கடிதம் எழுதியிருந்தார். தகப்பனார் காலமாகி விட்டதால் சிற்றப்பாதான் தகப்பனார் ஸ்தானத்தில் இருந்து ஒரு பெண்ணையும் ஏற்பாடு செய்துவிட்டார். அந்தப் பெண் ராஜாராமனுக்குத் தெரியும். நல்ல பெண்தான். கட்டிக்கொள்ளவும் இஷ்டம்தான். மொத்தத்தில் ஒரு மாதத்துக்குள்ளாகவே கல்யாணம் நடக்க ஏற்பாடான மாதிரித்தான்.

கல்யாணம் ஏற்பாடானதும், பாப்பம்மாள் அந்நியப் பெண் என்றும், யாருக்கோ மனைவியாகப் போகிறவள் என்றும் ராஜாராமனுக்குத் தோன்றியது. ஒரு கன்னிப் பெண்ணை முத்தமிட்டது பிசகு என்றும் தோன்றியது அவனுக்கு. ஆகவே, பாப்பம்மாள் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்தைச் செய்யவும் அவனுக்குக் கொஞ்சம் அச்சம்தான்.

ராஜாராமனுடைய கல்யாண சமாச்சாரம் தெரிந்தது பாப்பம்மாளுக்கு. உடனே அவளுக்குச் சந்தோஷம் வந்துவிட்டது. கல்யாணவீட்டின் கோலாகலம் அவளுக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிந்தது. கொஞ்ச நேரத்தில் அவளுக்கு வேறொரு அபிப்பிராயமும் தோன்றியது. 'அவரை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டுமா?' என்று நினைத்தாள். நினைத்தால் உடனே நடந்துவிடக்கூடிய சர்வ சாதாரணமான காரியமாகத்தான் பாப்பம்மாளுக்குப் பட்டது. ஆனால் அவளுடைய தீர்மானமும் திடீரென்று மாறி விட்டது. 'அதெப்படி முடியும்? அவர் வேறே சாதி; நான் வேறே சாதி. கல்யாணம் செய்துகொள்ள முடியாதே' என்று நினைத்துக்கொண்

சக்தி நேயர்களுக்கு!

உங்களிடம் ஒரு வேண்டுகோள். சக்தி இந்த இதழில் வந்துள்ள கட்டுரைகளைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தை எழுதுங்கள். அத்துடன் சக்தியில் இன்னும் என்னென்ன புதிய விஷயங்கள் சேர்க்கலாம் என்பதையும் எழுதுங்கள். உங்கள் யோசனைகளில் சரியெனத் தோன்றுவதை அனுஷ்டிக்க முடியும்.

ஆசிரியர் சக்தி

அரசியல் நூல்கள், வரலாறுகள்

ஆசியாவின் அறை கூவல்	பல்குநன்	0	12	0
மீண்ட இந்தியா	என். ஆர். பத்மநாபன்	0	14	0
1944 முதல் இன்று வரை	ந. ராமரத்னம்	1	4	0
சோவியத் அரசாங்கம்	எஸ். ஷண்முகம்	1	8	0
சைனு எங்கே போகிறது	ஆர். ராமநாதன்	1	12	0
மகாத்மாவின் மணிமொழிகள்	என். ஆர். பத்மநாபன்	0	8	0
புகழ்ச் செல்வர்	தி. ஜ. ர.	3	0	0
புகழ்ச்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்	கே. ராஜகோபாலன்	3	0	0

தபால் செலவு தனி

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம், திருச்சினாப்பள்ளி ஜில்லா

இஞ்சிநீயரிங், ப்ரிண்டிங் ★ சம்பந்தமான தங்கள் தேவைகளுக்கு எங்களுக்கு எழுதுங்கள்

அடியில் கண்டவை விற்பனைக்குத் தயார்:—

1. "வருணு" செண்ட்ரிப்யூகல் பம்புகள், எல்லா அளவிலும்
2. E.C.E. வீட்டு உபயோகத்திற்கான எலக்டிரிக் பம்பு செட்டுகள்
3. "மார்டீசல்" குருட் ஆயில் எஞ்சின்கள்
4. "அடானு" கை ப்ரிண்டிங் இயந்திரங்கள்
5. "ஷபாரியா" எஃகு சுருள் அடைப்புகளும், அலமாரிகளும்
6. "சாண்ட்லர், பிரைஸ்" ப்ரிண்டிங் இயந்திரங்கள் முதலியன

ஜில்லா ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

நேரில் இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்:

ரிலயன்ஸ் மோட்டார் கம்பெனி

160, மவுண்ட் ரோடு :: சென்னை

டாள். உடனே 'கல்யாணத்துக்குத்தான் புதுச் சீலை கட்டி, புது ரவிக்கை போட்டுக்கிட்டுப் போகணும். அதுவரைக்கும், அந்தப் புதுச் சீலையையும், ரவிக்கையையும் அழுக்காக்கிறக் கூடாது. என் உடம்பும் அதுக்குள்ளே தாவலையாகிப் போகணும்' என்று கடவுளையும் நினைத்துக்கொண்டாள்.

4

ராஜாராமனுக்குத் தன் சொந்த ஊரிலேயே கல்யாணம் நடந்ததால், பாப்பம்மாள் புதுப் புடவையும் புது ரவிக்கையும் இருந்தும் கல்யாணத்துக்குப் போக முடியவில்லை. உடம்பெல்லாம் குணமாகிப் பழையபடியும் வீட்டிலே நில்லாமல் இங்கும் அங்கும் போய்க்கொண்டிருந்தாள்.

சில தினங்களில் ராஜாராமன் தம்பதி சமேதராய் தன் உத்தியோக ஸ்தலத்துக்கு வந்துவிட்டான். வந்த தினத்தன்று பாப்பம்மாள் வீட்டுக்குப் பலகார பண்டங்களெல்லாம் கொடுத்தனுப்பினாள் பெரியம்மாள்.

பாப்பம்மாள் முன்போலவே ராஜாராமன் வீட்டுக்கு வருவதற்கு இடையூறாக இரண்டு தடங்கல்கள் இருந்தன: ஒன்று, யாரோ ஒரு புதுப் பெண் வந்துவிட்டது. அவள் இருக்கும்போது பாப்பம்மாளுக்கு அந்த வீட்டில் நடமாடுவது அவ்வளவு உற்சாகமாயில்லை; தவிரவும் அந்த வீட்டில், தான் செய்த வேலைகளை எல்லாம் அந்தப் புதுப்பெண்ணே செய்துவந்தாள். அங்கே போய்ச் சும்மா உட்கார்ந்துகொண்டு இருப்பது எப்படி?

அடுத்தபடியாக பாப்பம்மாளின் தாயார், "இனிமேல் நீ அங்கே 'அடிக்கடி போகக் கூடாது'' என்று பாப்பம்மாளிடம் சொன்னாள்.

பாப்பம்மாளுக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. ஆனாலும் ஏகதேசமாக நாலைந்து நாட்களுக்கு ஒரு தடவைவந்து ராஜாராமன் மனைவியிடம் பூவோ, ரிப்பனோ வாங்கிக்கொண்டு போவாள்; தான் பூ வாங்கினாலும் அவளுக்குக் கொண்டுவந்து கொடுப்பாள். சில நாட்களில் ராஜாராமன் மனைவியிடம் அவளுக்கு மிகவும் பிரியம் உண்டாகிவிட்டது. தன் தாயாரிடம் எப்போதும் ராஜாராமன் மனைவியைப் பற்றி ஏதாவது சிலாகித்துச் சொல்லிக் கொண்டிருப்பாள். அவளைப் பற்றிப் பேசாவிட்டால் பாப்பம்மாளுக்கு நெஞ்சு வெடித்துவிடும்.

இப்போது பாப்பம்மாளோ அவளுடைய தாயாரோ—யாராவது ஒரு ஆள் பால் கொண்டு வருவது வழக்கம். கொஞ்ச நாட்களில் பசுவில் பால் வற்றிவிட்டது. கன்றுக்குட்டிக்கே அவ்வளவு பாலையும் விட்டுவிட்டார்கள். பால் விவகாரம் நின்றுவிட்டது.

ஆகவே ராஜாராமன் வீட்டுக்குப் பாப்பம்மாள் போவதென்றால் பழையபடியும் 'சும்மா'தான் போகவேண்டியதாய்விட்டது. ராஜாராமன் தன் மனைவியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே பாப்பம்மாளைப் பார்த்து குறும்பாக ஏதாவது சொல்லுவான். உடனே பாப்பம்மாளைத்தவிர புருஷனும் மனைவியும் சிரிப்பார்கள். பாப்பம்மாள் மனதுக்குச் சந்தோஷமாக இருக்கும். சில சமயங்களில் ராஜாராமனின் முன்னிலையிலேயே பாப்

பம்மாள் அவன் மனைவியை அதட்டுவது உண்டு. 'அப்படிச் செய்யலாமா? இப்படிச் செய்யலாமா?' என்று ஏதாவது சொல்லுவாள். ஒரு நாள் ராஜாராமனின் வேஷ்டி கொடியிலிருந்து விழுந்து தரையில் கிடந்ததைக் காட்டி, 'இதை எடுத்துவைக்கவில்லையே?' என்று அவனுடைய மனைவியிடம் புகார் பண்ணுவது போலச் சொன்னாள். பிறகு அவளே போய் எடுத்துவைத்தாள்.

ராஜாராமன் தனக்குள்ளாகவே, நினைத்துக் கொண்டான்:

'அவளுக்கில்லாத அக்கறையா பாப்பம்மாளுக்கு? நான் கண்டிப்பதைப்போல அல்லவா பாப்பம்மாள் அவளைக் கண்டிக்கிறாள்! என் விஷயத்தில் என்ன அக்கறை!'

5

ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. பாப்பம்மாள் தெருவோடு போகும்போது நாள்தோறும் ஒன்று போல ராஜாராமனைப் பார்த்துச் சிரிப்பதும், அவன் பதிலுக்குச் சிரிப்பதும், ஏகதேசமாக அவனுடைய வீட்டுக்குவந்து உரிமையுடன் நடந்து கொள்ளுவதும் நிற்கவில்லை; வழக்கம்போல நடந்துகொண்டுதான் இருந்தது. இந்தச் சமயத்தில் ராஜாராமன் மனைவி, கர்ப்பிணியாக இருந்தாள். அவள் ஊருக்குப்போய் ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. 'அடுத்த மாதம்தான் அவளுக்கு 'மாதம்'. பிறகு இரண்டு மாதங்களில் அவள் குழந்தையை எடுத்துக்கொண்டு வருவாள்' என்று ஒரு நாளைக்கு நூறு தடவை மனதுக்குள்ளேயே மாறிமாறிச் சொல்லிக் கொண்டிருந்தான் ராஜாராமன். அவனுக்குக் கனவும் நனவும் அதுதான். பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை போய் மனைவியைப் பார்த்துவிட்டு வருவதும், வாரத்துக்கு ஒரு தடவை கடிதம் எழுதுவதுமாக இருந்தான்.

அடுத்த மாதத்திலேயே குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. இந்தச் செய்தியையும் பாப்பம்மாள் கேள்விப்பட்டாள். அப்பொழுதுகூட அவளிடம் ஒரு மாறுதல் ஏற்படவில்லை. ஆனால் குழந்தையை எடுத்துக்கொண்டு ராஜாராமனுடைய மனைவி வந்ததும் கதை எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. பாப்பம்மாளுக்கு உலகமே புரண்டது போலிருந்தது.

ஒரு நல்ல நாளன்று குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள் ராஜாராமனின் மனைவி. அவள் வந்த சிறிது நேரத்திற்குள் மிகவும் உற்சாகத்துடன் ஓடோடியும் வந்தாள் பாப்பம்மாள். வந்து ஆவலோடு குழந்தையைப் பார்த்தாள். ராஜாராமனுடைய சாயலிலேயே இருந்தது குழந்தை. அதிலும் குழந்தையின் புன்சிரிப்பு ராஜாராமனின் புன்சிரிப்பேதான். தாமரை இதழ்களின் வெளி வரிசையும், உள் வரிசையும் உருவத்தில் பெரியதும் சிறியதுமாக இருந்தாலும் அமைப்பு ஒன்று போலவே இருப்பது போல இருந்தன இரண்டு பேரின் புன்னகைகளும்!

இதைப் பார்க்கும்போது பாப்பம்மாளுக்கு என்னவோ போலிருந்தது. அவளுடைய ஏதோ ஒரு நம்பிக்கை அடிப்படையோடு சாய்ந்து விழுந்து

விட்டது. ராஜாராமன் அவன் மனைவிக்குத்தான் சொந்தம் என்பதை குழந்தை ஒவ்வொரு கணமும் சிரித்துச் சிரித்து நிரூபித்தது.

ராஜாராமனுல்தான் அவள் குழந்தை பெற்ருள். குழந்தையோ அவன் குழந்தை. ஆனால் பிறந்தது அவள் வயிற்றில். கல்யாணமானல் இப்படி குழந்தை பிறக்கத்தான் செய்யும் என்பதை பாப்பம்மாள் முன்பு நினைத்ததாகத் தோன்றவில்லை; நினைக்காதது போலவும் தோன்றவில்லை. எப்படியும் குழந்தை பிறந்துவிட்டது. அப்படியானல் அவன் அவளுக்கு எப்போதோ சொந்தமாகிவிட்டான். இப்போது பாப்பம்மாள் யார்? குழந்தை பெருத பாப்பம்மாள் யார்?

எழுந்து வெளியே வந்தாள். ஒருவரோடும் ஒன்றும் பேசவில்லை. வழக்கம்போல 'நான் வீட்டுக்குப் போறேன்' என்றும் அவள் சொல்லவில்லை. மிகவும் வேகமாக வீட்டை நோக்கி நடந்தாள். வீட்டுக்குப் போய் படுக்கையில் விழுந்ததும் அவளுக்கு அழுகை வந்துவிட்டது. 'மூஸ் மூஸ்' என்று நாலைந்து தடவை அழுதாள்; விம்மினள். ஒரு நிமிஷத்திற்குள் அழுகை நின்றுவிட்டது. ஆனல் பழையபடியும் மறுநிமிஷத்தில் அழுகை வந்துவிட்டது. இப்படியே நிறுத்தி நிறுத்தி நாலைந்து தடவை அழுதுவிட்டாள்.

அவளுடைய மானசீகப் பற்று வரவுக் கணக்கில் ஒரு பெரிய தப்பு விழுந்துவிட்டது. பற்று வரவுக் கலங்களில் வரவுவைக்க வேண்டியதைப் பற்று என்றே, பற்று என்று எழுத வேண்டியதை வரவு என்றே பதிவு செய்துவிட்டாள். கணக்குப் பார்த்தால் மாறி மாறித் தப்பு விழுந்துகொண்டிருந்தது.

மறுநாள்—மறுநாள் என்ன? எல்லா நாட்களும்தான்—ராஜாராமனை அவள் பார்க்கத்தான் செய்தாள்; ஆனல் முன்போல் சிரிக்கவில்லை. ராஜாராமன் சிரித்தாலும் அவள் சிரிக்கவில்லை. அவனைப் பார்த்தால் அவளுக்கு ஐந்தாறு தடவை இமை கொட்டும். முகத்தையும் 'உம்' மென்று வைத்துக்கொள்ளுவாள். 'டூ' விட்டுக் கொண்ட குழந்தை போல, வேண்டுமென்றே கோபித்துக் கொண்டு தன் வீட்டுக்கு வந்துவிடுவாள் பாப்பம்மாள்.

*

நவீன தேகப் பயிற்சி

ஒரு நவீன தேகப் பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு ஒரு பெண் தன் வீட்டுக்கு வந்தாள். வந்து தன் தகப்பனரிடம் "இந்த உடல் பயிற்சியைப் பாருங்கள். இந்தத் தடியின் ஒரு நுனியைக் கையில் பிடித்துக்கொண்டு இதை முன்னும் பின்னும் ஆட்டப்போகிறேன். இதனல் கைகளுக்குப் பலம் உண்டாகிறது" என்ருள்.

அவளுடைய உடல் பயிற்சியைப் பார்த்த தகப்பனர் பின்வருமாறு கூறினர்:

"பேஷ், பேஷ்! அந்தத் தடியின் மறு நுனியில் வைக்கோலைக் கட்டி வைத்திருந்தால், நீ தரையை நன்ருகப் பெருக்கியிருப்பாய்."

—நீல் ஓ' ஹாரா

அனீமியா வியாதியைப் பற்றி நல்வழியில் வெளிவந்ததின் சில பகுதிகள்

அனீமியா

எம். ஐ. நீல்

அனீமியா வியாதி ஆண் பெண் இரு பாலாருக்கும் உண்டாகும். ஆனால் பொதுவாக பெண்களைத்தான் இது கொல்லுகிறது.

பிரசவ சம்பந்தமாக உண்டாகும் மரணங்களுள் மூன்றில் ஒன்று ஸெப்ஸிஸ் வியாதியினாலும், ஐந்தில் ஒன்று அனீமியா வியாதியினாலும், ஆறில் ஒன்று டாக்ஸிமியாஸ் வியாதியினாலும் ஏற்படுகிறது எனத் தெரிகிறது. பிரசவித்த தாய்மார்களைக் கொல்லும் வியாதிகளில் அனீமியா இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

இந்த வியாதியைக் குறித்து இப்பொழுது நமக்குப் போதுமான தகவல் கிடைத்திருக்கிறது. எவருமே இப்பொழுது இதனால் சாகவேண்டிய அவசியமில்லை.

முதன் முதலாகச் செய்ய வேண்டிய காரியம், ஒரு குறித்த கேசுக்கு இருக்கும் அனீமியா எந்த வகையைச் சேர்ந்தது, அது எவ்வளவு முற்றியிருக்கிறதென்று கண்டறிய வேண்டும். இதற்கு, முதலாவது இரத்தத்தைச் சோதிக்க வேண்டியது அவசியம். இரண்டாவது, சீத பேதி, மலேரியா, கொக்கிப் புழு நோய் போன்ற வேறு ஏதாவது இன நோய்கள் இருக்கின்றனவா என்று கண்டறிய வேண்டும். ஒரு வேளை இந்த இன நோய்களே அனீமியாவுக்குக் காரணமாக இருக்கலாம்; அல்லது அதற்குச் செய்கிற சிகிச்சை பயன் தராதபடி தடுத்துக் கொண்டிருக்கலாம்.

அனீமியா வியாதிக்காரருக்கு ஆஸ்பத்திரிகளிலே தனி வார்டு ஏற்படுத்திக் கொடுப்பது நல்லது. சாதாரண வார்டுகளில் கிடைக்கக் கூடியதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிகமான அளவு தூக்கமும் ஓய்வும் அவசியம்.

அவர்களுக்குச் சூரிய வெளிச்சமும் அவசியம். அவர்களைச் சுற்றி வீண் சந்தடி இருக்கக் கூடாது. இனி, அவர்களுடைய ஆகார விஷயத்தைக் கவனிக்கும் பொழுதும், அவர்களுக்குத் தனி வார்டு இருப்பது நல்லதென்று காணுகிறது. வியாதி முற்றியவர்களுக்கு ஆகாரம் கொடுப்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கும். அவர்களுக்கு அநேகமாக பசி தீபனக் குறைவு, அஜீரணம் அல்லது வயிற்றோட்டம் ஆகிய குணங்கள் இருக்கும். அவர்கள் இது வரை சாப்பிட்டு வந்த ஆகாரங்களிலே அநேக சத்துக்கள் குறைவாக இருந்திருக்கும். அந்தச் சத்துக்கள் என்னவென்று கண்டறிந்து, அவைகளைச் சரியான அளவாக கொண்ட ஆகாரத்தைக் கொடுக்க வேண்டும்.

பாலஸ்தீனப் பிரச்னை தீருவதற்குரிய மார்க்கத்தைக் காணோம். காரணம், அரேபிய-யூதப் போராட்டம் மட்டுமல்ல; வல்லரசுகளின் தீருதானங்களால் சாதாரணப் போராட்டமும் பெரிய யுத்தமாக மாறுவதற்குரிய விபரீத நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

பாலஸ்தீனப் பிரச்னை

கார்லக்கோலன்

பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இன்னொரு முயற்சி நடைபெறுகின்றது. இரண்டு வாரங்களாக யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் போர் நடந்தது. ஐ. நா. ஸ்தாபனத்தின் பந்தோபஸ்து கவுன்ஸிலின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு நான்கு வாரங்களுக்கு இந்தப் போரை நிறுத்திவைக்க இருசாராரும் ஒப்புக்கொண்டுவிட்டனர்.

பாலஸ்தீனம் 1914-18ல் நடந்த யுத்தத்தின் பின்னால் ஏற்படுத்தப்பட்ட நாடு. அந்த யுத்தத்திற்கு முன் பாலஸ்தீனம் துருக்கிய சாம்ராஜ்ஜியத்திலிருந்தது. யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுதே துருக்கியின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அளிக்கப்படும் என்று அராபியருக்கு ஆசை காட்டப்பட்டது. 1917-ல் இந்தப் பிரதேசத்தில் யூதர்கள் ஒரு தாயகத்தை ஏற்படுத்திக்கொள்வதை பிரிட்டிஷ் சர்க்கார் ஆதரிக்குமென்று மந்திரி பால்பர் என்பவர் கூறினார். இந்தப் பிரகடனம் யூதரல்லாதாருடைய அரசியல் மதாசார உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று கூறிற்று; யூதர்கள் ஒரு தனி அரசாங்கம் ஸ்தாபிக்கலாமா என்ற பிரச்னையை எழுப்பி வைத்தது. அராபியருடைய சுதந்திரம் பறிபோகும் என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிடக்கூடாது என்று இவ்வாறு பிரிட்டன் கூறிற்று. அதே சமயத்தில் யூதர்களுக்கு தான் உதவி செய்வதாகவும் பிரிட்டன் காண்பித்துக்கொள்ள விரும்பிற்று. மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் பிரிட்டிஷ் ஏஜண்டாகத் திரிந்து அராபியருடைய ஆதரவை பிரிட்டிஷார் பக்கம் திரட்டிய, டி. இ. லாரன்ஸ், "யூதர்களுக்குச் சுதந்திரம் அளிப்பதைப் பாலஸ்தீனத்திலுள்ள அராபியர் விரும்ப மாட்டார்கள். ஆனால் சர்வதேச ஸ்தாபனத்தின் ஆதரவில்லாமல் பிரிட்டிஷாருடைய ஆதரவில் யூதர்கள் குடியேறுவதை இங்குள்ள அராபியர் ஓரளவுக்கு ஆதரிப்பார்கள்" என்று எழுதினர். இந்த உபதேசமே மேற்கூறிய பால்பர் பிரகடனத்துக்குக் காரணமாகும்.

பாலஸ்தீனத்தின் ஜனத்தொகை 18 லட்சம். அதில் யூதர்கள் $5\frac{1}{2}$ லட்சம்; அராபியர் சுமார் 11 லட்சம். இது 1944 ஜனசங்கியைப்படி, 1919-ல் 85,000 யூதர்கள் தானிருந்தனர்; அப்பொழுது அராபியர்களின் தொகை 6 லட்சம். 25 வருஷ காலத்தில் கிட்டத்தட்ட 5 லட்சம் யூதர்கள் குடியேறியுள்ளனர். இன்னும் பல யூதர்கள் ஐரோப்பாவிலிருந்து குடியேறத் தயாராயிருக்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாக யூதர்களுக்குத் தாய்நாடு என்று குறிப்பிடுவதற்கு ஓரிடமும்

இல்லை. ஏசுநாதர் பிறந்தது அப் பிரதேசத்தில் தான். அவரும் ஒரு யூத குடும்பத்தில் பிறந்தவர். யூதர்கள் கிறிஸ்து பிறந்த நாள் முதல் அங்கு மிங்கும் அலைந்து திரிந்து பிழைத்து வந்த ஜாதி யினர். அவர்களுக்குத் தனி மதமும் தனிப் பாஷையுமுண்டு. ஆனால் எந்தத் தேசத்திலும் அவர் கள் தொழில் புரிந்து முன்னுக்கு வருபவர்கள். பல தேசங்களில் அவர்களைக் கண்டால் ஒரு வெறுப்பு ஏற்பட்டது; அவர்கள் பற்பல இன்னல்களுக்கும் இரை யாயினர்.

பாலஸ்தீனம் தங்களுடைய புராதனப் புனித பூமி என்று எண்ணுகின்றனர். அங்கே தங்க ளுக்குத் தாயகம் அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண் ணத்துக்குப் பற்பல நாட்டி லுள்ள யூதர்களும் ஆதரவுகாட்டு வது ஒரு புனிதக் கடமை என்ற அளவுக்கு ஏற்பட்டுவிட்டது.

ஆனால் பாலஸ்தீனப் பிர தேசத்தில் கடந்த 20 நூற்றுண்டு களாக பற்பல ஜாதியினர் வந்து போன போதிலும், தொடர்ச்சி யாக வாழ்ந்து வந்தவர்கள் அரா பியர்களே. ஆகவே தங்க ளுடைய தாய்நாட்டிலே அன்னி யர் வந்து ஆதிக்கம் ஏற்படுத்திக் கொள்வதை அராபியர் விரும்ப வில்லை.

பாலஸ்தீனம் பாலைவனமும், மலையும், காடுமுள்ள பூமி. நாட் டின் விஸ்தீர்ணத்தில் ஏழில் ஒரு பங்குதான் சமவெளி. இந்த ஏழில் ஒரு பாகத்தில் நாட்டிலுள்ள யூதர்களனைவரும் வசிக்கின்ற னர்; இந்த இடத்தில் தான் அராபியர் பாதிப்பேர் வசிக் கின்றனர்.

நாட்டில் பல இடங்களைச் சீர்படுத்தி அபிவிருத்தி செய்வதில் யூதர்களே பெரும் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். சகல தேசங் களிலிருந்தும் யூதஸ்தாபனத்துக் குப் பணம் வருகின்றது. அரா பிய நிலச்சுவான்தார்களிட மிருந்து ஏராளமான விலைக்கு நிலத்தை வாங்கி அபிவிருத்தி செய்கின்றனர். ஏழை அராபிய விவசாயிகள் பாடு திண்டாட்ட மாகி விடுகின்றது.

யூதத் தொழிலாளிகளுக்கு அராபியனைவிட அதிகச்சம்பளம். சில தொழில்களில் யூதர்களையே தான் கூலிக்கு அமர்த்துகின்ற னர். ஹைபா, டெல்—அவிவ் என்ற நகரங்களை நவீன நகரங்க ளாக அமைத்தது யூதர்களே.

1923-ல் பாலஸ்தீனத்துக்குப் பிரிட்டன் தர்மகர்த்தாவாக நிய மிக்கப்பட்டது. 1948 மே 15-ல் பிரிட்டன் பாலஸ்தீனப் பொறுப்பை விட்டுவிட்டது. இந்த இருபத்தைந்து வருஷகாலத் தில் யூத—அராபிய சண்டை சச்சரவினிடையே பிரிட்டிஷ் ஆட்சி நடந்தது. பிரிட்ட னுடைய பிரகடனமும், ஆட்சி முறையும் இப்பிரச்னையைத் தீர்க்கவில்லை; இன்னும் கொஞ் சம் தீவிரமாக்கித்தான் விட்டது.

1947-ல் பாலஸ்தீனப் பிரச்னை யைத் தீர்ப்பதற்கு ஐ. நா. ஸ்தா பனம் ஒரு கமிஷனை நியமித்தது. அந்தக் கமிஷன் நாட்டை இரண் டாகப் பிரித்துவிட வேண்டு மென்று சிபார்சு செய்தது. யூதர்களும் அராபியர்களும் பரஸ்பர நல்லெண்ணத்துடன் வாழும் நிலையிலிருந்தால், இரு சாருடைய நலன்களையும் பாது காக்கும் வகையில் ஒரே அரசாங் கத்தை ஏற்படுத்த முடியும். ஆனால் இன்றுள்ள நிலையோ வேறு. யூதர்களும் அராபியரும் 10, 15 வருஷகாலமாக பயங்கரப்

போர் புரிந்து, தீராப்பகை கொண்ட இரு கட்சிகளாகி விட்டனர். அராபியர்களை ஆதரிக்க ஸிரியா, லெபனுன், டிரான்ஸ் ஜார்டான், எகிப்து ஆகிய நாட்டு அராபியர் திரண்டுள்ளனர். யூதர்களுக்கு ஆதரவு தேட அமெரிக்காவிலுள்ள யூதர்கள் அமெரிக்க சர்க்கார் வட்டாரங்களில் வேலை செய்கின்றனர். பிரிட்டிஷாருடைய ஆதரவைப் பெற்ற டிரான்ஸ் ஜார்டான் அரசனுடைய படையும் அராபிய சுதந்திரத்துக்குப் போராடுவதாக முன்வந்து யூத—அராபிய பகையை முற்ற வைக்கின்றது.

தேசிய இனப்பிரச்னையை—பரஸ்பர நல்லெண்ணமும் நல்லுறவும் ஏற்படும் வகையில் தேசிய இனங்கள் அபிவிருத்தியடைய வேண்டிய பிரச்னையை—குழப்பமான போராட்டத்தை ஏற்படுத்தி வல்லரசுகள் தங்கள் சொக்கட்டான் ஆட்டமாக ஆக்கி விட்டன. 1947 நவம்பர் மாதத்தில் ஐ. நா. ஸ்தாபனம் பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற சிபார்சை விவாதிக்கும்பொழுது அமெரிக்கா அதை ஆதரித்தது. ஸோவியத் யூனியனும் ஆதரித்தது. ஒன்றையொன்று எதிர்த்து நின்ற இவ்விரு நாடுகளும் ஆதரிப்பதைக் கண்டு பலர் வியந்தனர். அமெரிக்காவுடன் சேர்ந்து நிற்கும் பிரிட்டன் எதிர்த்தது. அமெரிக்க சர்க்கார் யூதர்களைக் கைவிட்டு விட்டதாக இருக்கக் கூடாது என்று அம் முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனல் பிரிவினையை அமலுக்குக் கொண்டு வருவதென்றுல் அராபியருடைய எதிர்ப்பை ஐ. நா. ஸ்தாபனம் எப்படி சமாளிப்பது என்ற பிரச்னை கிளம்பியது. ஐ. நா. ஸ்தாபனத்தின் சார்பில் ஒரு சர்வதேசப்படை ஏற்படுத்தி அதன் உதவியுடன் பிரிவினையை அமலுக்குக் கொண்டு வருவதென்றுல், அப்படையிலிருந்து ஸோவியத் யூனியனுடைய சிப்பாய்களை விலக்கிவைக்க முடியாது. ஸோவியத் யூனியனுடைய சிப்பாய்கள் சேருவதை அமெரிக்கா விரும்பவில்லை. ஆகவே இப் பிரச்னை முடிவை அமலில் கொண்டுவரும் விஷயத்தில் அமெரிக்கா பின்வாங்க ஆரம்பித்தது.

பிரிட்டன் எதுஎப்படிப்போனுலும் நாங்கள் வெளியேறி விடுவோம் என்று கூறிற்று. 15—5—48-ல் பிரிட்டிஷ் படைகள் வாபஸ் வாங்கப்பட்டன. அன்றிரவே யூதர்கள் இஸ்ரேல் என்ற புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தி விட்டனர். இந்த அரசாங்கத்துக்கு அமெரிக்க அங்கீகாரம் கிடைத்தது; ஸோவியத் அங்கீகாரமும் கிடைத்தது.

ஐ. நா. ஸ்தாபனத்தின் பிரிவினை முடிவு அந்தரத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கையில், புதிய அரசாங்கம் பிறந்துவிட்டது. அதன்மீது அராபியர் போர் தொடங்கிவிட்டனர். அராபிய லீக் என்ற மத்தியக் கிழக்கு ஸ்தாபனத்தில் எகிப்து, டிரான்ஸ் ஜார்டான், ஈராக், ஸிரியா, லெபனுன், அராபியா ஆகிய நாடுகளிருக்கின்றன. டிரான்ஸ் ஜார்டான் அரசன் பிரிட்டனுடைய கையாள். அவ்வரசனுடைய படைகளுக்குப் பயிற்சி அளிப்பதும் ஆயுதங்கள் தருவதும் பிரிட்டன். 'அராபிய லீஜன்' என்ற படையில் இன்னும் 37 பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் இருக்கின்றனர்.

இந்தப் போர் நடந்து வருவதைக் கண்டு, "சமாதானத்துக்கு ஆபத்து விளைவிக்கும் நிலைமை இது" என்று பந்தோபஸ்து கவுன்சில் பிரகடனம் செய்யவேண்டுமென்று அமெரிக்கா ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. அந்த எச்சரிக்கையை ஏற்று போரை நிறுத்தாவிட்டால் ஐ. நா. ஸ்தாபனம் போரை நிறுத்துவதற்கான இதர அரசியல், பொருளாதார, இராணுவ நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்குத் தயாரில்லை என்று வாதம் செய்யப்பட்டது. இரு சாராரும் 4 வாரங்களுக்குப் போரை நிறுத்தி வைப்பது என்றும், அந்தக் காலத்தில் ஐ. நா. ஸ்தாபனத்தின் பிரதிநிதி பாலஸ்தீனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முயலவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மத்தியக் கிழக்குப் பிரதேசத்திலுள்ள எண்ணெய்ச் செல்வத்தில் அமெரிக்காவிற்கு விசேஷ அக்கறை உண்டு. அராபியாவில் எண்ணெய் ஊற்றுகளைக் காண அமெரிக்க சர்க்கார் லைசென்ஸ் பெற்றுள்ளது. ஈராக்கிலிருந்து மத்தியதரைக் கடலோரத்துக்குச் செல்லும் எண்ணெய்க் குழாய்கள் பாலஸ்தீனத்தின் வழியே செல்லுகின்றன. பாலஸ்தீனத்தின் மேற்கு எல்லை மத்திய தரைக் கடல். இந்தப் பிரதேசத்தில் ஸோவியத் யூனியனுடைய செல்வாக்கு அதிகரிக்கக் கூடாது என்பது பிரிட்டிஷ்—அமெரிக்க சர்க்கார்களுடைய விருப்பம். யூத அரசாங்கத்தைக் கைவிடுவதற்கும் அமெரிக்காவுக்கு இஷ்டமில்லை. அராபியப் படைகளுக்கு பிரிட்டிஷ் உதவி இருக்கிறது என்று அமெரிக்கப் பிரமுகர்கள் குற்றச்சாட்டு கூற ஆரம்பித்து விட்டனர். பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே உள்ள முரண்பாட்டை இந்தப் பிரதேசத்தில் நாம் ஓரளவுக்குக் காணலாம்.

இவ்வளவு சிக்கல்களுக்கிடையே பாலஸ்தீனப் பிரச்னை எப்படி தீர்க்கப்படும்? இந்த சிக்கல் முன்போல் நீடித்துக் கொண்டு போகுமே அன்றி நியாயமான வழியில் தீரும் என்று தோன்றவில்லை.

எதிர்ப்பக்கத்தில்:

'இடுப்பிலே உட்கார்ந்துகொண்டே என்ன தூக்கம்?'

படம்: கே. முத்துராமலிங்கம்

❀

நன்றி

கடற் கரையில் பக்திமான் ஒருவரைப் பார்த்தேன். அவருடைய சரீரத்தை புலி நகத்தால் கிறி விட்டது. அந்தப் புண்ணை ஆற்றுவதற்கு மருந்து எதுவும் அகப்படவில்லை. ஆகவே புண்ணின் வேதனையைச் சகித்துக் கொண்டு பின் கண்டவாறு அவர் கடவுளைத் தொழுதுகொண்டிருந்தார்:

"என்னைப் பாவத்துக்கு ஆளாக்காமல் துரதிர்ஷ்டத்துக்கு மட்டும் ஆளாக்கிய அல்லாவே, உம்மைத் தொழுகிறேன்."

—ஸாதி



படம்: எஸ். கந்தசாமி, சேலம்

அரங்கில்...

அம்பலத்தில்...



உதகை ஐ. நா. ஆசியப் பொருளாதார மகாநாட்டில் நேருஜி பேசுகிறார்.

உதகை மகாநாடு கூடிய 'ஆரன்மூர்' அரண்மனை

மாஜி பர்மியப் பிரதமரின் மனைவியார் ஸ்ரீமதி ஆங்ஸான்
புதுடில்லி தாதிகள் கல்லூரி மாணவிகளுடன்

படம் : ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

தாளா வெயில் தணிக்க
தண்ணீர் பெருகாதோ?



படம் : ஏ. எம். ஹுசேன், சென்னை

நாளேரு பூட்டுதற்கு
நல்ல மழை பேயாதோ ?



சரவண பெளி குளம்

கோ. ந. லக்ஷ்மி நாராயணன்

மைசூர் சமஸ்தானத்தில், ஹாசனம் ஜில்லாவைச் சேர்ந்த சென்னராய பட்டணம் தாலூக்காவிலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ள சரவண பெளி குளம் என்னும் இவ்வூர் தென் இந்தியாவிலேயே கீர்த்தி வாய்ந்த ஜைனஸ்தலமாகும். இங்குள்ள விந்தியகிரி, சந்திரகிரி என்ற குன்றுகளும் இவைகளுக்கு இடையே உள்ள பள்ளத்தாக்கும் இயற்கைக் காட்சிகள்

மிகுந்து பார்ப்போர் மனதைக் கவரும் சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

திறமை வாய்ந்த சிற்பியால் உண்டாக்கப்பட்ட 57 அடி உயரம் உள்ள கோமடேஸ்வரரின் சிலை விந்தியகிரிக் குன்றின் மீது பார்ப்போரை வசீகரிக்கும் சக்தி பெற்று நின்றுகொண்டிருக்கிறது. கி. மு. 1028-ம் வருஷம் மைசூரின் ஒரு பாகத்தை ஆண்டு வந்த கங்க அரசன் ராஜமல்லனின் மந்திரியான சாமுண்டராயனின் கட்டளையின் பேரில் பெயர் தெரியாத சிற்பி ஒருவனால் இச்சிலை நிர்மாணிக்கப் பட்டது.

நிர்வாணமாக நிற்கும் இச்சிலை ஒரே கல்லில் செதுக்கப்பட்டதாகும். அகன்ற தோள்களும், சிறுத்த இடையும் உள்ள இச்சிலையின் கைகள் முழங்கால்ளவுக்குத் தொங்குகின்றன. சிலையின்எல்லா பாகங்களும் அளவுக்குத் தக்கபடி அமைந்திருப்பினும் கால்கள் மாத்திரம் குட்டையாகவும் பருமனாகவும் உள்ளன. திகம்பர வகுப்பைச் சேர்ந்த சமண சன்யாசிபோல் இச்சிலை நிர்வாணமாக நிற்பினும், பார்ப்பதற்கு அழகாகவும், கம்பீரமாகவுமேதோற்றம் அளிக்கிறது. புன்னகை தவழும் முகம் தீக்ஷண்

மைசூர் சமஸ்தானத்தில் உள்ள சரவண பெளி குளம் என்னும் சமண ஸ்தலத்தைப் பற்றிக் கூறுகிறது கட்டுரை. 57 அடி உயரமுள்ள, மனிதனைவிடப் பத்து மடங்கு உயரமும் ஆகிருதியும் கொண்ட, இந்த மிகப் பெரிய கோமடேஸ்வரர் சிலை மதிலுக்கு வெளிப்புறமாகத் தெரியும் காட்சியே எதிர்ப்பக்கத்தில் தோற்றமளிக்கிறது.

யமும் தவக் களையும் பொலிந்து விளங்குவதுடன் தொழுதவருக்கு ஆத்ம சாந்தியை அளிக்க வல்லதாயும் இருக்கிறது.

சிலை பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பே உண்டாக்கப்பட்டிருந்தும், இப்போதுதான் சிற்பியின் கையினின்றும் வெளிவந்ததோ என்று நினைக்கும்படி அவ்வளவு புதுமையாகவும், பளபளப்புடன் கூடியதாயும் இருக்கிறது. காற்றோ, மழையோ, சூரியனோ இச் சிலைக்கு எவ்வித பங்கமும் இதுவரை உண்டாக்கவுமில்லை; இனிமேல் உண்டாக்கப் போவதும் இல்லை. ஒரே கல்லில் செதுக்கப்பட்ட இவ்வளவு உயரமுள்ள இச் சிலைக்கு இணையாக

சிலையின் பின்புறத் தோற்றம். மனிதனை விட எத்தனை மடங்கு பெரிதாக சிலை உள்ளது என்பதை மனிதன் பின்புறத்தில் நிற்பதைக் கொண்டு அறியலாம்.

உலகத்திலேயே வேறு ஒரு சிலை கிடையாது. மொத்தத்தில் இதை ஒரு சிற்பச் செல்வம் என்றே சொல்லலாம்.

சிலையின் மொத்த உயரம் 57 அடி. கழுத்திலிருந்து தலையின் உயரம் 7 அடி. கால்களின் நீளம் 9 அடி. கட்டை விரலின் நீளம் $2\frac{3}{4}$ அடி. 10 அடி அகலம் உள்ளது இடுப்பு. ஒரு புஜத்தினின்று மறு புஜத்துக்கு நீளம் 26 அடி. பாம்பு விரலின் நீளம் $5\frac{1}{4}$ அடி.

கீர்த்திவாய்ந்த இக் கோமடீஸ்வரருக்குப் பதினைந்து வருடங்களுக்கு ஒரு முறை மிகுந்த பொருட் செலவில் அபிஷேகம் ஒன்று நடைபெறும். இதற்கு மஹாமஸ்தகாபிஷேகம் என்று பெயர். இதைக் கண்டு களிக்க இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான சமண யாத்ரீகர்கள் வருவார்கள். தண்ணீர், இளநீர், வாழைப்பழம், சர்க்கரை, நெய், பால், தயிர், சந்தனம், பேரீச்சை, பூ முதலியவற்றைக் கலந்து ஆட்டிய மஞ்சனத்தை கோமடீஸ்வரரின் சிலைக்கு அபிஷேகம் செய்வார்கள்.

மற்றுமொரு குன்றான சந்திரகிரியின்மீது மதில் சுவரால் சூழப்பட்ட எல்லைக்குள் பன்னிரண்டு சமண பஸ்திகள் (கோவில்கள்) உள்ளன. குன்றின் அடிவாரத்தில் சமணர்களின் புண்ணிய குளமான கல்யாணி அமைந்துள்ளது. மேற்சொல்லப்பட்ட பன்னிரண்டு பஸ்திகளுள் பார்சுவநாதர் பஸ்தியும், சந்திரகுப்த மௌரியர் பஸ்தியும், சாமுண்டராயர் பஸ்தியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

கி.மு.1000, வருடத்தில் கட்டப்பட்ட பார்சுவநாதர் பஸ்தி அழகிய அலங்காரங்கள் கொண்டதாயிருக்கிறது. இதனுள் நிர்மாணிக்கப் பட்டுள்ள, சமண தீர்த்தங்கரர்களுள் ஒருவரான பார்சுவ



சந்திரகிரி குன்றின் மீதுள்ள சந்திரகுப்த மௌரியர் பஸ்தி

நாதரின் சிலை கருங்கல்லால் செய்யப் பட்டிருக்கின்றது. இதன் உயரம் 15 அடி. இதன் முன்னால் அழகாகச் செய்யப்பட்ட ஸ்தம்பம் ஒன்று நிற்கின்றது. இதன் மேல் பாகத்தில் நான்கு சமண தேவதைகளும் கீழ் பாகத்தில் நான்கு சமண தேவதைகளும் மிகவும் அழகாகச் செதுக்கப்பட் டிருக்கின்றன.

பார்சுவநாதர் பஸ்தியின் அருகில் மிகச் சிறியதான சந்திரகுப்த மௌரியர் பஸ்தி இருக்கிறது. அளவில் சிறியதாயினும் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது முக்கியத்துவம் வாய்ந்திருப்பதற்கு இதைப் பற்றி வழங்கும் சரித்திரமே காரணமாகும். இது கட்டப்படுவதற்கு சந்திரகுப்த மௌரியர் என்னும் மௌரிய வம்சத்து அரசரே காரணமாவார் என்று ஜைனர்கள் கூறுகின்றனர். இதற்கு மிகவும் அழகான வாயில் இருக்கிறது. இதன் இரண்டு பக்கங்களிலும் உள்ள கல்திரைகள் 45 சிறிய பாகங்களாக்கப் பட்டு ஒவ்வொரு பாகத்திலும் சந்திரகுப்தரின் பிறப்பிலிருந்து அவர் அரசைத் துறந்து சந்திரகிரிக் குன்றில் முக்தி யடைந்தது வரை அவர் வாழ்க்கைச் சித்திரம் பொறிக்கப்பெற்றுள்ளது. சந்திரகுப்தர் தம்முடைய அரசபோகத்தைத் துறந்துவிட்ட விஷயத்தைப் பின்வரும் கதை தெளிவாக்குகின்றது:



சந்திரகுப்தர் பஸ்திக்கு முன் உள்ள கல் ஸ்தம்பம்

ஒரு இரவு சந்திரகுப்தர் வரிசையாக 16 கனவுகள் கண்டார். இவற்றால் மிகவும் கலக்க மடைந்தவராய் அவர் பத்ரபாஹு என்னும் முனிவரிடம் சென்று இவற்றை விளக்கும்படி சொன்னார். 16-வது கனவில் அரசர் பன்னிரண்டு தலைகள் கொண்ட சர்ப்பத்தைக் கண்டதற்கு முனிவர் நாட்டில் பெரிய பஞ்சம் உண்டாகும் என்றும், அது பன்னிரண்டு வருடங்கள் நாட்டில் நீடித்திருக்கும் என்றும் கூறினார்.

முனிவர் கூற்று உண்மையானதை அரசர் மறு வருடமே கண்டார். இதைக் கண்டு மன முடைந்தவராய் அவர் அரசைத் துறந்து பத்ரபாஹு முனிவரின் சீடரானார். அரசரும், மற்றும் பன்னிரண்டாயிரம் சீடர்களும் பின் தொடர முனிவர் செழிப்பு வாய்ந்த இடத்தைத் தேடிச் சென்று கொண் டிருக்கையில் சரவணபெளிகுளத்தை அடைய அதன் செழிப்பையும் வனப்பையும் கண்டு அங்கேயே தங்கி விட்டனர். அரசரும் முனிவரும் சமண விதிப்படி சாகும்வரை பட்டினியிலிருந்து முக்தி யடைந்தனர்.

சாமுண்டராயரால் கட்டப் பட்ட சாமுண்டராயர் பஸ்தி மிகவும் அழகிய கோபுரத்தைக் கொண்டதாய் அமைந்திருக்கிறது.

வட இந்திய சமண யாத்ரிகர்கள்



விந்திய மலையின்மீது சமண யாத்ரிகர்கள். படத்தில் சந்திரகிரிக் குன்றும் கல்யாணிக் குளமும் காணப்படுகின்றன.

இங்குள்ள சமணர்களுடைய பத்திறன் பொலிந்து காணப்படு
மடம் சிற்பங்கள் மிகுந்து சிற் கின்றது.

குட்டிக் கதைகள்

வில்லியம் சரோயன்

அப்படிப்போ!

பசியின்மையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒருவனுக்கு முப்பது மைலுக்கு அப்பால் உள்ள ஒரு நீர்ச் சுனையில் தண்ணீர் குடித்தால் பசியின்மை போய், எப்பொழுதும் போல உணவு உட்கொள்ள முடியும் என்று சொன்னார்கள். முதல் நாள் பிரயாணம் அவனை அவ

னுடைய சொந்தக்காரர்கள் வீட்டில் கொண்டுவந்துவிட்டது. சொந்தக்காரர்கள் அவனை சாப்பிடச் சொன்னார்கள். அதற்கு அவன், "ஐயோ! எனக்குப் பசியே இல்லை. வேண்டுமென்றால் உங்களுடன் பந்தியில் உட்காருகிறேன்" என்று சொன்னான். பந்தியில் உட்கார்ந்து சூப்பைக் கொஞ்சம் குடித்தான், குடித்துவிட்டு, "இன்னும்கொஞ்சம் வேண்டுமென்கிறது என் வயிறு" என்றான். சூப் முடிந்ததும் அவன் எதிரில் ஒரு தட்டு நிறைய கோதுமையால் செய்த பலகாரத்தை வைத்தார்கள்.

அப்படியே எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டான். அது முடிந்த பிறகு 'மட்டன்' வறுவல் வைத்தார்கள். அதுவும் அவன் வாய்க்கு இதமாக இருந்தது. பிறகு ஒவ்வொன்றாக கூட்டு, தயிர், ரொட்டி இன்னும் மற்ற உணவுகளையும் சாப்பிடத் தொடங்கிவிட்டான். சாப்பாடு முடிந்ததும் நன்றாகத் தூங்கினான்.

காலையில் எழுந்தவுடன் சொந்தக்காரர்கள் அவனைச் சாப்பிடச் சொன்னதற்கு, "ஐயோ! என் வயிறு சரிப்படவில்லையே, எதற்கும் உங்களுடன் பந்தியில் உட்காருகிறேன்" என்று சொன்னான். இரவு சாப்பிடவிட்டதெல்லாவற்றையும் காலையில் ஒரு கையார்த்தான். காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அந்தச் சுனையை நோக்கிப் பிரயாணமானான். அவன் புறப்படுமுன் வீட்டுக்காரர்கள் சொன்னார்கள்: "உன்னுடைய வியாதி குணமாகி உன் பசி

அமெரிக்க எழுத்தாளர் வில்லியம் சரோயன், ஹாஸ்யமாக எழுதுவதில் வல்லவர். அவருடைய குட்டிக் கதைகள் நான்கின் மொழி பெயர்ப்பு.

மீண்டும் திரும்பினால், வீட்டுக்குப் போகும் போது அப்படியே வடக்கு பக்கமாகப் போய்விடு''

திருடன் வியாபாரியானான்

கையும் களவுமாகப் பிடிக்கப் பட்டாலும் தப்பித்துச் செல்லுவதில் சாதுர்ய முடையவன் என்றும், ஒரு நாள்கூடச் சிறைக்குப்போனதில்லை என்றும் புகழ்பெற்றிருந்தான் ஒரு திரு



டன். ஒரு நாள் அவன், இருபது அடி உயரம் உள்ள மதில் சுவருள்ள ஒரு பெரிய தோட்டத்தையும் அதைச் சேர்ந்த வீட்டையும் கண்டான்.

'இவ்வளவு பெரிய மதில் சுவர்களால் சூழப்பட்டிருக்கும் இந்தத் தோட்டத்தில் இதுவரையில் நாம் கண்டறியாத, உண்டறியாத பொருள்கள் எத்தனை இருக்குமோ!' என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டான்.

தோட்டத்துக்குள் விளையும் அதி அற்புதப் பொருள்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான். 'உள்ளே விளையும் பொருள்களைப் பார்க்க வேண்டும்; முகர்ந்து பார்க்கவேண்டும்; சாப்பிடவேண்டும். என் மீதியிருந்தால் விற்கக்கூட விற்கலாம்!' என்று நினைத்தான். அந்த மதில் சுவரைத் தாண்டுவது கடினமான விஷயம். அந்த வீட்டுக்குள்ளே நுழைந்துசெல்லுவதோ முடியாத காரியம். அதனால் அந்தத் திருடன் ஒரு பெரிய ஏணி தயார்செய்யத் திட்டமிட்டான்.

அப்படியே ஓர் ஏணி செய்தான். ஏணியைச் சுவரில் சாத்தி, ஏறினான். ஏறி, சுவர்மீது நின்றுகொண்டான். பிறகு ஏணியைத் தூக்கித் தோட்டத்துக்கு உட்புறமாக வைத்தான்.

'மிகவும் சுலபமான வழி!' என்று பெருமிதப்பட்டான். 'எல்லாரிடத்திலும் உள்ள ஒரு குறை என்னவென்றால், அவர்களிடம் துளிகூடக் கற்பனை இல்லாததுதான்' என்று எண்ணினான்.

ஒவ்வொரு படியாக இறங்கித் தோட்டத்தினுள் வந்துவிட்டான். ஏணியின் கடைசிப் படியைவிட்டு இறங்கி அதிசயமான மரங்களையும், அழகான செடி கொடிகளையும் நோக்கி வேகத்தோடு சென்றான். அதற்குள் ஆயுதம் தரித்த மூன்று காவலாளிகள் இவன் எதிரில் வந்து நின்றனர். திருடன் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு "புத்தம் புதிய ஏணி; 'லேசான' மூங்கில் ஏணி. விலைக்கு வேண்டுமா?" என்றான்.

உலகம் போகிற போக்கு

நாலுகால் பாய்ச்சலில் போய்க்கொண்டிருந்த கழுதையின்மேல் கழுதை ஓடும்திசைக்கு எதிர் திசையைப் பார்த்து, வால் பக்கமாகத் திரும்பி, உட்கார்ந்திருந்த ஒருவனைப் பார்த்து, "என்ன ஓக்ளான், நீ கழுதை

யின் மேல் எட்டிக்குப் போட்டியாக உட்கார்ந்திருக்கிருயே?'' என்று கேட்டார்கள்.

"இல்லையே! இந்தக் கழுதை காட்டுக்கு போகிறது. நான் வீட்டுக்குப்போகிறேன்'' என்று அவன் பதில் சொன்னன்.

முன்னல் சொல்லவில்லையே!?

திராட்சை வியாபாரி ஒருவர், தம்முடைய 500 வண்டி திராட்சையைச் சரிவர அனுப்பாததால், தமக்கு ஐம்பது ஆயிரம் டாலர் நஷ்ட மேற்பட்டு விட்டதென்றும், அதற்கு நஷ்டஈடாக ஐம்பது ஆயிரம் டாலர் வேண்டுமென்றும் ஒரு ரயில்வே கம்பெனி மீது வழக்குத்தொடுத்தார்.

ரயில்வே கம்பெனியைச் சேர்ந்த நாலுபேர் அவருடைய காரியாலயத்துக்கு வந்தார்கள். இவர்களைப் பார்த்ததும் 'சரி நமக்குச் சாதகமாகத்தான் முடியப் போகிறது' என்று நினைத்து, சந்தோஷப்பட்டார். வந்தவர்களும் 'குஷி'ப் பேர்வழிகளாக இருந்தார்கள்; தமாஷாகப் பேசுவதும் வாய்விட்டுச் சிரிப்பதுமாக இருந்தார்கள்.

திராட்சை வியாபாரி தம்முடைய விலையுயர்ந்த சுருட்டுப் பெட்டியைத் திறந்து, "கனவான்களே, சுருட்டுப் பிடியுங்கள்'' என்ருர். ஒவ்வொருவரும் சுருட்டை எடுத்துக் கொண்டனர்.

பிறகு, திராட்சை வியாபாரி சொன்னர்: "சரி, இனி வந்த காரியத்தைக் கவனிப்போம்.''

வந்த நால்வரில் வயது முதிர்ந்தவர் ஒருவர் சொன்னர்: "மிஸ்டர் கார்கார்லாயன் உங்களுடைய கோரிக்கையைச் சிரத்தையோடு ஆராய்ந்தோம். ஆனல், ஒரு செப்புத் தம்படி கூடத் தரமுடியாது என்பதைத் தெரிவிக்கவே நாங்கள் வந்தோம்.''

திராட்சை வியாபாரி தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து

தாவிக் குதித்தார்; கோபமாகச் சீறினர். "என்னுடைய சுருட்டை எடுக்குமுன் இந்த விஷயத்தை ஏன் சொல்லவில்லை? உலகத்திலே மரியாதையே கிடையாதா?'' என்ருர்.

உங்கள் ஊரில்

'சக்தி' தவராது கிடைக்கிறதா? அப்படிக் கிடைக்கவில்லையானால் தயவு செய்து கீழ்க் கண்ட மனுவைப் பூர்த்தி செய்தனுப்புங்கள். 'சக்தி' தவராது கிடைக்கும்.

ஊர்...............................

தேதி.............................

சக்தி காரியாலயம்
சென்னை—14.

சக்தி மாத வெளியீட்டிற்கு என்னை சந்தாதாராகச் சேர்த்துக்கொள்ள வேண்டியது ஒரு வருஷத்திற்குரிய / இரண்டு வருஷத்திற்குரிய சந்தாத்தொகை ரூ. ஆறு / பதினொன்று மணியார்டரில் / போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

தங்கள்,

பெயர் (தெளிவாக)..

தெரு...

ஊர்ப்பெயர்..

ஜில்லா..

இந்தப் புத்தகம்தான்

★

வந்தவர்: ஐயா, காந்திஜியைப் பற்றிய ஏதாவது நல்ல புத்தகம் இருக்கிறதா? ஏதோ பாட்டு வடிவத்திலே ஒரு புத்தகம் வெளியாயிருக்கிறது, ரொம்ப நல்ல புத்தகம் என்று பக்கத்து வீட்டுக்காரர் சொன்னாரே, அப்படி ஏதாவது வந்திருக்கிறதோ? காந்திஜி மறைந்த சமயத்தில்கூட ரேடியோவில் பாடினார்களே அந்தப் புத்தகம்தான் என்று நினைக்கிறேன்.

கடைக்காரர்: ஓ! காந்தி மகான் கதையைத்தானே கேட்கிறீர்கள்? கோத்தமங்கலம் சுப்பு பாடியது. ரொம்ப நல்ல புத்தகம். எல்லோரும் வாங்கிப் படிக்கிறார்கள். கிராமவாசிகள் பழைய காலப் பாட்டுக்களைப் போலப் படிப்பதற்காக, காந்தி மகான் கதையைத்தான் வாங்கிப் போகிறார்கள். இந்த அழகான பெரிய புத்தகத்திற்கு ஐந்தே ஐந்து ரூபாய்தான் விலை. சென்னை சக்தி காரியாலயத்தார்தான் வெளியிட்டது. ரொம்ப நல்ல புத்தகம். படித்துப் பாருங்கள் சிரிப்பீர்கள். உடனே கோபம் வரும். உடனே அழுகையும் வரும். இந்தியா சுதந்திரம் அடைந்த கதைதான் இது.

வந்தவர்: இந்தப் புத்தகம்தான். காந்தி மகான் கதை என்று பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார். ரொம்ப நல்ல புத்தகம்தான் போலிருக்கிறது. சரி, ஒரு மூன்று புத்தகம் பில் போடுங்கள். அட்டையிலுள்ள காந்திஜி படத்திற்கே ஐந்து ரூபாய் கொடுக்கலாம் போலிருக்கிறது.

★

ராய்ட்டர் என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவர்தான் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தின் ஸ்தாபகர். அவருடைய ருசிகரமான வாழ்க்கை வரலாறும், ஸ்தாபனத்தின் வரலாறும் இங்கே கொடுக்கப் பெற்றுள்ளன. ஹேரி மேக்னிகோலின் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டது.

ராய்ட்டரின் வரலாறு

ஜி. செல்லையா

நீங்கள் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கிறீர்கள். அப்போது ஒவ்வொரு செய்தியின் கீழும் ராய்ட்டர் என்றோ, ஏ. பி. என்றோ, யு. பி. என்றோ போட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். ராய்ட்டரும் ஏ. பி. யும் இன்னது என்று எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று சொல்லுவதற்கில்லை. பலருக்கு ராய்ட்டர் என்றால் ஒரு செய்தி ஸ்தாபனம் என்று மட்டும் தெரிந்திருக்கும். ஆனால் இச்செய்தி ஸ்தாபனம் எப்படித் தோன்றியது, எப்படி வேலை செய்கிறது, இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்தியது யார்—இவை போன்ற பல விபரங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்க முடியாது. ஆனால் இந்த விபரங்கள் முக்கியமானவை; ருசிகரமானவையும் கூட.

மகாயுத்தம் தொடங்கிவிட்டது அல்லது முடிந்துவிட்டது என்றும், துருக்கியில் பூகம்பத்தினால் பெரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டது என்றும், பிரான்ஸ் தேசத்தில் ஒரு பெண் ஏககாலத்தில் ஐந்து பிள்ளைகளைப் பெற்றாள் என்றும்—இப்படிப் பலவிதமான செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இந்தச் செய்திகளை யாராவது ஒரு நபர் அல்லது பல நபர்கள் திரட்டி அனுப்பாவிட்டால் பத்திரிகைகளுக்கு எப்படிக் கிடைக்கும்? தவிரவும் ஒரு சம்பவம் நடை பெற்று ஒரு சில மணி நேரங்களுக்குள்ளாக உலகத்திலுள்ள பல பத்திரிகைகளுக்கும் அந்தச் சம்பவத்தைப் பற்றிய தகவல் கிடைத்துவிடுகிறது. உதாரணமாக மகாத்மா காந்தி டில்லியில் மாலை ஐந்தரை மணிக்கு அமரத்துவம் பெற்றார் என்ற செய்தியை, சென்னைப் பத்திரிகைகளில் சில இரவு எட்டு மணிக்குள்ளாகப் பிரசுரித்துவிட்டன. உலகப் பத்திரிகைகள் யாவுமே சில மணி நேரங்களில் அச்செய்தியை வெளியிட்டன. இவ்வளவு சீக்கிரமாக செய்தி உலகின் நாலா பக்கங்களுக்கும் போகவேண்டும் என்றால், செய்திகளை அனுப்புவதற்கென்றே ஒரு பெரிய ஸ்தாபனம் வேலை செய்தாகவேண்டும்.

பண்டித நேரு கோயமுத்தூரில் ஆற்றும் சொற்பொழிவையும், பொதுக் கூட்டத்தின்

சிறப்பையும் சகல விபரங்களுடன் எழுதியனுப்ப ஒவ்வொரு பத்திரிகையும் ஒரு பிரதியேக நிருபரை அனுப்பமுடியும். ஆனல் உலகின் பல பகுதிகளிலும் நடக்கும் சிறு சிறு சம்பவங்களையும் எழுதியனுப்ப நிருபர்களை அனுப்பிக்கொண்டிருக்க முடியாது. அப்படியானல் ஒரு பத்திரிகைக்குக் கணக்கற்ற நிருபர்கள் தேவையாகப் போய்விடும். அந்த நிருபர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமானல் ஒவ்வொரு பத்திரிகைக்கும் மாதா மாதம் பல லட்சங்கள் லாபம் கிடைக்கவேண்டும். இது சாத்தியமா? ஆகவேதான் பத்திரிகைகளுக்குச் செய்திகள் சேகரித்துக் கொடுக்க ஒரு தனி ஸ்தாபனம் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட செய்தி ஸ்தாபனங்களில் இன்று உலகிலேயே முக்கிய ஸ்தானத்தை வகிப்பது ராய்ட்டர் ஸ்தாபனம்.

பழைய காலத்தில் செய்தி அனுப்புவதற்குத் தூதுவர்களை அனுப்புவார்கள. அவன் குதிரைமேலேறிப் போனலும் கூட மிகவும் காலதாமதமாகும்.

பூர்வீக இத்தாலியர்கள்—ரோமானியர்கள்—செய்திகளை அனுப்ப வேருெரு தந்திரத்தைக் கையாண்டார்கள. இங்கிலாந்து அவர்களுடைய ஆட்சியில் இருக்கும் போது, அந்நாட்டின் கீழ்க் கடற்கரையில் சில நிலையங்களை அமைத்து அங்கிருந்துகொண்டு பகைவர்கள் படை எடுத்து வரும் செய்தியைத் தெரிவிக்கப் புகையைக் கிளப்புவார்கள்; அல்லது நெருப்பைக் கொளுத்துவார்கள். இதைக் கண்டதும் பகைவர்கள் வந்துவிட்டார்கள் என்ற செய்தியைத் தூரத்திலுள்ளவர்கள் அறிந்து தயாராகிக்கொள்ள வேண்டும். இங்கிலாந்தின் மீது ஸ்பெயின் மன்னன் பிலிப்பின் கப்பல்படை படைஎடுத்து வந்தபோதும், நெப்போலியன் இங்கிலாந்தை வெல்ல முயன்றபோதும் மேற்கண்ட தந்திரத்தை ஆங்கிலேயர்கள் கையாண்டார்கள். ஆனல் மேற்கண்ட தந்திரம் சமிக்ஞை காட்டும் சாதனமாகப் பயன்பட்டதே ஒழிய செய்தி ஸ்தாபனமாகிவிடவில்லை.

பிறகு பல கோபுரங்களின் மேல் கைகாட்டிகளை அமைத்து அவற்றை ஆட்டுவதன் மூலம் செய்தி அனுப்பினர்கள். இந்தச் சமிக்ஞையைக் கண்டு இன்னது தான் விஷயம் என்று புரிந்து கொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஒரு கோபுரத்தின் கைகாட்டி அசைந்ததைப் பார்த்ததும பக்கத்திலுள்ள கோபுரத்தில கைகாட்டியை அசைப்பார்கள். இப்படியே கோபுரத்துக்குக் கோபுரமாக செய்தி பிரயாணம் செய்யும். கோபுரம் என்ருல் கோவில் கோபுரமல்ல; கோபுரம் போன்ற உயரமான ஒரு கோரிதான். நம் நாட்டிலும்கூட இந்தமாதிரியான ஓர் உபாயத்தைக் கையாண்டிருப்பதாகக் கூறுவார்கள்.

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கருக்கு ஸ்ரீ வில்லிபுத்தூரில் எழுந்தருளியுள்ள ஆண்டாளிடம் மிகுந்த பக்தி. இதனல், ஸ்ரீ வில்லிபுத்தூர் கோவிலில் காலை நேரப்பூஜையான தகவலை அறிந்துதான் திருமலை நாயக்கர் சாப்பிடுவாராம். இந்தத் தகவலைத் தெரிவதற்காக திருமலை நாயக்கர் ஓர் உபாயம் செய்தாராம். ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து மதுரை வரைக்கும் பக்கம் பக்கமாக அநேக கோவில்களைக் கட்டினுராம். ஸ்ரீ வில்லிபுத்தூர் கோவி

லில் மணி ஓசை கேட்டதும், அடுத்தாற் போலுள்ள கோவிலில் மணியை அடிப்பார்களாம். இப்படியே ஒரு கோவிலின் மணிச் சப்தத்தைக் கேட்டு பக்கத்தூர்க் கோவிலில் மணியடிப்பதன் மூலம், மதுரைக்குப் பூஜையான தகவல் தெரிந்துவிடும் அல்லவா? உடனே திருமலை நாயக்கர் சாப்பிட உட்காருவாராம். இந்தக் கஷ்டமெல்லாம் இல்லாமல் காலையில் எட்டுமணிக்குத் தம் உத்தியோகஸ்தர் ஒருவரின் மேல் பார்வையின் கீழ் ஸ்ரீ வில்லிபுத்தூரில் பூஜையாகும்படி உத்தரவு போட்டுவிட்டு, எட்டரை மணிக்கு எதையும் எதிர்பாராமல் திருமலைநாயக்கர் இலைபோட்டால் என்ன, என்று கேட்கலாம். அது வேறு விஷயம்! கட்டபொம்மு காலத்திலும் திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி வரையில் பூஜையான செய்தியைத் தெரிவிக்க இதேபோன்ற ஓர் ஏற்பாடு இருந்ததாம்.

மேற் கூறியவை போன்ற உபாயங்கள் தபாலைவிடச் சீக்கிரத்தில் செய்தியை அறிவித்து வந்தன புறாக்களின் காலில் சீட்டுக்களைக் கட்டிவிட்டு யுத்தச் செய்திகளைத் தெரிந்துகொண்டதாகச் சரித்திரங்களிலும், காதல் செய்திகளைத் தெரிந்து கொண்டதாகக் கதைகளிலும் படித்திருக்கிறோம்.

பிறகு தந்தி கண்டுபிடிக்கப்பட்டது. தந்திக்குப் பிறகு கம்பியில்லாத் தந்தி வந்தது. எந்த வழியிலும், செய்திகளை அனுப்பவேண்டும் என்றால் முன்கூட்டிச் சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தச் சேகரிப்பு வேலையில் ஈடுபட்டவர்களில் பிரசித்தமானவர் ராய்ட்டர். இவருடைய முழுப் பெயர் பால் ஜூலியஸ் ராய்ட்டர் என்பதாகும். இவர் யூதஜாதியினர். 1816-ம் வருஷத்தில் ஜெர்மனியில் காஸல் என்ற நகரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் இவருடைய பதின்மூன்றாம் வயதிலேயே இறந்து போனார். ஆகவே ஜீவனோபாயமாக, இவர் காட்டிங்கன் என்னும் ஊரில் தம் சிற்றப்பாவின் பாங்கியில் வேலை பார்த்தார். அந்த ஊர் சர்வகலாசாலையில் வான சாஸ்திரப் பேராசிரியராக கௌஸ் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் கணிதத்திலும், பௌதிக சாஸ்திரத்திலும் வல்லவர். அந்தச் சமயத்தில் அவர் மின்சாரத் தந்தியைக் கொண்டு பல பரிசோதனைகள் செய்துகொண்டிருந்தார். அவருடைய நட்பைப் பெற்றார் ராய்ட்டர். தந்தியில் அவருடைய கவனம் சென்றது.

1845-ல் ஒரு பாங்கிக்காரரின் மகளை மணந்துகொண்டார் ராய்ட்டர். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவர் கொஞ்சம் பணம் கடன் வாங்கி ஒரு புத்தக விற்பனைக் கம்பெனியில் பங்குதாரராகச் சேர்ந்தார். புத்தக வியாபாரத்தில் ராய்ட்டருக்கு இஷ்டமில்லை; சுறுசுறுப்பற்ற தொழிலாக இருந்தது அது.

பாங்கிக்காரர்களுக்குப், மற்றும் பணத்தைச் சுற்றவிட்டே தொழில் செய்பவர்களுக்கும். பொதுமக்களுக்குத் தெரிவதற்கு முன்பாகவே வியாபார சம்பந்தமான செய்திகள் கிடைப்பது இன்றுபோலவே அன்றும் அவசியமாக இருந்தது. பொதுமக்களுக்கு முன்னாடியே அவர்களுக்கு வியாபாரச் செய்திகள் கிடைப்பதன் மூலம், வியாபாரத்

தில் அவர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும். இதை அறிந்த ராய்ட்டருக்கு இப்படி முன் கூட்டிச் செய்தியைக் கொடுக்கும் தொழிலைத் தொடங்கினல் என்ன, என்று தோன்றியது. ஆகவே 1849–ல் தம் புத்தக வியாபாரத்தைக் கட்டி வைத்து விட்டு ஐக்ஸ் — லா — சாப்பலில் (இப்போது இந்த ஊருக்கு வச்சன் என்று பெயர்) ஒரு சிறு ஆபீஸ் திறுவினர். பிறகு உள்ளூரிலுள்ள ஒரு லேவாதேவிக்காரரிடம் போய் செய்திகளைக் கொண்டுசெல்லுவதில் பழக்கமுடைய இருபது ஜோடி புறுக்களை வாங்கிவந்தார். தம் தொழில் முறைக்கு உதவியாக ஒரு நண்பரையும் சேர்த்துக் கொண்டார். அவர் பிரஸல்ஸ் (பெல்ஜியத்தின் தலைநகர்) நகரத்தில் 'ஸ்டாக் புரோக்க'ராக இருந்தார். ஆகவே ஐக்ஸிலுள்ள வியாபாரிகளுக்குப் பயன்படும் வியாபார சம்பந்தமான செய்திகளை அனுப்ப அவரால் முடியும். ராய்ட்டர் தினந்தோறும் பிரஸல்ஸ் நகருக்குச் செல்லும் தபால் வண்டியில் ஒரு கட்டுக்குள் இரண்டு புறுக்களை வைத்து, தம் நண்பரின் விலாசத்தையும் அதில் ஒட்டி அனுப்புவார். புறுக்கள் அங்கே போனதும் அந்த நண்பர் அங்குள்ள விலை விபரங்களை எழுதி பட்டுத் துணியில் வைத்துத் தைத்து அதைப் புறுக்களின் கால்களில் கட்டி அனுப்பிவிடுவார்.

புறுக்கள் வந்து சேர்ந்ததும், ராய்ட்டரும் அவர் மனைவியும், பட்டுத் துணிக்குள் இருக்கும் செய்தித் தாளை எடுத்து, அதைப் பார்த்து பல பிரதிகள் தயார் செய்து உள்ளூர் வியாபாரிகளுக்கு அவற்றை அனுப்புவார்கள். இந்த சௌகரியம் கிடைத்ததற்காக அவருக்கு வியாபாரிகள் பணமும் கொடுத்தார்கள்.

இங்கிலாந்து அப்போது தொழிலில் வளர்ச்சி பெற்ற நாடாகத் திகழ்ந்தது. தவிரவும் அது நெப்போலியனுடைய ராணுவம் கால்வைக்காத பூமியாதலால் எவ்வகையிலும் சீர் குலையாமல் இருந்தது.

லண்டனுக்கும் பாரிஸுக்கும் அப்போது தந்தித் தொடர்பை ஏற்படுத்தினர்கள். பாரிஸிலிருந்து மற்ற ஐரோப்பிய நகரங்களுக்குத் தந்தி சம்பந்தம் உண்டு. தொழில் வளர்ச்சி பெற்ற இங்லாந்துக்குப் போனல், அங்கிருந்து செய்திகளை எதிர்பார்க்கும் ஐரோப்பிய வியாபாரிகளுக்குச் செய்தி அனுப்பிக் கொண்டே இருக்கலாம் என்று நினைத்து, 1851–ம் வருஷத்தில் ராய்ட்டர் தம் சொத்துக்களை விற்றுவிட்டு ஐக்ஸிலிருந்து லண்டனுக்குப் புறப்பட்டார்.

லண்டனில் ராய்ட்டர் தம்பதிகள் ஒரு சின்னஞ்சிறு வீட்டில் குடியிருந்தார்கள். அவர்களுடைய சின்னஞ்சிறு காரியாலயம் லண்டனின் பிரதான வியாபாரப் பகுதியில், ராயல் எக்ஸ்சேஞ்ஜ் கட்டிடத்தில் இருந்தது. தம் ஆபீஸ் பையனை ஜான் கிரிபித்ஸ் என்ற மணிப் பயலைச் சேர்த்துக்கொண்டார், ராய்ட்டர். ஜான்கிரிபித்ஸ் பிற்காலத்தில் ராய்ட்டர் கம்பெனியில் பெரிய உத்தியோகஸ்தராகி விட்டார்.

முதல் முதலில் ராய்ட்டர் கம்பெனிக்கு வாடிக்கைக்காரர்கள் வந்த செய்தி மிகவும் ருசிகரமானது.

ஒரு நாள் எதோ ஒரு மலிவு ரகப் பலகாரக்கடையில் உட்கார்ந்து ராய்ட்டர் பலகாரம் சாப்பிட்டுக்கொண் டிருந்தார். அப்போது ஓடோடியும் வந்தான் கிரிபித்ஸ். வந்து, "ஐயா, உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறுர்கள்" என்றுன்.

"அப்படியா? உம்? யாருடா அது?" என்று ஒரே ஆச்சரியத்துடன் கேட்டார் ராய்ட்டர்.

"யாரோ அந்நிய நாட்டு ஆள் மாதிரி தெரியுது" என்றுன் கிரிபித்ஸ்.

"அந்நிய நாட்டுக்காரனு? அடே! யோகம்தான்! தொழிலுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது" என்று சொல்லிவிட்டு, "அவர் இப்போ இருக்கிருரா, போயவிட்டாரா? போகும்போது தம் பெயரைச் சொல்லிவிட்டுப் போனுரா? உடனே என்னிடம் ஓடிவந்து சொல்வதற்கு என்னடா?" என்றுர்.

"அவரை நான் ஆபீசுக்குள்ளே பூட்டிவச்சிட்டேன். உள்ளேதான இருக்கிறுர்" என்றுன் கிரிபித்ஸ் பல்லைக் காட்டிய வண்ணம்.

அந்த ஆசாமிதான் முதல் முதலாக லண்டனில் ராய்ட்டர் கம்பெனியில் காலெடுத்து வைத்தவர்.

ராய்ட்டரின் தொழில் விருத்தி அடைந்தது. ஐரோப்பாவில் ஆம்ஸ்டர்டம், பெர்லின், வியன்னு போன்ற நகரங்களில் செய்திகளைச் சேகரித்து அனுப்ப ஏஜெண்டுகளையும் நியமித்தார். இந்தியா, தூரகிழக்கு நாடுகள் போன்ற இடங்களிலும் ஏஜெண்டுகளை நியமித்துவிட்டார். இங்கிருந்து வரும் வியாபாரச் செய்திகள் சூயஸ் வரைக்கும் தபாலில் வரும். பிறகு அங்கிருந்து லண்டனுக்குத் தந்தியில் வரும்.

உலகின் பற்பல பாகங்களிலிருந்தும் வியாபாரச் செய்திகளைச் சேகரித்து அனுப்புவதில் வெற்றிபெற்றுர் ராய்ட்டர். வியாபாரிகளுக்கு இந்த வசதி மிகவும் பயனளித்தது. பிறகு தினசரிப் பத்திரிகை வியாபாரம் வளர்ச்சியடையவே, வியாபாரச் செய்திகளோடு மற்றச் செய்திகளையும் தம் ஏஜெண்டுகளைக் கொண்டே அனுப்ப ஏற்பாடுசெய்தார் ராய்ட்டர். பிரிட்டனிலுள்ள செய்திப் பத்திரிகைகள் சொந்த நிருபர்களில்லாமலே ராய்ட்டரிடமிருந்து தூரதேசத்துச் செய்திகளைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகவே, ராய்ட்டர் லண்டனிலுள்ள பத்திரிகை ஆசிரியர்களிடம் போய் தம் திட்டத்தைத் தெரிவித்தார். அவரிடமிருந்து செய்திகளை வாங்க ஒருவருக்கும் இஷ்டமில்லை. சொந்த நிருபர்கள் செய்திகள் அனுப்புவதே போதும் என்று அவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள்.

ராய்ட்டர் மனம் தளரவில்லை. 'செய்திகளை அவர்களுக்கு நாமாக வலிய அனுப்பிவைப்போம். வாங்கினல் வாங்கட்டும்; வாங்காவிட்டால் போகட்டும்' என்று தீர்மானித்து 1858-ம் வருஷத்தில் ஒரு மாத காலம் எல்லாப் பத்திரிகைகளுக்கும் செய்திகளைப் பிரதி செய்து அனுப்பிக் கொண்டிருந்தார். கடைசியில் சிலர் செய்திகளை வாங்கிக் கொண்டார்கள்; சிலர் வாங்க மறுத்து விட்டார்கள்.

1859-ம் வருஷத்தில் பிரான்சுக்கும் ஆஸ்திரியாவுக்கும் யுத்தம்

மூளும்போல இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் பிரெஞ்சுச் சக்கரவர்த்தி மூன்றுவது நெப்போலியன் பிரெஞ்சுப் பார்லிமெண்டில் ஒருபிரசங்கம் செய்வதாக இருந்தது. அந்தப் பிரசங்கத்தை சகல நாட்டினரும் மிகவும் ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். ராய்ட்டர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தினர். பிரெஞ்சு அதிகாரிகள் சிலர் மூலம் சக்கரவர்த்தி பேசுவதற்கு முன்பே அவருடைய பிரசங்கத்தின் பிரதியை வாங்கிக் கொண்டார். சக்கரவர்த்தி பேசுவதற்கு முன்பு அதை வெளியிடுவதில்லை எனவும் வாக்களித்தார் ராய்ட்டர்.

கடைசியில் பிரெஞ்சு சக்கரவர்த்தி நெப்போலியன் பார்லிமெண்டில் எழுந்து பேச ஆரம்பித்ததுதான் தாமதம், பாரிஸிலிருந்து லண்டனுக்கு பிரசங்கம் தந்தியில் பறக்க ஆரம்பித்துவிட்டது. எல்லாம் ராய்ட்டரின் வேலை. இந்தச் செய்தியைப் பிறகு தந்திமூலம் ஐரோப்பா முழுவதற்கும் அனுப்பிவிட்டார் ராய்ட்டர். சரித்திரத்திலேயே தூரதேசத்திலிருந்து உடனடியாகப் பத்திரிகைகளுக்குக் கிடைத்த முதல் செய்தி இது தான். பிறகு, பத்திரிகைகள் யாவும் ராய்ட்டருக்குப் பணம் கட்டி அவரிடமே செய்திகளை வாங்க ஆரம்பித்துவிட்டன. பிரான்ஸுக்கும் ஆஸ்திரியாவுக்கும நடந்த யுத்த விவரங்களை ராய்ட்டர் நிருபர்கள் உடனுக்குடன் பத்திரிகைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

1861-ம் வருஷம். ராய்ட்டர் இங்கிலாந்துக்கு வந்து பத்து வருஷங்களாகின்றன. இங்கிலாந்தின் சகல பகுதிகளிலும் உள்ள பத்திரிகைகளும், அயர்லாந்திலுள்ள பத்திரிகைகளும் ஏக காலத்தில் ஒரே மாதிரி செய்திகளைக் கொடுக்கமுடிந்தன. இதே போல ஐரோப்பியத் தலைநகரங்களின் பத்திரிகைகளும் இங்கிலாந்தின் செய்திகளைப் பிரசுரித்தன. லண்டன் பார்லிமெண்டில் முதல் நாள் இரவு நடந்த விவரங்களை, மறுநாள் காலையில் ருஷ்யாவில் லெனின்கிராட் நகரத்தவர்கள் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொண்டார்கள்.

அதே வருஷத்தில்தான் அமெரிக்க உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் இங்கிலாந்திற்கும் அமெரிக்காவுக்கும் தந்திப் போக்கு வரத்து கிடையாது. ஆனல் வாரத்துக்கு ஒரு முறை அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு வரும் கப்பல்கள் மூலம் ராய்ட்டர் நிருபர்கள் செய்திகளை அனுப்பிக்கொண்டிருந்தார்கள். அயர்லாந்துக்கு வந்து செய்திக்கட்டுகள் இறங்கும். பிறகு செய்திகள் தந்தி மூலம் இங்கிலாந்திற்கு அனுப்பப்படும்.

நியூயார்க் நகரிலிருந்த ராய்ட்டர் நிருபர், மற்ற தபால் கப்பல்களுக்கெல்லாம் முந்தி விடும்படியாக வேகமாகச் செல்லும் ஒரு நீராவிக் கப்பலைப் பிரதத்தியேகமாக அமர்த்தி அமெரிக்க ஜனுதிபதி ஆப்ரஹாம்லிங்கன் வாஷிங்டன் நகரில் கொலை செய்யப்பட்ட செய்தியை அனுப்பிவிட்டார். சாதாரணமாகச் செய்திகள் கிடைப்பதற்கு ஒருவாரத்துக்கு முன்பாகவே லிங்கனுடைய கொலைச் செய்தி இங்கிலாந்துக்குக் கிடைத்துவிட்டது.

1865-ல் ராய்ட்டர் கம்பெனி மிக மிக விரிவடைந்து விட்ட படியால் அதை ஒரு மனிதர் நிர்வாகம் பண்ணுவது மிகவும் கஷ்டமாய் போய்விட்டது. ஆகவே அந்தக் கம்பெனியில் பல பங்குதாரர்களைச் சேர்த்தார்கள். கம்பெனியில் ராய்ட்டருக்குத்தான் தலைமைப் பதவி. 1878-ல் ராய்ட்டர் தலைமைப் பதவியி லிருந்து விலகி ஓய்வு எடுத்துக்கொண்டார். அவருடைய ஸ்தானம் அவருடைய மகன் ஹ்யூபர்ட்டுக்கு அளிக்கப்பட்டது.

குடியேறி வந்த ராய்ட்டர், இங்கிலாந்துக்கு வந்ததும் பிரிட்டிஷ் பிரஜையாக அங்கீகரிக்கப் பட்டார். 1871-ல் அவருக்கு பேரன் என்ற பிரபுத்துவத்துக்கு ஒப்பான பட்டம் கிடைத்தது. ராய்ட்டர் 1899-ல் காலமானர்.

இன்று உலகின் சகல பகுதிகளிலும் உள்ள பெரிய செய்தி ஸ்தாபனங்கள் யாவும் ராய்ட்டர் ஸ்தாபனத்துடன் இணைக்கப் பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் விடப் பெரிய ஸ்தாபனம் ராய்ட்டர் ஸ்தாபனம். இந்தியாவிலும் ராய்ட்டர் ஸ்தாபனத்தின் கிளைகள் எல்லா முக்கிய நகரங்களிலும் இருக்கின்றன. அ. பி. என்று சொல்லப்படும் "அசோஸியேடட் பிரஸ்" ஸ்தாபனமும் ராய்ட்டரைச் சேர்ந்ததே. இந்தியாவில் உள்ள ராய்ட்டர் கிளைகளுக்குத் தலைமைக் காரியாலயம் பம்பாயில் இருக்கிறது. உலகச் செய்திகள் சேகரிக்கப் பட்டு லண்டனுக்குப் போகின்றன. அங்கிருந்து கம்பியில்லாத் தந்திமூலம் பம்பாய் நகரத்துக்கு உடனே செய்திகள் கிடைக்கின்றன. பம்பாயிலிருந்து 'டெலிபிரிண்டர்' என்ற யந்திரத்தின் மூலம் எல்லா மாகாணங்களிலுமுள்ள தினசரிப் பத்திரிகைகளுக்கும் செய்திகள் அனுப்பப் படுகின்றன. அநேகமாக ஒவ்வொரு தினசரிப் பத்திரிகைக் காரியாலயத்திலும் ஒரு 'டெலிபிரிண்டர்' யந்திரம் இருக்கும். பம்பாய் ஸ்தாபனத்துக்கும் இந்த யந்திரத்துக்கும் கம்பி மூலம் தொடர்பு இருக்கும். பம்பாயில் ஆங்கிலத்தில் செய்திகளை 'டைப்' அடித்தால் அப்படியே எல்லா டெலிபிரிண்டர் யந்திரங்களும் 'டைப்' அடிக்கும். ஒவ்வொரு டெலிபிரிண்டர் யந்திரத்துக்குள்ளேயும் வெள்ளைத்தாள்கள் வைக்கப்பட்டிருக்கும். மிகவும் வேகமாக அந்த வெள்ளைத் தாளில் எழுத்துக்கள் விழுந்து கொண்டே இருக்கும். இதற்காக, ராய்ட்டர் ஸ்தாபனத்துக்கு மாதா மாதம் ஒவ்வொரு தினசரிப் பத்திரிகையும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டி விடுகிறது.

ராய்ட்டர் என்பவர் ஆரம்பித்த ஸ்தாபனமாதலால் இதற்கு ராய்ட்டர் ஸ்தாபனம் என்ற பெயரே வழங்கி வருகிறது. இந்த ராய்ட்டர் ஸ்தாபனத்தைப் பற்றி வந்துள்ள கடைசிச் செய்தி:

அ. பி. ஸ்தாபனம் ராய்ட்டர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்தாபனமானதால், அந்த ஸ்தாபனம் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்த சென்னை "ஹிந்து" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ கஸ்தூரி ஸ்ரீனிவாசன் தலைமையில் இந்தியாவின் பிரதானப் பத்திரிகைகள் சிலவற்றின் ஆசிரியர்கள்—அவர்களில் சிலர் தம்பதி சமேதராகவும்— லண்டனுக்குப் போயிருக்கிறார்கள்.

கால வித்தியாசம்

○

ராபர்ட் ஜாக்ஸ்

[என் நண்பன் ஒருவனின் உண்மை அனுபவம் இது. அவன் இப்பொழுது இல்லாததினால், அந்தக் கதையைச் சொல்ல சுதந்திரமுடையவனாக இருக்கிறேன்]

டென்மார்க் தேசத்திலுள்ள நேர்த்தியான மதுக்கடை ஒன்றில் நடந்தது இந்தக் கதை. என் தந்தையாரும் நானும் தொழில் சம்பந்தமாக அங்கு சென்றிருந்தோம். ஓய்வு நேரங்களில் அங்கும் நேரம் போவதே தெரியாமல் இருந்தது.

"உன் அம்மாவை அழைத்து வராதது பெரிதும் வருந்தத் தக்கது. அழைத்து வந்திருந்தால் ஊரைச் சுற்றிக் காண்பிக்கலாம்" என்றார் தந்தையார்.

அவர் சிறு வயதில் டென்மார்க்குக்குச் சென்றிருக்கிறார்.

"எத்தனை வருஷங்களுக்கு முன் நீங்கள் இங்கே வந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"அதுவா, சுமார் முப்பது வருஷங்களுக்கு முன். மேலும், நான் இதே இடத்தில் தங்கியிருந்ததாகக்கூட நினைவு இருக்கிறது" என்று சொல்லிவிட்டு மீண்டும் ஞாபகப் படுத்த முயலுபவர் போல சுற்று முற்றும் பார்த்தார்.

"இன்பகரமான நாட்கள்..." என்று ஏதோ சொல்லத் தொடங்கியவர் திடீரென்று நிறுத்திவிட்டார். அவர் முகம் வெளிறிப் போய்விட்டது. அவருடைய கண்கள் நோக்கும் திசையில் நானும் பார்த்தேன்: அங்கே ஒரு ஸ்திரீ ஒரு தட்டில் மதுக் கிண்ணங்களை வைத்து, வந்திருப்பவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள். அவள் வயதில் நன்றாய் இருந்திருப்பாள் என்று ஏதோ சொல்லியது. ஆனால் அப்பொழுது அவள் பருமனாக இருந்தாள்; அவளுடைய தலைமயிர் சரியாகக் கோதப்படாமல் அழகு கெட்டிருந்தது. "அவளை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"ஒரு காலத்தில்" என்றார் என் தகப்பனார்.

அவள் நாங்கள் இருந்த மேஜை அருகில் வந்து "மது வேண்டுமா?" என்று எங்களிடம் கேட்டாள்.

"எங்களுக்குப் பீர் வேண்டும்" என்றேன். அவளும் தலையை அசைத்து விட்டுச் சென்றாள்.

"எப்படி மாறிவிட்டாள்! நல்ல வேளையாக அவள் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை" என்று முகத்தை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே சொன்னார்: "உன் தாயாரைச் சந்திப்பதற்கு முன்னாலேயே இவளை எனக்குத் தெரியும். நான் உல்லாசப் பிர

> தேதி போடும் முறை தேசத்துக்கு ஒருவிதமாக இருந்தது. இதன் காரணமாக எப்படிப் பட்ட ஒரு காதல் அனுபவம் தவறிவிட்டது! இது ஒரு உண்மை அனுபவம்.

யாணம் செய்யும் மாணவனுக இருந்தேன். அப்பொழுது அவள் இளமை நிறைந்த அழகுவடிமாய் இருந்தாள். அவள் காதல் வலையில் சிக்கினேன். அவளும் என்னைக் காதலித்தாள்'' என்று சொன்னுர்.

"அவளைப் பற்றி அம்மாவுக்குத் தெரியுமா?'' என்று திடுதிப்பென்று சற்றுக் கோபமாகவே கேட்டேன்.

"நிச்சயமாக'' என்று சாந்தமாகச் சொன்னுர். ஆவலோடு என்னை உற்றுநோக்கினுர். அது எனக்கு இக்கட்டாக இருந்தது.

"நீங்கள் ஒன்றும்.........'' என்று இழுத்தேன்.

".........சொல்லுகிறேன். நீ இதைப்பற்றிப் பல விதமாக ஆச்சரியப்பட்டுக் கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. அந்தப் பெண்ணின் தந்தையார் எங்கள் காதல் விவகாரங்களுக்குத் தடை விதித்தார். நான் ஓர் அன்னிய நாட்டான். வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கே வழி இல்லை. மேலும் நான் என் தகப்பனுரை ஆண்டித்தான் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. என் தகப்பனுருக்கு நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன் என்று எழுதியதன்பேரில், அவர் எனக்குக் கொடுத்துவந்த பணத்தையும் நிறுத்திவிட்டார். பிறகு நான் வீட்டுக்குப் போனேன். ஆனுல், அவளை மீண்டும் ஒரு முறை சந்தித்து, 'நான் அமெரிக்காவுக்குப் போய், கல்யாணத்துக்கு வேண்டிய பணத்தைச் சேகரித்து வருகிறேன்' என்று சொன்னேன். என்னுடைய கடிதங்களை அவளுடைய தந்தையார் பிரித்துப் பார்ப்பார் என்ற காரணத்தால், அவளுக்கு எழுதும் கவரில், ஒரு துண்டுக் கடுதாசியில் நான் வருகிற தேதியையும், என்னைச் சந்திக்கவேண்டிய இடம், நேரம் முதலியவற்றையும் குறித்து எழுதுவதாயும், பிறகு இருவரும் சந்தித்து மணம்முடித்துக் கொள்ளுவதாயும் நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டோம். சொன்னபடியே வீட்டுக்கு வந்து வேண்டிய பணத்தைக் கடனுக வாங்கிக்கொண்டு அவளுக்கு ஒரு தேதியைக் குறித்து அனுப்பினேன்'' என்று தொடர்ந்து சொன்னுர்.

"பிறகு என்ன நடந்தது?'' என்று கேட்டேன்.

"என் கடிதம் அவளுக்குக் கிடைத்தது. அவள் பின்வருமாறு கடிதம் எழுதியிருந்தாள்: 'நான் அங்கு வருகிறேன்' ஆனுல் அவள் இந்த இடத்தில் இல்லை. பிறகு விசாரித்ததில் அவள் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அந்த ஊரிலேயே ஒரு ஹோட்டல் முதலாளியைக் கல்யாணம் செய்துகொண்டதாகத் தெரியவந்தது. எனக்காக அவள் காத்திருக்கவில்லை.''

"நல்ல வேளையாக அவள் அப்படிச் செய்யவில்லை. வீட்டுக்குப் போனேன். அங்குதான் உன் அம்மாவைச் சந்தித்தது. நாங்கள் இருவரும் சந்தோஷமாக காலம் கழித்து வருகிருேம். அந்தக் காதல் கதையைப்பற்றி நாங்கள் அடிக்கடி தமாஷ் பண்ணிக் கொள்ளுவோம்'' என்ருர் தந்தையார்.

அவளும் அந்தச் சமயம் 'பீர்' கொண்டுவந்து வைத்தாள்.

"நீங்கள் அமெரிக்காவிலிருந்தா வந்திருக்கிறீர்கள்?'' என்று என்னைப்பார்த்துக் கேட்டாள்.

'ஆம்' என்றேன்.

"அமெரிக்கா, அது ஓர் அதிசய மான நாடு" என்று சொன்னாள்.

"உங்கள் நாட்டார்கள் அநேகம் பேர் அங்கே போயிருக்கிறார்கள். நீ எப்பொழுதாவது அங்கே போகவேண்டும் என்று விரும்பியதுண்டா?"

"நானா. இப்பொழுதில்லை, முன்பு ஒரு தடவை நினைத்தேன்; வெகுநாட்களுக்கு முன்பு. ஆனால் போகவில்லை. இங்கேயே நன்றாயிருக்கிறது" என்றாள்.

பீர் குடித்துவிட்டு வெளியே வந்தோம். வெளியில் வந்தபிறகு, "அப்பா! அவளை வந்து பார்க்கும்படி எழுதிய தேதியை எப்படி எழுதினீர்கள்?" என்று கேட்டேன்.

தம் சட்டைப் பையிலிருந்து ஒரு கவரை எடுத்து, "இப்படித்தான்" என்று 12-11-13 என்று எழுதினார். "12-11-13. அதாவது டிசம்பர் மாதம் 11-ம் தேதி, 1913 ம் ஆண்டு" என்றார்.

"இல்லையே!" என்று உரக்கக் கத்தினேன். "டென்மார்க்கிலோ அல்லது மற்ற எந்த ஐரோப்பிய நாட்டிலோ அப்படி அர்த்தமில்லையே, இங்கெல்லாம் தேதியை முதலிலும், பிறகு மாதத்தை இரண்டாவதாகவும்தான் எழுதுகிறார்கள். ஆகவே நீங்கள் எழுதியது டிசம்பர் 11-ம் தேதி அல்ல, ஆனால் நவம்பர் 12-ம் தேதி."

தந்தையார் தம் முகத்தைக் கையினால் தடவிக்கொண்டு, "அப்படியானால் அவள் அங்கிருந்தாள்!" என்று ஆச்சரியப்பட்டார். "நான் குறித்த தேதியில் வராததால் அவள் வேறு கல்யாணம் செய்துகொண்டாள்." கொஞ்சநேரம் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தார்.

"ஹூம், அவளும் சந்தோஷமாக இருக்கிறாள் என்றுதான் நினைக்கிறேன். பார்க்க அப்படித்தான் தெரிகிறது" என்றார்.

நடந்துகொண்டே செல்லும்பொழுது, "அப்படி நடந்தது அதிருஷ்டம்தான். இல்லாவிட்டால் அம்மாவைச் சந்தித்திருக்க முடியாது" என்று இருந்தாற்போலிருந்து சொன்னேன்.

தந்தையார் என் தோள் மீது கையைப் போட்டுக்கொண்டு வாஞ்சையோடு என்னைப் பார்த்து ஒரு புன்முறுவல் செய்துவிட்டு, "நான் இரட்டிப்பு மடங்கு அதிருஷ்டசாலி. இல்லாவிட்டால் உன்னையும் சந்தித்திருக்க மாட்டேனல்லவா!" என்றார்.

*

அசலுக்கு ஆபத்து

மாரோ என்ற பிரமுகர் ஒரு தடவை ரயில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவருடைய டிக்கட் தொலைந்து போய் விட்டது. இதைக் கண்ட ரயில் கண்டக்டர், "பரவாயில்லை, மிஸ்டர் மாரோ, இப்போது இல்லாவிட்டாலும், எப்போதாவது உங்கள் டிக்கட்டைக் கொடுத்து விடுங்கள்" என்றான். அதற்கு மாரோ, "எப்போது கொடுத்தாலும் நீ வாங்கிக் கொள்ளுவாய், அது வாஸ்தவம் தான். ஆனால், டிக்கட் இல்லாவிட்டால், நான் எந்த ஊருக்குப் போகிறேன் என்று எனக்குத் தெரிவது எப்படி?"

—எம். சுலைமான்

நந்திவர்மன் என்ற பெயருடைய பல்லவமன்னர்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவருள் நந்திக்கலம்பகத்தில் குறிக்கப்படும் நந்திவர்மன் யார் என்பதை ஆராய்கிறது இக் கட்டுரை. சரித்திரத்திலே இதுவரையிலும் செவ்வனே செய்யப்படாத ஓர் ஆராய்ச்சி இது.

கலம்பகம் கொண்ட நந்திவர்மன்

தி. நா. சுப்பிரமணியன்

கலம்பகம் என்னும் இலக்கிய வகையில் நமக்கு இப்போது கிடைப்பவற்றுள் மிகவும் பழமையானது நந்திக் கலம்பகம். இது சொல் நயம், பொருள் நயம் நிரம்பியது; படிப்பவர் உள்ளத்தை வெகுவாகக் கவரும்.

இந்தக் கலம்பகம் 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' மீது பாடியது. அம் மன்னன் பல போர்களில் கொண்ட வெற்றியும் இந்த நூலில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இந் நூலின் பெருமைக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது இக் கலம்பகம் எப்படி எழுதப்பட்டது என்பதைத் தெரிவிக்கும் கதையேயாகும்.

நந்திவர்மனுக்குத் தம்பி ஒருவன் இருந்தானாம். அவனுக்கு அண்ணன் மீது பொறாமை ஏற்பட்டது. அன்றி, அரசை கைப்பற்றவேண்டும் என்ற நாட்டமும் உண்டாயிற்று. அண்ணனைப் போரில் வெற்றி கொள்ள முடியாத தம்பி வேறு வழியைக் கையாண்டான். நந்திவர்மனுக்குத் தமிழினிடம் பேரார்வம் உண்டு. அதனால் அண்ணன் மீது தம்பி ஒரு கலம்பகம் பாடினான். ஒவ்வொரு பாட்டிலும் அறம் வைத்துப் பாடி அதை முடித்தான். அப்பால் அந் நூல் முழுவதையும் அண்ணன் கேட்க வேண்டியதற்கான ஏற்பாடுகளையும் செய்தான். நந்திவர்மன் ஊர்வலம் வருங்கால் அவன் காதில் விழும்படி ஒரு தாசியைக் கொண்டு இசையுடன் இதைப் பாடச் செய்தானாம். அதனைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் நூல் முழுவதையும் கேட்க விரும்பி மந்திரி முதலாயினோர் தடுத்தும் உரைத்தும் கேளாமல் பாடச் செய்து, சிதையில் ஏறிப்படுத்து அதைக் கேட்டு உயிரையே இழந்தானாம். இந்தக் கதையை, 'நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்று சோமேசர் முதுமொழி வெண்பா குறித்துச் செல்கிறது.

இந்தக் கதையை நம்பாமல் பொய்யென்று கொண்டாலும் ஓர் உண்மை வெளியாகிறது. நந்திவர்மனுக்குத் தமிழில் உள்ள ஆர்வம் தெளிவாகிறது. அவன் காலத்தில்தான் பெருந்தேவனார் பாரதம் எழுதப்பட்டது என்று கூறுகிறார்கள். பெருந்தேவனார் பாடியதாகக் கருதப்படும் பின் வரும் பாட்டு இதனைக் காட்டுகிறது.

வண்மையால் கல்வியால்
மாபலத்தால்ஆள் வினையால்
உண்மையால் பாராள்
உரிமையால்—திண்மையால்
தேர் வேந்தர் வானேறத்
தெள்ளாற்றில் வென்றானோடு
யார் வேந்தர் ஏற்பார் எதிர்

நந்திக் கலம்பகத்திலிருந்து இம்மன்னன், தெள்ளாறு பழையாறு, வெள்ளாறு, கடம்பூர், குருக்கோட்டை, வெறியலூர், தொண்டி முதலிய இடங்களில் பொருது வெற்றி கொண்டான் என்பது விளங்குகிறது. எனினும் அவன் தெள்ளாற்றில் கொண்ட வெற்றியே மிகச் சிறந்ததாகும். இதனாலேதான், அவன் 'தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன்' என்று சிறப்பிக்கப்படுகிறான். சாஸனங்களிலும் இவன் இப் பெயரால் குறிக்கப்பட்டுள்ளான்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற இவன் 'பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி' என்று கலம்பகத்தில் குறிக்கப் பெறுவதால், காஞ்சீபுரத்திலிருந்து அரசு செலுத்திய பல்லவ வமிசத்தைச் சேர்ந்தவன் என்பது நன்கு விளங்கும். கலம்பகத்திலே இவன், மல்லை வேந்தன், மயிலை காவலன், தொண்டை வேந்தன் என்று பல படியாகச் சிறப்பிக்கப்படுகிறான்.

பல்லவ மன்னர்களில் நந்திவர்மன் என்ற பெயர் தாங்கியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பலர் இருந்திருக்கிறார்கள். அவர்களிலே இவன் யார்?

நந்திவர்மன் என்ற பெயரைத் தாங்கிய முதல் மன்னன், கி. பி. 600-க்குமுன்னதாக ஆண்டவன். அந்தக் காலத்திலே பல்லவர்கள் சோழ நாட்டை ஆண்டதாகத் தெரியவில்லை. அன்றி, அவன் பெயரைத் தவிர அவன் ஆட்சியைப்பற்றி நாம் எதையும் அறியவில்லை. 'தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன்' கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டுள்ள எழுத்துக்கள் முதல் நந்திவர்மனுக்கு நீண்ட காலம் பிற்பட்டவை.

அதற்கு அடுத்தவன் பல்லவ மல்லனான நந்திவர்மன். அவன் தன் பன்னிரண்டாம் ஆண்டில் சிங்காதனம் ஏறி அறுபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் அரசு செலுத்தியிருக்கிறான்.

அம் மன்னன் காலத்தன வாகக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கிடைத்துள்ளன. எனினும் தெள்ளாற்றிலே அவன் போர் வென்ற செய்தி தெரியவில்லை.

இப்பல்லவ மல்லன் பெயரனும் தந்தி வர்மன் மகனுமான நந்தி மூன்றாம் நந்திவர்மன். இவனையே தெள்ளாற்றில் வெற்றி கொண்டவன் என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். மூன்றாம் நந்திவர்மன் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் அரசு செலுத்தியவன். அவன் எப்போது பல்லவ சிங்காதனம் ஏறினான் என்பதையும், எத்தனை வருஷங்கள் ஆண்டான் என்பதையும் நாம் நிச்சயமாகக் கூற முடியாது.

கி. பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அரசு செலுத்திய பல்லவ மன்னர் காலங்களை நாம் ஒன்றிரண்டு குறிப்புகளைக் கொண்டே நிச்சயிக்க வேண்டியிருக்கிறது.

கி. பி. 720-ல் காஞ்சீபுரத்தில் ராஜசிம்மன் எனப்படும் இரண்டாம் நரஸிம்ஹவர்மன் அரசு செலுத்திவந்தான் என்பது சீன சரித்திரங்களிலிருந்து நிச்சயமாகிறது. எனினும் கி பி. 720-ம் ஆண்டு அவன் ஆட்சியின் எத்தனையாவது ஆண்டு என்பதையோ, அதற்குப் பிறகு அவன் எவ்வளவு காலம் ஆண்டான் என்பதையோ நாம் நிச்சயமாகக் கூற முடியாது. அவனுக்குப் பிறகு, மூன்றாம் மகேந்திரவர்மன் சிங்கா

தனம் ஏறினன். அவன் ஆட்சிக் காலமும் தெரியாது. மகேந்திரனுக்குப் பிறகு இரண்டாம் பரமேச்வர வர்மன் பல்லவ சிங்காதனம் ஏறினன். அவனுடைய மூன்றும் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கிடைத்திருக்கிறது.* அவனுடைய ஆட்சிக்காலம் எத்தனை ஆண்டுகள் என்பதும் தெரியவில்லை.

பரமேச்வரன் இறந்தபோது அவனுக்குப் பிள்ளை இல்லாமையால், இளைய பரம்பரையிலிருந்து பல்லவ மல்லனை அழைத்து வந்து, பன்னிரண்டாம் வயசில் அவனுக்கு நந்திவர்மன் என்னும் நாமத்துடன் பட்டங்கட்டினர்கள் என்ற செய்தி காஞ்சீபுரத்தில் வைகுண்டப் பெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்களாலும் கல்வெட்டுக்களாலும் தெரிய வருகிறது.

இதனல் பல்லவ மல்லனை நந்திவர்மன் சுமார் கி. பி. 730-க்கு அணித்தாகப்பல்லவ சிங்காதனம் ஏறியிருக்க வேண்டும். அதற்குப் பிறகு ஆண்ட பல்லவ அரசர்களும் அவர்களுடைய ஆட்சிக் காலமும் பின்வருமாறு ஆகும்:

	வருஷங்கள்
பல்லவ மல்லனை நந்திவர்மன	65
தந்திவர்மன்	51
நந்திவர்மன் (இவனே தெள்ளாற்றுவெற்றி கொண்டவனைக் கருதப்படுகிறது).	24
கிருபதுங்கவர்மன்	26
ஆக மொத்தம்	166

இவர்களைத் தவிர, அபராஜித வர்மன் என்று ஒருவனும் ஆண்டிருக்கிறன். அவனுடைய ஆட்சி, 19 ஆண்டுகளாவது நடைபெற்றிருத்தல் வேண்டும். அவன் அரசு செலுத்திய காலத்தில் தான் சோழர்கள் தொண்டை நாட்டைக் கைக்கொண்டது. இது திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் தெரிகிறது†

அன்றி உதயேந்திரம் செப்பேடுகளிலிருந்து திருப்புறம்பியத்தில் நடந்த போரில், மேலைக்கங்க அரசனை பிரிதிவீபதி என்பவன் அபராஜிதனுடன் சேர்ந்து போரிட்டு உயிரிழந்த செய்தி தெரிகிறது.

பிரிதிவீபதியின் கல்வெட்டுக்களில் கி. பி. 879-ஆம் ஆண்டில் பொறிக்கப் பட்டதுதான் கடைசியானது.‡ ஆகவே திருப்புறம்பியம் சண்டை கி. பி. 880-க்கு அணித்தாக நடைபெற்றிருக்க வேண்டும். அப்போது பல்லவ சிங்காதனத்தில் அபராஜிதான் இருந்திருக்க வேண்டும். அதையே அவன் பட்டத்துக்கு வந்த முதல் வருஷமாகக்கொண்டால், கிருபதுங்கன் ஆட்சி அதற்குள்ளாக முடிந்திருக்க வேண்டும். இவ்விதம் மேலே காட்டிய பல்லவ மன்னர் நால்வருடைய ஆட்சிக்காலமும் (880-730) 150 வருஷங்களுக்குள் முடிந்திருக்க வேண்டும். ஆனல் கல்வெட்டுக்களில் காணப்படும் ஆண்டுகளின் தொகைப்படி அவர்கள் 166 ஆண்டுகள் அரசு செலுத்தியிருக்கிறர்கள். ஆகவே இதை எப்படிச் சரிக்கட்டுவது? அந்தக் கால வரையறையுள் தெள்ளாற்றெறிந்த நந்தியின் காலம் எவ்விதம் அமையும்?

---

*NO. 56 of 1903. †தென்னிந்திய சாஸனங்கள். மூன்றும் வால்யூம். 76 தெ
‡எபிகிராபிய இந்திகா, IV, பக்கங்கள். 180—3.

தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் ஆட்சியின் இருபத்தோராம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலுக்கா சென்னிவாய்க்கால் என்னும் கிராமத்தில் கிடைக்கிறது. அது ஒரு வீரக்கல். கழுத்துப் பக்கத்தில் ஓர் அம்பு துளைத்துக்கொண்டு போய் உயிர் துறக்கும் நிலையில் உள்ள பிராமணன் ஒருவனுடைய உருவம் வெட்டப்பட்டிருக்கிறது. மாவலி என்னும் வாண அரசன் படையெடுத்து வந்து அவ்வூர் மடத்தை அழித்த காலத்தில் அதைக்காக்கப்போன சத்தி முற்றத் தேவன் என்பவன் இறந்து பட்டதைக் குறிக்கிறது அக்கல்வெட்டு. அது பின் வருமாறு:

> ஸ்வஸ்திஸ்ரீ தெள்ளாற்றெறிந்து ராஜ்யமுங் கொண்ட நந்திப் போத்தரையர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது பராந்தக புரத்து அறிந்திகை ஈச்வர க்ரஹம் சாஸநத்தாலுடையோரும்......தளியிலதாகி நின்ற பட்டரென் மாவலி யநியஸ்தாநமாள்வான் செ [வணற்குண்டு] கொண்டு வந்து மடமுஞ் சுட்டுக்காத்த சிருரவரையு மெறிந்து இவர் சிஷ்யந் ஒரு ப்ராமணன் சத்திமுற்றத் தேவன் றுண்டு பட்டான் வல்லுவ னட்டான்.‡

இதைப் பதிப்பித்த சாஸனபரிசோதகர் இது சாஸனத்தின் மூலப்பிரதியல்ல வென்றும், பிற்காலத்தில் படியெடுத்துப் பொறிக்கப் பட்டதேயாகும் என்றும் கருதுகிறார். அவர் அவ்விதம் கருதுவதற்குக் கல்வெட்டில் பராந்தக புரத்தையும், அரிஞ்சிகை ஈச்வரத்தையும் பற்றிக் குறிக்கப்பட்டிருப்பதேயாகும் பராந்தகபுரமும், அரிஞ்சிகை ஈச்வரமும் சோழ மன்னனான முதற் பராந்தகன், அவன் மகன் அரிஞ்சயன் ஆகியவர் பெயர்களோடு தொடர்பு பூண்டவை. பராந்தகன் கி. பி. 907-ல் சோழ சிங்காதனம் ஏறியவன். தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலமே அதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டது. ஆகவேதான் அவர் அவ்விதம் கருதினர்.

கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளுக்கு, அக்கோயில்கள் ஜீரணம அடைந்து புதுப்பிக்கப்படுங் காலங்களில், பிரதி எடுத்து வைத்துப் பின்னல் ஜீர்ணோத்தாரணம் ஆனபிறகு அவற்றை வெட்டுவிப்பது வழக்கம் உண்டு. ஆனல் வீரக்கல்களில் ஜீர்ணமானவற்றைப் புதுப்பித்ததாகவோ அவற்றில் இருந்த கல்வெட்டுகளைப் பெயர்த்து எழுதி வெட்டியதாகவோ நாம் இது வரையில் கேள்விப்பட்டதில்லை.

கோயில்களுக்கும் வீரக்கல்களுக்கும் முக்கியமான வித்தியாசம் உண்டு. கோயில்கள் நாட்டுமக்கள் பலருக்கும் பொதுவானது. வீரக்கல் அவ்விதமல்ல. சிலரே வழிபடுவது. வீர சுவர்க்கம் புகுந்தவன் குடும்பத்தவரே அதை வணங்குவர். இந்த வீரக்கல்லில் உள்ள கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவற்றால் இதைப் போலியென்றோ மூலத்தின் பிரதி யென்றோ கருதுவதற்கு இடமே இல்லை.

---

‡தென்னிந்திய சாஸனங்கள். தொகுதி 12. நெ. 56.

இந்தக் கல்வெட்டுப்படி பார்த்தால், தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனைத் தந்திவர்மனுடைய மகனினின்றும் வேருனவனுகவும் கி. பி. பத்தாம் நூற்ருண்டைச் சேர்ந்தவனுகவும் கொள்ள வேண்டும்.

இதை வலியுறுத்தக் கூடிய வேறு சான்றுகளும் உள.

தெள்ளாற்றில் நந்திகொண்ட வெற்றியை அவன் ஆட்சியில் நடந்த மிகப்பெரிய சம்பவமாகக் கொள்ளவேண்டும். கல் வெட்டுக்களி லிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் இது விளங்கும். ஆனல் நிருபதுங்கவர்மன் தன்னுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில் வாகூர் வித்தியா ஸ்தானத்துக்கு அளித்த தானத்தைத் தெரிவிக்கும் வாகூர்ச் செப்பேடுகளில் தெள்ளாற்று வெற்றியைத் தன் தந்தை கொண்டதாகக் குறிக்கவில்லை. அதுமட்டுமன்று; தன் தந்தையைப் பற்றிப் பொதுவாக, "அவர் பிறர் உதவியில்லாமல் ஒன்றியாக உலக முழுவதையும் போரில் வென்ருர்" என்று மட்டிலே கூறுகிருன். தன் பாட்டன் தந்திவர்மனைப் பற்றியும், தன் தாய் சங்கையைப் பற்றியும், தன்னைப்பற்றியும் வருணித்துக் கொள்ளும்போது தன் தந்தையைப்பற்றி அதிகமாக ஒன்றும் குறிக்கவில்லை. இதைக் கவனிக்கும்போது மூன்ரும் நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் குறிப்பிடத்தக்க போரோ வெற்றியோ எதுவும் இல்லையென்றே எண்ண வேண்டியிருக்கிறது.

அன்றி, மூன்ரும் நந்திவர்மனும் அதிக நாள் ஆண்டிருத்தற்கில்லை. அவன் பாட்டனுனபல்லவமல்லன் 65 ஆண்டுகளும், தந்தை தந்திவர்மன் 51 ஆண்டுகளும் அரசு செலுத்தி வந்திருக்கிறபடியால், அவன் பட்டத்துக்கு வந்த சமயம் வயசு அதிகமானவனுகவே இருந்திருத்தல் வேண்டும். இன்னும் நிருபதுங்கன் பட்டத்துக்கு வரும்போது இளைஞனுக இருந்தான் என்றே கூறப்படுகிருன். இவற்றைக் கவனிக்கும்போது மூன்ரும் நந்திவர்மன் அரசுக்கட்டில் ஏறினனையென்றே சந்தேகிக்கலாம். ஆயினும் அவனுடைய ஆரும் ஆண்டில் வேலூர் பாளையம்* செப்பேட்டில் காணும் தானம் கொடுக்கப்பட்டிருப்பதால், அவன் அரசுக்கட்டில் ஏறியவனே என்றும், ஆயினும் அவன் ஆட்சிக்காலம் மிகக் குறைவாகவே இருந்திருக்க வேண்டும் என்றும் நினைக்க இடம் உண்டாகிறது.

மேலே நாம் கொடுத்துள்ள சென்னிவாய்க்கால்க் கல்வெட்டில் நந்திவர்மன் 'தெள்ளாற்றெறிந்து ராஜ்யமும் கொண்' டான் என்று குறிக்கப்படுவதால், அவன் காலத்திலே நாடு பல்லவர்களைவிட்டு வேற்று அரசர்கள் ஆதிக்கத்தில் போயிருந்ததும், நந்திவர்மன் அதை மீட்டுக் கொண்டதும் தெரியவரும். அத்தகைய நிலை சோழர்கள் தொண்டை நாட்டைக் கைக்கொண்ட பிறகுதான் ஏற்பட்டது.

தஞ்சாவூருக்குப் பக்கத்தில் உள்ள தில்லைஸ்தானம் †செந்தலை§ ஆகிய இடங்களிலும் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் அளித்த தானங்களைக் குறிக்கும் கல்

---

*தென்னிந்திய சாஸனங்கள், இரண்டாம் வால்யூம், 507—510 பக்கங்கள்.

†1895-ஆம் ஆண்டு 52 நெ. சாஸனம் §1899-ஆம் ஆண்டு 11 நெ. சாஸனம்

வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை முறையே கோமாறஞ் சடையனுடைய பத்தாம் ஆண்டிலும், பன்னிரண்டாம் ஆண்டிலும் குறிக்கப் பெற்றுள்ளன. தில்லைஸ்தானத்திலே அம்மன்னனுடைய நான்காம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும் இருக்கிறது. § அதில், வரகுணவர்ம மஹாராஜாவின் பெயரால் திருவிளக்கு எரிக்கப் பாண்டிமாதேவியும் கோன் பராந்தகனும் பொன் கொடுத்த செய்தி காணப்படுகின்றது. இப் பராந்தகன் சோழ மன்னனகவோ, சற்றேறக்குறைய அதே காலததில் இருந்த பாண்டிய மன்னனாகிய பராந்தக வீர நாராயணனகவோ இருக்க வேண்டும்.

இதை இன்னும் வலியுறுத்துவதற்கு, தஞ்சாவூர் ஜில்லா பாபநாசம் தாலுகா திருவைகாவூர் வில்வநாதேச்வரர் கோயில்கர்ப்பகிரஹத்துக்கு எதிரில் உள்ள மண்டபத்தின் தென்புறச் சுவரில் பின்வரும் கல்வெட்டு காணப்படுகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ நந்திப மராஜற்கு யாண்டு இருபத்திரண்டாவது திருவைகாவு

2. டைய மஹாதேவற்கு திருநொந்தா விளக்கும் அமுதுபடிக்கும் உ [பைய]ம்வை

3. ய்க்க ச [ந்] திப் பெலியார் திரிபுவன மாதேவிச் சருப்பேதி மங்கலத்

4. து ஸபையார் பக்கல் பொன் குடுத்துப் பொலி கூலிக்குச் செல

5. வாக காசு கொள்ளா ஊற் கீழ் இறையிலியாக மணலிடில் வேலி

6. யாகக் கொண்டுவிட்ட வண்ணக்க விளாகம் நிலம் கரு. இன்னிலம் ஒன்ற

7. ரையும் இறக்காதாந் திருவடி இரண்டு மெந்தலை மேலின, இது இறக்குவாந் தங்க

8. ளம்மைக்குத் தாநேய் மிளைன், இது கல்வெட்டுப்படி.

கடைசி வரியிலிருந்து இது பழைய கல்வெட்டின் பிரதியென்பது நிச்சயமாகிறது. கல்வெட்டு, பதினோராம் நூற்றாண்டு எழுத்துக்களாலேயே பொறிக்கப்பட்டிருப்பதால் அதைப் புதுப்பித்தபோது மூலச் சாஸனம் வெட்டப்பட்டு நீண்டகாலம் ஆகியிருக்க முடியாது. அப்படியிருந்தும் அதைப் பதிப்பித்த சாஸன பரிசோதகர் அது சரியான பிரதியில்லையென்று கூறுகிறார். அவ்விதம் அவர் கருதுவதற்குக் கல்வெட்டில் 'திரிபுவனமாதேவிச் சருப்பேதி மங்கலத்து ஸபையார்' என்று குறிக்கப் பெற்றிருப்பதே காரணம். 'இந்தக் கல்வெட்டின் தானத்தை அளித்த தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்திலே திருவைகாவூருக்குத் திரிபுவன மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் இருந்ததில்லை. அது பிற்காலத்தில் தான் ஏற்பட்டது.' ஆனல் கல்வெட்டுக்களைப் பிரதியெடுத்து மறுபடியும் வெட்டும்போது இவ்விதம் நடுநடுவே பழம் பெயர்களை மாற்றிப் புதுப் பெயர்களை அமைக்கும் பழக்கம் இருந்ததுஇல்லை. இவ்விதம் நடந்ததாக வேறு உதாரணம் காட்டமுடியாது. அதனல் கல்வெட்டு, சரியான பிரதிதானு என்று சந்தேகிக்கவே இடமில்லை.

இவற்றல் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் பல்லவ மன்னனை தந்திவர்மன் மகனை மூன்றும் நந்திவர்மனி னின்றும் வேறனவன் என்பது நான்கு பெறப்படும்.

§1895-ஆம் ஆண்டு 51 நெ. சாஸனம்.

"விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்



தேயிலை பானமருந்தி சிம்பாஷிக்க...சம்பாஷணை ரஸமானதாக விருக்கலாம், ஆனால் டீ அவர்களுக்கு திருப்தியளிக்க முடியாது......ஏனெனில் விருந்தளிக்கும் அம்மையார் தேயிலை பானத்தை ஈரமான குளிர்ந்த பாண்டத்தில் தயாரித்தார். நல்ல டீ தயாரிக்க ஈரமில்லாத வெது வெதுப்பான பாண்டமே தேவை."

கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிக செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினால் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில் பதியவைத்து. எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து சுலபமான விதிகள்.

1. புதியதாக எடுத்ததும புதிதாகக் கொதித்ததுமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. பேர் ஒன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷாயம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக் கொள்ளவும்—பாண்டத்தில் வேண்டாம்.

"தேயிலைப் பானம் . இலை யோசனைகள்" என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இண்டியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜி சுபாஷ் ரோட், தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெறலாம்.

★



நல்ல தயாரித்த டீயைப் போன்றது வேறெதுவுமல்ல.

இண்டியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

உ 166.

லிப்டன்ஸ்

என்றால்

முதல்தரமான டீ

LTX-152 TM.

புத்தக விற்பனை!

ரகுநாதன்

பத்து லட்சம் மக்கள் கண்டு களித்த படம் என்று சினிமாக்காரர்கள் விளம்பரம் செய்வது போலவே, புத்தக வியாபாரிகளும், பத்து லட்சம் பிரதிகள் விற்ற புத்தகம் என்று விளம்பரம் செய்கிறார்கள். பெர்னார்ட் ஷாவின் பிறந்த தினப் பதிப்பாக, பென்குவின் கம்பெனியார் அவருடைய புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் பத்து லட்சம் பிரதிகள் அச்சடித்தார்கள். இது போலவே, சில நூல்கள் இருபது முப்பது பதிப்புக்களாக, தொடர்ந்து வெளிவருவதுண்டு.

ஆனால், எல்லாப் புத்தகங்களுமே சந்தையில் செலாவணியாகிவிடுகிறதா என்றால் அது கிடையாது. சில புத்தகங்கள் விற்காமல் கட்டுக் கிடையாகக் கிடப்பதும் உண்டு. பின்னால் அந்தப் புஸ்தகங்கள் மூர்மார்க்கெட்டுக்கோ, மரீனா பீச்சின் தளவரிசைக்கோ, பழைய பேப்பர் வியாபாரியின் சாக்கு மூட்டைக்கோ போய்ச்சேரும். ஆசிரியர்கள் கஷ்டப்பட்டு மூளையைக் குடைந்து தோண்டி, எழுதினாலும் சில புத்தகங்கள் விற்பதில்லை. நல்ல புத்தகம் செல்லுபடி ஆகாமல் போகாது என்று சொல்லலாம். எனினும் விற்பனையில் முந்திக்கொள்ள வேண்டுமே. இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்ட் மாதிரி ஆசிரியனே புத்தகத்தைக் கையோடு தூக்கிச் சென்று, அதன் அருமை பெருமைகளை அளந்து விற்றுத் தள்ள முடியுமா? அல்லது நடுச் சந்தியில் கடை பரப்பிக் கொண்டு, காபூலிக்காரனின் தேள்கடி விளம்பரம் போல, உபந்நியாசம் பண்ணுவதா? இந்த மாதிரிக் கஷ்டங்கள் ஆசிரியனுக்கும் பதிப்பாளனுக்கும் ஏற்படுவதுண்டு.

ஏதென்ஸ் நகர சபையிலே அனக்ஸன்டிரைட்ஸ் என்ற ஆசிரியருக்கும் அவருடைய விரோதி ஒருவருக்கும் நடக்கும் விவாதங்களின் காரணமாக, அவருடைய கையெழுத்துப் பிரதிகளைப் பொட்டலம் மடிக்கக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. காதரினாட் என்ற ஆசிரியர் சின்னஞ் சிறுபிரசுரங்களாகவே எழுதித் தள்ளினார். அதன் காரணமாகவே, 'சிறு புத்தகங்கள் எழுதும் பெரிய ஆசிரியன்' என்ற பாராட்டும் அவருக்குக் கிடைத்தது. இவருடைய புத்தகங்கள் நாலு பக்கங்களுக்கு மேலிராது. தமது புத்தகங்களைத் தாமே அச்சடிப்பார்; தாமே கொண்டு போய் பழைய புத்தகக் கடையில் சேர்த்து விடுவார். இப்படி நடந்தது அவர் விற்பனை!

நிக்கலஸ் டி'லைரா, என்பவர் பைபிளுக்கு பாஷ்யம் எழுதி, அதை அச்சிட ஆளையும் பிடித்து விட்டார். ஆனால் புத்தகக் கடையைவிட்டு, ஒரு புத்தகம் கூட நகரவில்லை. கடைசியில் பதிப்பகத்தார் மஞ்சள் கடுதாசி — இன்ஸால்வென்ஸி — நீட்ட வேண்டிய நிலைமையிலிருந்து தம்மைக் காப்பாற்றும்படி போப்புக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்களாம்!

கிராண்ட் உடன் எழுதிய குறிப்புகளை ஆதாரமாகக் கொண்ட கட்டுரை.

பிரபல ஆங்கில எழுத்தாளரான கோல்ரிட்ஜ் தமது நண்பர் ஒருவர் உதவியால் தமது 'விடுதலை வழி' என்ற நூலை வெளியிட்டார். ஆனால் விமர்சகர்கள் அந்த நூலை இரக்கமற்றுத் தாக்கினர்கள். விமர்சகர்கள் முகத்தில் கரியைப் பூசவேண்டும் என்ற நோக்கத்தோடு உடனடியாய் இரண்டாவது பதிப்பையும் கொண்டு வந்தார். ஆனல், முதற் பதிப்பே ஆமை நடைதான் நடந்தது. இரண்டு வருஷம் கழித்து புத்தகம் போட்ட நண்பர், வியாபாரிகளிடம் கணக்குக் கேட்டு எழுதினர். வியாபாரியின் ஆளும் கணக்கோடு வந்து சேர்ந்தான். ஆசிரியர் கணக்கைப்புரட்டிப்பார்த்தார். செலவு வகைகளைப் பார்த்தார். கடைசியில், "இத்தனை ஆயிரம் புஸ்தகங்களையும் விற்பதற்கு மூன்று கினி தான செலவாயிற்று?" என்று கேட்டார்.

வந்தவன் "ஐயா, ஒரு புத்தகம் கூட விற்கவில்லை. இந்தப் புத்தகங்களை யெல்லாம் கிடங்குக்குக் கொண்டு சேர்ப்பதற்குக் கொடுத்த வண்டிச்சத்தம் தான் அந்தச் செலவு!" என்றான்.

கடைசியில் அந்தப் புத்தகங்கள் விற்காமலே ஆசிரியரின் வீட்டிலேயே கிடந்தன. கடைசியில், அந்தப் புத்தகங்கள் வரும் போகும் விருந்தினருக்கும், நண்பர்களுக்கும் அன்பளிப்புகளாகவே வழங்கப்பட்டு காலியாயின!

கோல்ரிட்ஜ் இதனலெல்லாம் சலித்துவிடவில்லை. 'காவல்காரன்' என்ற சஞ்சிகையைத் தமது சொந்தச் செலவில் ஆரம்பித்தார். அப்படியும் இப்படியுமாக கஷ்டப்பட்டு ஆயிரம் சந்தாதார்களைப் பதிவு செய்தார். முதல் இதழ் வெளிவந்தது. அதைப் பற்றி காரசாரமான விமர்சனங்கள் வந்தன. கோல்ரிட்ஜ் விமர்சனங்களுக்குப் பதில் கொடுத்தார். அதன் காரணமாக, ஐந்நூறு பேர் ஆதரவை இழந்தார்! அடுத்த இரண்டு இதழ்கள் வந்தவுடன் இருந்த ஆதரவாளரும் போய்விட்டனர். ஆசிரியர் வருத்தப்பட்டு, மாடியிலிருந்து கீழிறங்கி வந்தார். ஆனல், கீழ்வீட்டில் அவருடைய வேலைக்காரி இவருடைய பத்திரிகைப் பிரதிகளைக்கொண்டு அடுப்பு மூட்டிக்கொண்டிருந்தாளாம்!

அதிருஷ்ட தேவதையின் கருணையால்தான் கோலரிட்ஜின் பாடல் தொகுதிமட்டும் ஏராளமாக விற்பனை ஆயிற்று என்று சொல்ல வேண்டும். கோல்ரிட்ஜின் பாடல்களைப் பதிப்பித்த லாங்மன்ஸ் கம்பெனியார் இந்த அதிருஷ்டம் எப்படி வந்தது என்றும் தெரிவிக்கிருர்கள். கோல்ரிட்ஜின் பிரபலப் பாடலான "பண்டைக் கப்பல் மீகாமன்" (Anicent Mariner) என்ற பாடலைக் கண்டுவிட்டு, அந்தப் புத்தகம் முழுவதுமே கடற் கவிதைகள் என்று ஏமாந்து மாலுமிகள் அள்ளிக்கொண்டு போய்விட்டார்களாம்!

தாமஸ் ஹார்டியின் நாவல்கள் இன்று பிரபலமானவை. ஆனல், ஆரம்பகாலத்தில் அவை எப்படி விற்றன தெரியுமா? அவருடைய புத்தகங்களை வெளியிட்டின்ஸ்லி முதன் முதலில் ஐந்நூறு பிரதிகளே அச்சடித்தார். ஆனல் இருபதுக்குமேல் விற்கவே இல்லை. உடனே மீதமுள்ள பிரதிகளை யெல்லாம் சாதா அட்டை போட்டு ஒண்ணேகால் ஷில்லிங் வீதம் ரோட்டுக் கடையில் விற்று விட்டார்!

சாக்கடையிலிருந்து

பி. கேசவதேவ்

"நீ போ!" அவன் கட்டளை அது.

அவள் தயங்கினுள்.

"இங்கிருந்து போ!"

அவள் திரும்பினுள்.

"போ!"

அவள் நடந்தாள்.

அன்றுதான் கல்யாணம். பொழுது புலருமுன் கல்யாணி கமலத்தை எழுப்பினுள்.

"மாமா எங்கே?" என்று கேட்டுக் கொண்டே அவள் துயில் எழுந்தாள். "அம்மா! மாமா எங்கே?" என்று அவள் மீண்டும் கேட்டாள்.

"அங்கே படுத்திருக்கிருர். இன்னும் எழுந்திருக்க வில்லை."

கமலம் அந்த அறைக்குச் சென்ருள். அவன் கண்களை மூடிக்கொண்டு அசையாது, நீண்டு படுத்திருந்தான். அவன் தூங்கவில்லை. அவன் கால்மாட்டில் அவள் நின்ருள். அவனைக் கூப்பிட அவளுக்குத் தைரிய மில்லை. அவள் மெதுவாக இருமி னுள். அவன் கண்களைத் திறந்தான். நேற்றிரவு கண்ட அந்தத் தோற்றத்தை அவள் அப்பொழுது அவன் முகத்தில் காண வில்லை. சிந்தனை கலந்த அமைதி அவன் முகத்தில் குடிகொண்டிருந்தது.

"மாமா!"

"குழந்தாய்!" அந்த அழைப்பில் அன்பு எதிரொலித்தது.

அவன் மெதுவாக எழுந்திருந்து கட்டிலில் உட்கார்ந்தான். யோகியைப் போல் அவன் புன்னகை புரிந்தான். "குழந்தாய்! அருகில் வா."

அவள் அருகில் சென்ருள்.

"நீ சுகமாக இருப்பாய்!" அவள் தலையைத் தொட்டு அவளை ஆசீர்வதித்தான் மாதவன்.

அவள் வணங்கினுள். அவள் கண்கள் அவன் பாதங்களை ஸ்பரிசித்தன. அவன் பாதங்களை அவள் கண்ணீரால் கழுவினுள்.

அவன் அவளை எழுப்பினுன். மீண்டும் தலையில் கைவைத்து அவளை ஆசீர்வதித்தான். "நீ என்றும் சுகமாக இருப்பாய்!... குழந்தாய்! அம்மாவை என்றும் மறக்காதே!"

அவள் என்னவோ சொல்ல முயன்ருள். ஆனல், எதையும் அவளால் சொல்ல முடியவில்லை.

அவள் கண்ணீரைத் துடைத்து விட்டு அவன் சொன்னுன்: "சந்தோஷமாக இரு. கல்யாணத்திற்குப் போக வேண்டிய நேரமாய்விட்டது. போய்க் குளி."

குளித்துவிட்டு, உடைகளும், நகைகளும், அணிந்துகொண்டு அவள் மீண்டும் மாதவன் இருந்த இடத்திற்கு வந்தாள். அவன் அப்பொழுதும் கட்டிலில் உட்கார்ந்துகொண் டிருந்தான்.

"குழந்தாய்! உட்கார்."

அவள் கட்டிலில் உட்கார்ந்தாள்.

"பாடு. அந்தப் பாட்டை நான் இன்னொரு தரம் கேட்க வேண்டும்."

அவள் பாடினாள். அந்தக் குடிசையில் இசை அரசி நடனம் ஆடினாள்.

ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டு அவன் மீண்டும் அவளை வாழ்த்தினான்.

வாசலில் மோட்டார் நின்றது. மணமகளை, மணமகன்வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்த மோட்டார் அது.

கல்யாணி குளித்து விட்டுப் புதிய உடைகள் அணிந்து கொண்டு புறப்படத் தயாராக இருந்தாள். மகளுடன் மோட்டாரில் ஏற அவள் அவசரப்பட்டாள்.

மாதவன் எழுந்தான். "அம்மாவை அழைத்துக்கொண்டு புறப்படு!"

"நீங்கள்......" அவளால் பேச முடியவில்லை.

"நான் பிறகு வருகிறேன்."

"நீங்கள் இல்லாமல்........." அந்த வாசகத்தை அவள் பூர்த்தி செய்யவில்லை.

"நான் இல்லாமல் போனால் போதும் நான் பிறகு வருகிறேன்."

தன் முடிவை அவன் மாற்ற மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். எனினும், கெஞ்சும் முறையில் அவள் மாதவனைப் பார்த்தாள்.

"புறப்படு" என்று அவன் கட்டளை இட்டான்.

தாயின் கையைப் பிடித்துக் கொண்டு அவள் மோட்டாரில் ஏறினாள்.

* * *

விருந்தினர்கள் வந்துவிட்டனர். வாத்தியங்கள் முழங்கின.

"அம்மா! மாமா எங்கே?"

"நான் அவரைக் காணவில்லை, மகளே!"

அவள் கிளர்ச்சி அடைந்தாள். கோபியும் மாதவனைத் தேடினான். அவனை எங்கும் காணவில்லை. "மாமா ஏன் வரவில்லை?" என்று அவன் கல்யாணியைக் கேட்டான்.

"வருவார்! வருவதாகச் சொன்னார்."

முகூர்த்தமாயிற்று. மணமக்கள் மணைக்குச் சென்றனர். கமலம் சபையில் தேடினாள். ஆனால், அவள் மாதவனைக் காணவில்லை.

இருமல் சத்தம் கேட்டது. மாதவன் வருகிறான். அவன் மணைக்குச் சென்றான். கமலம் அவனை வணங்கினாள். மணமகனும் வணங்கினான்.

அவன் தம்பதிகளை வாழ்த்தினான்.

மணம் முடிந்ததும் தம்பதிகளை உள்ளே அழைத்துச் சென்றார்கள். விருந்து முடிந்ததும் விருந்தினர்கள் விடைபெற்றனர்.

"அம்மா, மாமா எங்கே?"

"எங்கேனும் ஒளிந்து கொண்டு நிற்பார்."

"என் மாமா ஒளிந்துகொண்டு நிற்க வேண்டியவர் அல்ல. என் மாமா எங்கே?" அவள் அறையிலிருந்து வெளியே சென்றாள். அவள் எங்கும் தேடினாள். ஆனால், மாமாவைக் காணவில்லை. அவள் மீண்டும் மாதாவிடம் சென்றாள். "அம்மா! மாமாவைக் காணவில்லை. அவர் வீட்டிற்குச் சென்றிருப்பார்."

"போகட்டும். அட்டையைப் பிடித்து மெத்தையில் கிடத்தினால், அது கிடக்குமா?"

அந்தக் கொடிய வார்த்தைகளை அவளால் சகிக்க முடியவில்லை. அவள் முகம் சிவந்தது. அவள் வார்த்தைகள் கூர்மையாக இருந்

தன. "நாமும் அட்டைகளாக இருந்தோம், அம்மா. குப்பைக் குழியில் நெளிந்துகொண்டிருந்த புழுக்களாக இருந்தோம் நாம். நம்மை மாமாதான் மனிதர்களாக்கினர். இங்கே நாம் வரவும், இந்த மெத்தையில் நாம் படுக்கவும் வழிகோலிய மாமாவை நீ அட்டை என்கிருய். அல்லவா?"

"நல்லதைச்சொன்னுல்கேட்க மாட்டார். அதனுல் சொன்னேன். அவ்வளவுதான்."

"மாமாவைக் கூப்பிட நான் போகிறேன். நான் கூப்பிட்டால் மாமா கட்டாயம் வருவார். மாமாவின் கால்களில் விழுந்து நான் அழுவேன்." அவள் நடந்தாள்,

கல்யாணி அவளைத் தடுத்தாள். "மகளே! நீ போகாதே! நீ போனுல் அவர் என்ன நினைப்பார். நான் போகிறேன். மகளே, நான் போகிறேன்."

"அப்படியானுல் புறப்படு. உடனே புறப்படு."

"நான் கூப்பிட்டும் அவர் வரவில்லை என்ருல் என்ன செய்வது?"

"வரவில்லை என்ருல், நீ அங்கேயே இருக்கவேண்டும். நாளையதினம் நானும், அவரும் அங்கே வருவோம். அது வரையில் நீ அவரைப் பராமரிக்க வேண்டும்."

வேதனையுடன் கல்யாணி வீட்டிற்குச் சென்ருள். இன்பத்தில் ஊன்றின காலை உடனே வெளியில் இழுக்க வேண்டிய அவசியம் அவளுக்கு ஏற்பட்டது.

* * *

ஜன்னல் மூலம் வானத்தைப் பார்த்துக்கொண்டு மாதவன் அசையாது கட்டிலில் படுத்திருந்தான். வானத்திற்கு அப்பால் இன்பம் ஊட்டும் எதையோ பார்த்துவிட்டதைப் போன்று அவன் வதனம் மலர்ந்தது.

மூடியிருந்த கதவைத் திறந்து கொண்டு கல்யாணி உள்ளே பிரவேசித்தாள். மாதவன் திரும்பிப் பார்த்தான்.

"என்ன?" அவன் புன்னகை புரிந்தான்.

"அங்கே போக வேண்டும்."

"எங்கே?"

"மாமாவைக் காணுமல் அவள் துக்கப்படுகிருள். நாம் அங்கே போகலாம்,"

"பாதகமில்லை. அவள் துக்கம் தீரும்."

"அவள் அழுகிருள். இன்று அவளை அழவைப்பது முறையல்ல. வாருங்கள் போகலாம்."

"சிறிது நேரம் சென்ருல் அவள் சிரிப்பாள்."

"மாமாவைக் கண்டால்தான் அவள் சிரிப்பாள்."

"மாமாவைக் காணுமல் அவள் சிரிப்பாள்."

"நாம் அங்கே போகலாம்"

"நீ போ!"

"என் கூட நீங்களும் வர வேண்டும்."

"நானு?" அவன் சிரித்தான்.

அதற்குப் பிறகு அவன் ஒன்றும் சொல்லவில்லை.

"அந்தி நேரம். நீ போகவில்லையா?" என்று மாதவன் கேட்டான்.

"நீங்கள் இப்படியிருக்கும் பொழுது நான் எப்படிப் போக முடியும்?"

"நான் இப்படி இருப்பதைப் பற்றிக் கவலைப்படாதே. நீ போ!"

"நான் போக மாட்டேன்."

அமைதி!

நடு நிசி. கல்யாணி பெருமூச்செறிந்தாள்.

"தூங்கவில்லையா?" என்று மாதவன் கேட்டான்.

"எப்படித் தூங்குவேன்? அவள் என் புதல்வி அல்லவா? அவள் இல்லாமல் எப்படித் தூங்குவேன்?"

"எதற்காக அவளைப் பிரிந்து வந்தாய்?"

"வராமல் என்ன செய்வது?"

அமைதி!

ஜாமக் கோழி கூவி ஒரு மணி நேரமாயிற்று. கல்யாணி குறட்டை விட்டாள்.

மாதவன் கட்டிலிலிருந்து எழுந்திருந்தான். ஓசைப்படாமல் கதவைத்திறந்தான்.

இருமல்! இரண்டு கைகளாலும் அவன் வாயைப்பொத்திக்கொண்டான். கல்யாணி திரும்பிப் படுத்தாள். அவன் வெளியே சென்றான்.

இருமல்! வாயை மூடிக் கொண்டு அவன் வீதியை அடைந்தான். அதற்கு மேல் அவனால் இருமலை அடக்க முடியவில்லை. அவன் இருமினான்.

அவன் நடந்தான். அவன் தேகம் ஒடுங்கிற்று. அடிக்கடி இருமினான். ஜன நடமாட்டம் ஓய்ந்துவிட்டது. பரிபூரண அமைதி நிலவிற்று. இருமிக் கொண்டும், நடுங்கிக் கொண்டும் அவன் நடந்தான்.

* * *

புதுத் தம்பதிகளின் முதல் இரவு! காதலில் மலர்ந்த இரண்டு இருதயங்கள் இரண்டறக் கலந்தன.

நடு நிசியானதும் சித்திராதேவி அவர்கள் காதல் களியாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாள். மாடியிலுள்ள பள்ளி அறையில் அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு படுத்திருந்தனர்.

கமலத்தின் உணர்ச்சி நிறைந்த இருதயம் நடுங்கிற்று! அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அவள் இருளைப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. எந்தச் சத்தமும் கேட்கவில்லை.

இருமல் சத்தம்! அவள் உற்றுக் கேட்டாள். மீண்டும் இருமல்! தொடர்ந்து இருமல் சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் சமீபத்தில் கேட்டது.

வெண்ணெயில் ஒட்டிக் கொண்ட தாமரை இலையை எடுப்பதை போன்று, தன் நெஞ்சில் கிடந்த கணவனின் கையை மெதுவாக எடுத்து மெத்தை மேல் வைத்துவிட்டு அவள் மெல்ல எழுந்திருந்தாள்.

இருமல்! இருமல்! சத்தம் கேட்டது.

அவள் ஜன்னல் மூலம் பார்த்தாள். விளக்குக் கம்பத்திற்குக் கீழே ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவள் நெஞ்சு வேகமாக அடித்தது. ஒரு பூனை பதுங்கிப் பதுங்கி விளக்குக் கம்பத்தை அடைந்தது. அங்கே நின்ற உருவத்தைக்கண்டு அது பயந்தது. மெதுவாக அது பின்வாங்கிற்று. பிறகு திரும்பி ஓடிற்று.

இருமல்! இருமல்! அந்த உருவம்தான் இருமிற்று. இருமிக் கொண்டே அது நகர்ந்தது.

"மாமா!" என்று அவள் மெதுவாகச் சொன்னாள்.

கசாப்புக் கடையிலிருந்து திருடின எலும்புத் துண்டுடன் போர் புரிந்து தோல்வி அடைந்த நாய் மேலே பார்த்து ஊளை இட்டது.

இருமல்! இருமல்! அந்த இருமல் சத்தம் சந்தடியற்ற இரவில் சஞ்சரித்தது.

"மாமா! மாமா!" அவள் ஜன்னலின் இரும்புக் கம்பியைப் பிடித்துக்கொண்டு எட்டிப் பார்த்தாள்.

பஸ் ஸ்டாண்டுக்கு அருகிலிருந்த சுமைதாங்கியில் உட்கார்ந்துகொண்டு ஒரு பைத்தியக்காரன் ஏதோ முணுமுணுத்தான். அதற்கு அருகிலுள்ள சாக்கடையில்தான் அவள் பத்து வருடங்களுக்குமுன் அந்தி நேரத்தில் விழுந்தாள். அந்தச் சாக்கடையில் இருந்துதான் ரிக்ஷாக்காரனின் தழும்பு ஏறின கை அவளை வாரி எடுத்தது. அந்தச் சாக்கடையில் இருந்துதான் அவள் வாழ்க்கை ஆரம்பித்தது. அந்த அந்தி வேளையில்தான் அவள் பாக்கிய சூரியன் உதயமாயிற்று.

இன்று அவள் பெருமையின் சிகரத்தில், செல்வத்திற்கு மத்தியில் நிற்கிறாள். பத்து வருடங்களில் அவள் வாழ்க்கைப் பாலைவனத்திலிருந்து புறப்பட்டு, துன்பக் கடலைத் தாண்டி, வசந்த காலச் சோலையை அடைந்தாள். சோலைக்குப் பின்னே நீண்டு பரந்து கிடந்த துன்பக் கடலில் சீறி எழுந்த அலைகளின் எதிரொலி அவளுக்கு அப்பொழுது கேட்டது.

அந்த மகாசமுத்திரத்தின் பேரலைகளையும், அங்கே வீசின புயலையும் எதிர்த்து அவளைக் கரை சேர்த்த தோணி இதோ, உடைந்தும் சிதைந்தும், சாய்ந்தும் சரிந்தும், சுழலில் அகப்பட்டும் திக்குத் தெரியாமலும் அலைகிறது!

தேநீர்க் கடைகளைக் கடந்து இருமல், பாங்கியை அடைந்தது. அது மேலும் மேலும் முன்னே போகிறது.

"மாமா! ......என் மாமா!" அவள் ஜன்னல் கம்பியை முன்னுக்குத் தள்ளினாள். அந்த இரும்புக் கம்பி அவளுக்கு வழிவிடவில்லை! இருதயத்தின் துடிப்பு இரும்புக் கம்பிக்குக் கேட்குமா?

இருமல்! இருமல்! இருமல்! அமைதியைக் குலைத்துக்கொண்டு இருமல் தபால் ஆபீஸை அடைந்தது.

"என் மாமா! என் மாமா!" அவள் வேகமாக முன்னே பாய்ந்தாள்.

"டும்!" அவள் தலை இரும்புக் கம்பியில் மோதிற்று. அவள் பின்னே சாய்ந்தாள்.

இருமல்! இருமல்! இருமல்! அந்த இருமல் நித்யத்வத்தை அடைந்தது. அதன் எதிரொலி சூனியத்தில் கலந்தது!

(முற்றும்)

✲

ஐயா போன இடம்

ஒரு விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒரு சினிமா நடிகரின் மனைவி பக்கத்திலிருந்தவரிடம், "வெள்ளைவெளேர் என்று ஒரு குட்டி வந்தாளே, அவள் எங்கே?" என்று கேட்டாள்.

பக்கத்திலிருந்தவர், "எனக்குத் தெரியாது. ஏன் உங்களுக்கு என்ன வேண்டும்"? என்று கேட்டார்

அவளோ மிகவும் எரிச்சலுடன், "எனக்கு என் புருஷன் வேண்டும்" என்றாள்.

—ஜிம்மி பிலிப்

புத்தக உலகம்

திருவாசகம் (திருச்சதகம்): [உரை ஆசிரியர்: பண்டித மணி, மு. கதிரேசச் செட்டியார். கிடைக்குமிடம்: பொதிகைப் பதிப்பகம் லிமிடெட், 22 E அப்பாவு முதலித் தெரு, கடலூர் என். டி. விலை ரூபா 8.]

தமிழ் நாட்டில் எண்ணற்ற ஞானிகள் தோன்றி பக்தி ரசப் பாடல்களைப் பாடிச் சென்றபோதிலும், அவர்களில் கவித்துவம் பெற்றவர்கள் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரில் திருவாசகத்தை அருளிச் செய்த மாணிக்கவாசகரும் ஒருவர். உருக்கம், ஈடுபாடு, இதயப்பண்பு, கவிப்பண்பு முதலியன நிறைந்த பல கவிதைகளை மாணிக்கவாசகர் அருளியிருக்கிறார். அவற்றுள் நூறு கவிதைகள் அடங்கிய இத் திருச்சதகத்துக்கு பண்டிதமணி மிகவும் விரிவாக உரை எழுதியிருக்கிறாரென்றாலும் உரையின் போக்கு பழையசம்பிரதாயத்தை ஒட்டித்தான் இருக்கிறது. இன்று இலக்கிய அறிஞர்கள் கவிதையின் அல்லது சூத்திரத்தின் சிறப்பையோ உட்பொருளையோ ஆராயும் முறை வேறு. இந்த முறை அக்காலத்திலும் பரிமேலழகர், பேராசிரியர் முதலியவர்கள் உரையில் காணப்படுகிறது. அநேகமாகப் பிற உரையாசிரியர்கள் எல்லோரும் தங்கள் கை வரிசையைக் காட்டுவதற்காக மூல நூலாசிரியனைக் குரங்காட்டமாக ஆட்டிவைத்துவிட்டார்கள். இன்றையத் தலைமுறையில் வாழும் பண்டிதமணி, இன்று சிறப்பாக விளங்கிவரும் முறையிலும், நடையிலும் உரை செய்திருக்க வேண்டும் என்றே நமக்குத் தோன்றுகிறது. ஆனாலும் பண்டிதமணி, கூடிய மட்டிலும் புரியும் நடையிலும், விரிவான முறையிலும் உரை செய்து திருவாசகப் பாடல்களின் உட்கருத்துக்களை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார் என்பதை மறுக்க முடியாது. இலக்கிய அறிஞர்களுக்குப் பயன் தரக்கூடிய இந்நூல் அழகான அச்சமைப்புடன் வெளிவந்திருக்கிறது.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

குட்டிக் குறள்: [ஆசிரியர்: சுகவனம் - சிவப்பிரகாசனார். கிடைக்குமிடம்: ஜகதா & சன், 7/99 அம்மன் கோவில் தெரு, ஜி. டி. சென்னை 1. விலை ரூபா 1.]

இந்தக் குட்டிக் குறளில் ஒரு வரிச் சூத்திரமாக மொத்தம் நூறு சூத்திரங்கள் உள்ளன. ஸ்ரீ கி. வ. ஜகந்நாதன் நூறு சூத்திரங்களுக்கும் உரை எழுதியிருக்கிறார்; ஸ்ரீ இளவழகனார் ஒரே ஒரு வரி உள்ள கடவுள் வாழ்த்துச் சூத்திரத்துக்கு 74 பக்கங்களில் உரை எழுதியிருக்கிறார். நூலினுடைய எளிமையைப் பார்க்கும் போது உரையே தேவையில்லை என்றுகூடத் தோன்றுகிறது. அப்படியிருக்க ஒரு வரிக்கு 74 பக்கம் உரை எழுதுவது குருவி தலையில் பனங்காய் வைப்பது போல் இருக்கிறது.

ஆசியச் சுடர்: (நலைக்கர்தை): [ஆசிரியர்: மீ. உ. கான் முகம்மது, கிடைக்குமிடம்: மீ. உ. கான் முகம்மது, போடி நாயக்கனூர். விலை ரூபா 1.]

ஸர் எட்வின் ஆர்னால்டு எழுதிய 'ஆசியச் சுடர்' என்ற ஆங்கில நூலின் முதல் பகுதியின் மொழிபெயர்ப்பு. இனிய, எளிய தமிழில் பாக்களாகவே ஆசிரியர் மொழிபெயர்த்திருக்கிறார். ஆனால் 24 பக்கங்களுள்ள இப் புத்தகத்துக்கு ஒரு ரூபாய் விலை மிகவும் அதிகம்.

தாமரைக் குமரி: [ஆசிரியர்: மு. அண்ணாமலை. கிடைக்குமிடம்

கரும்பு பதிப்பகம், புதுக்கோட்டை. விலை ரூபா 1]

'இயற்கையிலே எழும் சுவையைத் தமிழில் பெய்து ஈவதற்கு நிற்கின்ற வள்ளல்!' என்று தம்மை அறிமுகம் செய்துகொள்ளும் ஆசிரியர் ஈயும் 'இயற்கையிலே எழும் சுவை' ஒன்றைப் பார்ப்போம்:

தாமரைக்கும் சூரியனுக்கும் காதல் சம்பந்தம் கொடுத்துப் பாடிப் பாடிப் புளிக்க வைத்த பலரையும் போல ஆசிரியரும் எழுதியிருக்கிறார். தாமரைக் கன்னி 'முகமன்றி வேறுருப்பைக் காட்டவில்லை, என்று மிகவும் குறைப்படுகிறான் சூரியன். ஆகவே தண்ணீரை தாமரையின் உடை என்று நினைத்து சூரியன் 'செப்பாமல் வேலைதனை செய்து விட்'டானாம். பிறகு, தண்ணீர் தாமரைக்குத் தாய் தந்தையரானால், 'சேலை எது?' என்ற கேள்வியையும் போடுகிறான் சூரியன். சேலையிருப்பதைக் கண்டு இவ்வளவு தூரம் கவலைப்பட்டுவிட்டு சூரியன், கடைசியில், பல உபதேசங்கள் செய்ய, தாமரையும் 'மிக வெதும்பி விழித்து' ஒன்றும் இயம்பாமலும் எழிலுடலைக் காட்டாமலும் இருந்து கொள்ளுகிறாளாம்; காதலோடு வாழ்கிறாளாம்.

இதுதான் ஒரு பானை சோற்றுக்கு பதம் பார்க்க எடுத்த ஒரு சோறு. மேற்கண்ட கற்பனைக்கு அர்த்தம் உண்டா, அழகு உண்டா? குறைந்த பட்சம் அருவருப்பு இல்லாமலாவது இருக்கிறதா? பாடல்களில் ஆழ்ந்த கருத்தோ, சொல்லழகோ, இனிமையோ கொஞ்சம்கூட இல்லை. தமிழ் நாட்டில் ஏற்கெனவே கவிதைகள் என்ற பெயருடன் பெரிய குப்பை சேர்ந்துவிட்டது. ஆகவே இந்தத் தலைமுறையினர், கவிதைகளைத்தான் சிருஷ்டிக்க வேண்டும்; இந்த மாதிரிக் கவியம்சம் இல்லாத யாப்புருவங்களை எழுதிக் குவிப்பதில் பிரயோஜனமில்லை.

ஆண்மை: ஆசிரியர்: [புதுமைப் பித்தன். கிடைக்குமிடம்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை 4 விலை ரூபா 1]

உலக இலக்கியத்தின் தலை சிறந்த சிறு கதைகளுக்கு ஒப்பாக தமிழில் கதைகளைச் சிருஷ்டித்தவர் புதுமைப் பித்தன். இந்தத் தொகுதியில் 'ஆண்மை' முதலிய 8 கதைகள் உள்ளன. இவற்றில் நான்கு அவருடைய முந்திய கதைத் தொகுதிகளில் வெளிவந்தவை. கதைகளில் உள்ள துடிதுடிப்பு, இயல்பான ஹாஸ்யம், ஆழ்ந்த கருத்துக்கள், சூழ்நிலையை இரண்டொரு சொற்களிலேயே கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் ஆசிரியருடைய திறன்—எல்லாம் நம்மைக் கவருகின்றன. உயர்ந்த புத்தகம். ஆசிரியரின் முகவுரை பிரமாதமாக இருக்கிறது. ஆனால் புத்தகத்தில் எழுத்துப் பிழைகள் நிறைய இருக்கின்றன.

—கு. அ.

ஜீவாவின் சிறு கதைகள்: [ஆசிரியர்: நாரணதுரைக்கண்ணன். கிடைக்குமிடம்: ஸ்டார் பிரசுரம், 71, பெரிய தெரு, சென்னை—5 விலை ரூபா 3.]

உலக இலக்கியங்களோடு ஒப்பிடத் தக்க முறையில், தற்காலத் தமிழ் இலக்கியத்தில் சிறு கதை ஒன்று மட்டுமே தலை தூக்கி விளங்குகிறது. அப்படி விளங்கிவரும் வேளையிலே, எவ்விதத்திலும் ஆசிரியரோ தமிழ் நாடோ பெருமைப்பட முடியாதவாறு இந்தக் கதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது. ஆசிரியர் தமது நூலின் தந்துரையில் தமது கதைகள் மேல் நாட்டிலக்கியங்களோடு ஒப்பிடத் தக்கவை யென்றும், தமிழ்ச் சிறு கதை வளர்ச்சிக்கு தமது கதைகளே சரியான அளவுகோல் என்றும் நேரடியாகத் தற்பெருமை பாராட்டாவிட்டாலும், பொங்கிப் பொதிந்து 'முதல் அத்தியாயம்' வாசிக்கிறார். இந்த நூலுக்கு 'தமிழ் நாட்டின் சிறந்த விமர்சகர்' என்று நூலாசிரியர் கருதும் திரு. ரா. ஸ்ரீ. தேசிகன் முன்னுரை எழுதி யிருக்கிறார். முன்னுரையை உற்றுக் கவனித்தால், "இத்தகைய உண்மையை நன்கு அறிந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படும் திருவாளர்

நாரண துரைக்கண்ணனார்'' என்றும், "தாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு உருக் கொடுக்கும் அம்சங்களைத் திரட்ட முயன்றிருக்கிறார்'' என்றும், "இவர் கதைகள் வாழ்க்கையின் சில மூலைகளைத் தொடுகின்றன என்பதில் சந்தேகமில்லை'' என்றும், இருக்கின்ற. 18 கதைகளில், "'மேனகை,' 'புதுமைப் பெண்' ஆகிய இரு கதைகளும் நம் மனதைப் பெரிதும் கவர்கின்றன'' என்றும் பாலுக்கும் காவலாய் பூனைக்கும் தோழனா யிருந்து, மதில்மேல் பூனை விவகாரம் பண்ணுகிறார். இப்படி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவானேன்? இப்படி எழுதுவதைவிட, முன்னுரையே எழுதாம லிருந்து விடுவதல்லவா விமர்சகர்களின் நேர்மை?

இந்த நூலிலுள்ள பதினெட்டு கதைகளுமே உப்புச் சப்பின்றி, சாரமற்றிருக்கின்றன என்பது நம் அபிப்பிராயம். தன்னைக் கற்பழிக்க முயலும் சந்நியாசியிடம் கடவுள் ஒருவன் இருக்கிறான் என்ற விஷயத்தைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், சந்நியாசியையே ஊரைவிட்டுக் கிளப்பி விடுவதாகவும், பெற்றோரின் மனச் சம்மதமில்லாத காரணத்தால், ஒரு பெண் ரிஜிஸ்டர் கலியாணம் பண்ணிக் கொள்வதாகவும் எழுதிவிட்டால் மட்டும் கதை உருவாகிவிடாது. கதை என்றால் ஏதேனும் கருத்து இருக்க வேண்டும்; அல்லது உருவமேனும் இருக்க வேண்டும். இந்த நூலில் இந்த அம்சங்களில் எதுவும் இல்லை. மேலும் பக்கத்தை நிரப்புவதற்காக ஆசிரியர் வளர்த்துச் செல்லும் விறுவிறுப்பற்ற 'ஆரணிப்பாதை' நடை வாசகனின் பொறுமையைச் சோதிப்பதோடு புத்தகத்தை மூடும் விரக்தி நிலைக்கு இழுத்துச் செல்கிறது. மேலும் இடையிடையே ஆசிரியர் 'நாசக் கதையை நடுவே நிறுத்தி விட்டு', பெண்மையைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் குட்டி லெக்சர் அடிப்பது, சிறு கதையின் லக்ஷணங்களைப் பற்றிய ஆசிரியரின் ஞான சூன்யத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. புத்தகத்தின் 10-வது கதையான 'முல்லை,' "முல்லைப் பாட்'' டின் (பத்துப் பாட்டிலுள்ளது) நேரடி கொண்டு கூட்டு இல்லையென்றாலும், அதன் சாரமாகவே விளங்குகிறது. இதை ஆசிரியர் எந்த விதத்திலும் குறிப்பிடவில்லை. இந்த நிலையில் ஆசிரியர் தமது கதைகள் மேல் நாட்டிலக்கியம்போல் சிறந்து விளங்குகின்றன என்று சொல்லாமல் சொல்லுகிறார். மேல் நாடு இருக்கட்டும். தமிழ் நாட்டு இலக்கியத்திலேனும், இந்நூல் இடம்பெறத் தகுதியுடையதா என்பது ஆசிரியர் யோசித்து முடிவுக்கு வரவேண்டிய விஷயம்.

குறிப்பு: விஷயத் தெளிவிற்காகவே சில இடங்களில் கொட்டை எழுத்து பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. —தொ. மு. சி.

✲

அழகின் ரகசியம்

'ஜான்புல்' என்னும் பத்திரிகைக்கு ஸ்காத்லாந்து வாசியான ஜே.ஏ. பைரீ என்பவர் பின் வருமாறு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறார்:

ஒரு செய்திப் பத்திரிகையில், "ஸ்காத்லாந்திலே வீசும் காற்றில் ஏதோ அழகு கொடுக்கும் ஒன்று கலந்திருக்கிறது. அதனால் ஸ்காத்லாந்துப் பெண்களின் மேனி சோபை பெற்று வருகிறது'' என்று எழுதப்பட்டிருந்தது. அதே பத்திரிகையில் வேறொரு இடத்தில் சாராயம் காய்ச்சுகிற ஒருவர், "சாராயம் காய்ச்சும் போது வருஷத்துக்கு முப்பது லட்சம் காலன் கழிவுச் சாராயம் ஆவியாகப் போய்க் காற்றில் கலந்து விடுகிறது'' என்று எழுதியிருந்தார்.

பெண்களே! இப்போது தெரிந்து கொண்டீர்களா, காற்றிலே கலந்து அழகு தரும் அந்த வஸ்துவை?

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.

சாதாரண ஆம்லெட் தான்—

ஆனாலும் அதை டால்டாவில் பொரித்தால் தனிருசியே!

முட்டையின் வெள்ளைக்கருவை தனியாக எடுத்து கெட்டியாவதுவரை கடையவும். பிறகு மஞ்சள் கருவைப்போட்டு ஐந்து நிமிஷங்கள் கடையவும். நறுக்கின வெங்காயம், உடைத்த பயறு அல்லது அரிந்த தக்காளிப் பழம், ருசிக்குத் தகுந்தபடி உப்பு, மிளகு, இவைகளைச்சேர்த்துக்கொள்ளவும். பரந்த வாணலியில் பொரிக்குமளவு டால்டாவை சூடாக்கி அதில் கலந்துவைத்திருப்பதை ஊற்றவும். கீழ்பக்கம் இலேசாக சிவக்கும்வரை பொரித்து; இரண்டாக மடித்து, மறுபக்கம் திருப்பவும். இந்தப்பக்கமும் சிவந்ததும் சூடாக பரிமாறவும். ரொம்ப ருசியாயிருக்கும்.

ரேஷனில் கிடைக்கும் தானியங்களை அதிக நாட்கள் நீடித்திருக்கச் செய்வதெப்படி?

இலவசமான ஆலோசனைகளுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 76A-50 TM

பார்லிக் கஞ்சி தயாரிக்க சுலபமான முறை

இரண்டு டீஸ்பூன் பார்லியை சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்து. பின் இரண்டு டம்ளர் ஜலத்தில் போட்டு ஐந்து நிமிஷம் நன்றாகக் கொதிக்கவைக்கவும். பின்னர் இறக்கி ருசிக்கு வேண்டிய உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப் பருகவும். இவ்வளவு சுலபத்தில், ஐந்தே நிமிஷத்தில், ஓர் ருசியான சிறந்த பானத்தைத்தயாரிக்கலாம். வியாதியுற்றோ குணப்படும் தருவாயிலோஉள்ள பலஹீனருக்கு இது சிறந்த உணவு. *பியூரிடி பார்லி* புஷ்டியான தானியங்களின்றும் தயாரித்து காற்று புகாமல் தகரடப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பங்கு பியூரிடி பார்லி எட்டு பங்கு அரிசி பார்லிக்கு ஈடாகும். இதனால் எவ்வளவு நேரம், சிரமம் மிச்சமாவது என்று நினைத்துப்பாருங்கள்.

பியூரிடி
இந்தியன் பார்லி

APEX LTD

தமிழிலே அரிய நூல்

உலோகங்களும் நாமும்

இரும்பு, தங்கம், வெள்ளி
முதலிய உலோகங்கள்
பற்றிய அருமையான நூல்.

மு. அருணாசலம் எழுதியது.

ரூ. ஐந்து

(தபால் செலவு தனி)

சக்தி காரியாலயம் சென்னை-14

உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டு மானல் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம், விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர்.

★

சக்தி பிரஸ் லிமிட்டெட்

115-E மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

டெலிபோன் : 8135

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	**நம்பர் 80 வரை நூல்கள்**

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

ஏ. & எப். ஹார்வி லிமிடெட

மானேஜர்கள்

புத்தகங்கள்

கோத்தமங்கலம் சுப்பு பாடிய

காந்தி மகான் கதை

ரூ. ஐந்து (தபால் செலவு தனி)

விராக தத்தர் எழுதிய

முத்ரா ராக்ஷஸம்

ரூ. ஒன்றரை (தபால் செலவு தனி)

ஜே. ஸி. குமரப்பா எழுதிய

ஏசுநாதர் போதனை

ரூ. ஒன்றரை (தபால் செலவு தனி)

மு. அருணாசலம் எழுதிய

உலோகங்களும் நாமும்

ரூ. ஐந்து (தபால் செலவு தனி)

சக்தி வெளியீடு